ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர்: ஈ. வெ. இராமசாமி

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ வைகாசி௴ 18௳ (31—5—1931) | மலர் 5

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காவரோகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

சுத்தகதர்! உயர்ந்தகதர்!! நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள் கிரயம் முழுமையும் அனுப்பினால் கவனிக்கப்படும்.

நா. மு. & ஈ. ரா. வே. & Co.,
கதர் ஸ்டோர்,
சென்னிமலை ஈங்கூர் (S. I. Rv.)

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது ஒரு முறை பரீட்சியுங்கள்.

புட்டி 1க்கு ரூ. 1—0—0
டஜன் 1க்கு ரூ. 10—0—0

ஏஜண்டுகள் தேவை

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து;
செய்சாலை பழனி S.I.

சுதேசி உடைகளை அபிமானியுங்கள்.

கோடைகாலத்திற்கு ஆரோக்கியமானது. இந்தியர்களுக்கென்றே ஸ்பெஷலாய் தயார் செய்யப்பட்டது.

வெள்ளைகாஷ்மீர் பட்டில் தயார்செய்த சன்னக்கம்பிக்கரை பட்டு வேஷ்டிகள் 8 முழ நீளம் 52" அகலம் விலை ரூ. 12—0—0

பனாரஸ் ஸில்க்

பழுப்பு (மங்கின) வெள்ளை ஷர்டிங் தான் 7 கெஜ நீளம் 52" அகலம் ரூ. 15-முதல் 18-வரை.

ஷை காக்கிகலரில் ஷை அளவுள்ளது. ரூ. 15-முதல் 18-வரை.

ஷை கோட்டிங் மிகவும் நேர்த்தியானது 7 கெஜ நீளம் 52" அகலம் ரூ. 15-முதல் 18-வரை:

பனாரஸ் உயர்ந்த பட்டுப் புடவைகள்.

எங்கள் புடவை! வீட்டுப்பொக்கிஷம்!!

உடல் சாதா, பட்டுசேலை கரை, முகதலை தங்கசரிகைகளினால் பூவேலைகள் செய்யப்பட்டதும், மேகவர்ணம் ஆரஞ்சு, சிவப்பு, ரோஸ், கத்தரிப்பூ, மயில்கண் மற்றும் விருப்பமுள்ள பல கலர்கள் கிடைக்கும். பார்வைக்கு மிகவும் நேர்த்தியானது. இந்த சேலை எல்லா ஜாதியினருக்கும் தற்கால நாகரீகத்துக்கும் ஏற்றது.

12 முழம் x 44" அகலம் புடவை 1க்கு ரூ: 20 to ரூ. 35
16 முழம் x 44" ,, ,, ,, 30 to ரூ. 50
18 முழம் x 44" ,, ,, ,, 35 to ரூ. 60

உடல்புட்டா சேலை (பூக்கள் போட்டது) ஜங்ளா சேலை (உடல் முழுதும் சரிகையினால் பூ கொடி செடி வேலைப்பாடுள்ளது) தார்பானு சேலை (பாவுபட்டினாலும் உண்டை சரிகையினாலும், உடல் முழுவதும் பூ கொடி செடி வேலைப்பாடுள்ளது) ஷை தினுசுகளில் ஜாக்கெட்டுகளும் கிடைக்கும். மற்றும் பட்டுலுங்கிகள் சாதா தினுசுகளும், புட்டா போட்டதும் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. RAJARAM & Co.,
Silk Merchants
38-203 Ramapura
BENARES CITY.

தய்வு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவறாதீர்கள்!! முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்டு போர்டுகளுக்கும் இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் வருஷ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

முந்துங்கள்! தபால் படிப்பின் அற்புதம்! முந்துங்கள்!!

1000 மாணவர்கள்

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம். தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல்மெட்ரிகுலேஷன் கோர்ஸை சொற்பசெலவில் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ்சீனியர், பாஸ் செய்தபின காலேஜில் சேரலாம். அல்லது உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர், ஹையர்கிரேட் உபாத்திமார்கள், குமஸ்தாக்கள் ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. பிராஸ்பெக்டசுக்கு உடனே இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆறுமுகநேரி, S. I. R.

"GENUINE KHADDAR"

சுத்தமான கதர்.

அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

எங்களிடம் கதரில் எல்லாத் தினுசுகளும் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும். அட்வான்சுடன் ஆர்டரை அனுப்பவும்.

விலாசம்:—
எம். சென்னியப்ப முதலியார்,
கதர் ஸ்டோர், திருப்பூர், S.I.R.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?
இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

சனாதன தர்ம மகாநாடு.

(கைவல்யம்.)

தஞ்சை ஜில்லா பிராமண சனாதனதர்ம சம்ரட்சணசபை ஆதரவில் பார்ப்பனர்களால் ஒரு வைதீகமகாநாடு நடைபெற்றது. மடாதிபதிகளின் பிரதிநிதிகள் வித்வான்கள், சாஸ்திரிகள், லௌகீகப்பிரமுகர்கள் ஆகியவர்கள் வந்தார்களென்றும் அந்தசபை அக்ராசனர் செய்த பிரசங்கச் சுருக்கத்தையும், தீர்மானங்களையும் சுதேசமித்திரன் எழுதியிருக்கிறது. அந்தப் பிரசங்கத்தையும், தீர்மானங்களையும் நாம் ஆலோசித்துப் பார்ப்போம்.

இதை வைதீகர்களும், சாஸ்திரிகளும் படித்து நியாயம் தெரிந்து கொள்ளுவதற்காக எழுதுவதல்ல. நீங்கள் ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்பதே என் கருத்தாகும். ஏனெனில் சனங்களுக்கு உண்மை விளங்குகிறவரையிலும் வைதீகர்களுடைய எண்ணங்களும், சாஸ்திரங்களும் சமர்த்தியங்களும் பிரசாரக்கவனியாது தங்கள் ஜாதியின் ஆதிக்கத்திலேயே போய்க்கொண்டிருக்கும் வைதீகர்கள் நாம் எழுதுவதைப் படிக்கமாட்டார்கள். படிக்க நேர்ந்தாலும் நினைத்துப்பார்க்கமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தமிழ் என்றாலே அலட்சியம். அதிலும் குடி அரசுப் பத்திரிகை வெறுப்பானது. அதிலும் சூத்திரரென்று அவர்களால் நினைக்கப்படுகிறவர்கள் சொல்வதைக் கேட்பது அவர்களுக்கு சாஸ்திர விரோதம். மகாத்மா காந்தி அவர்கள் வார்த்தையைப் போற்றுகிறார்களே யென்றால் அது விஷயம் வேறு. எல்லாரும் கீதையைப் படியுங்கள் என்று மகாத்மா காந்தி அவர்கள் சென்னையில் சொன்னதற்கு தஞ்சாவூர் ஜில்லாவில் வைதீகர்கள் கூட்டம்கூடி வேத சாஸ்திரத்தில் காந்திக்குப் போதுமான படிப்பில்லை, வடமொழியில் பாண்டியத்வமுமில்லை என்று சொன்னதைப் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். அவர்கள் ஏற்பாட்டுக்கும் எண்ணத்திற்கும் விரோதம் சொன்னால் அவனை இந்துவல்லவென்று பலவாறாகச் சொல்லுவார்கள். அவர்கள் செய்யும் அநீதிகளை யெடுத்துக் காட்டினால் அதனால் அவர்கள் ஆதிக்கம் குறைந்துவிடுமென்று பட்டால் நியாயத்தை ஒத்துக்கொள்ளுவதாகப் பாசாங்கு செய்து பழிக்கு இன்னொருவரைக்காட்டி அந்த நியாயத்தைக் கெடுக்க அல்லது மறைக்க பலவிஷயங்களைக் கொண்டுவந்து சமயோசிதம் போல் பேசுவார்கள். இதற்கெல்லாம் காரணம் நாமேதான்.

சிறிது நாளுக்கு முன் கூடின பிராமண சபையின் பேச்சிற்கும் இப்பொழுது கூடும் பார்ப்பனர்சபைப்பேச்சிற்கும் வித்தியாசமுண்டு. என்ன பேசினாலும் சுதேசமித்திரன் அதைப்பக்குவமாக எழுதிவிடும். யார் எப்படி இருந்தாலும் விஷயங்களின் உண்மைகளை நாம் ஆலோசித்துத் தெரிந்துகொள்ளுவது மேலல்லவா?

(1) அக்கிராசனர் பிரசங்கச் சுருக்கத்தைக் கவனிப்போம். மதத்தை இரட்சிக்கவும் அசாத்தியமானசட்டங்களினின்றும் விஷமத்தனமான ஆசாரச் சீர்திருத்தக் காரர்கள் பிரசாரத்தினின்றும் குடும்பங்களை சம்ரட்சிக்கவும் தக்கமுறைகளை கையாளுவதை ஆலோசிக்கவும் சனாதன தர்மமகாநாடு கூடினதாம்.

சமயம் பொது. சமயத்தைச் சேர்ந்த சுவாமியும் பொது, அந்த சுவாமியின் சகலமும் அந்தசமயத்தைச் சார்ந்தவர்கள் எல்லோருக்கும் சொந்தம் என்பதிலுள்ள பாத்திதையை ஏற்பாட்டோடு அதன் சமயத்தைச் சேர்ந்தவர்களை யெல்லாம்இரட்சிப்பதற்கு சபைகள் கூடி ஆலோசிப்பது விஷேடமேயாகும். சனாதன தரும நீதியை காக்கும்பொருட்டே பிராமணன் பிறந்திருக்கிறான் என்று சாஸ்திரங்கள் சொல்லியிருக்கும் கருத்துமதுவேயாகும். தன்னயத்தை யொழித்து ஞானமும் அன்பும் பெற்று அவற்றைப் பிறருக்கும் அளிக்க உழைப்பவனே பிராமணன். அவனைத்தான் பிராமணனென்று சாஸ்திரமும் சொல்லுகிறது. அப்படியில்லாமல் 70 வயதாகியும் வக்கீல்வேலையை விடாத பார்ப்பனரும் மாதம் 500, 600 சம்பளம் வாங்கி உபாத்தியாயர் வேலையில் தன் சாயை விட்டு அன்னிய சாயை கற்றுக்கொடுக்கும் பார்ப்பனரும் சபைத்தலைவராக விருந்துகொண்டு சில்லாவிலிருந்து அன்னக்கடை வரையிலும் உத்தியோகம் செய்யும் பார்ப்பனர்கள் போக, உபகார சம்பளம் பெறும் பார்ப்பனர்களும், கோவில் சோறும் சத்திரத்துச் சாப்பாடும், செட்டிநாட்டு தக்ஷணையும் எப்பொழுது மிருக்க நினைக்கும் பார்ப்பனரும் சேர்ந்து கொண்டு மற்றவர்களைத் தாழ்மைப் படுத்தவும், நீக்கவும் தங்களுக்கே சமயத்தில் மேன்மையும் ஆதிக்கமும் இருக்கவும் சமயத்தை இரட்சிப்பதாக சபைகள் கூட்டுவது சமயநியம விதிக்கு ஒவ்வாததாகும்.

பிறப்பினால் உயர்வு தாழ்வில்லை. வேதம்படித்து, படித்தபிரகாரம் ஒழுக்கம்வந்து ஒழுக்கத்தால், தவசடைந்து, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை வென்று பிராமணத்தன்மையடைந்த பார்ப்பனனே தானம் வாங்கத்தக்கவன். அவ்விதமில்லாத பார்ப்பனனுக்குத் தானம் கொடுப்பவனின் உயர்நிலையும் கெட்டு நரகத்திற்கும் போகிறான் என்கின்ற ஸ்மிருதி விதிகளை ஆசார சீர்திருத்தக்காரர்களால் சனசமூகம் தெரிந்து கொண்டால் பாடறியாமல் குடும்பத்தை இரட்சித்துக்கொண்டுவரும் மார்க்கம் போய்விடுமென்பதால்குடும்ப இரக்ஷணைக்கு வேறு மார்க்கம் கண்டுபிடிப்பதில் யாருக்கும் ஆக்ஷேபணையிருக்காது. சிறுவயதில் பெண்கள குழந்தைகளைப் பெற்று மெலிந்து நோயுற்று குழந்தைகளும் எலிக்குஞ்சுகளைப்போல் சிறு உருவமாய் தேகக்கட்டிலும் அளவிலும் குறைவடைந்து துன்பவாழ்க்கையில் கிடப்பதை நீக்குவதற்கு சட்டத்தைக்கொண்டுவந்த ஆசாரசீர்திருத்தக்காரர்கள் விஷமத்தனமுடையவர்களாக மாட்டார்கள். பெண்களுக்குப் பொட்டுகட்டாமலிருப்பதும் தக்கவயதில் ஆணும் பெண்ணும் விவாகம்செய்துகொள்ளுவதும் அசாத்தியமான சட்டங்களல்ல. இப்பொழுதுதான் நமக்குத்துணை ஆங்கிலேய சேனையிருக்கிறது. நாளைவரும் சுயராஜியத்தில் ஆங்கிலேயர்கள் விலகிவிட்டால் எல்லைப்புற வாசிகள, ரஷியர்கள், ஜப்பானியர்கள் இவர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள தேகவலிமையைக் காட்டுவதா? சனாதன தருமசபையின் தீர்மானத்தைக் காட்டுவதா? வடக்கேதான் பஞ்சாபிகள், மகமதியர்கள், சீக்கியர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்தாலும் இங்குவரும் தொல்லைக்கு எந்தக் கோட்டைக்குப் போவது? கப்பலேறிப்போய் மாடு பன்றியை மனம் போலத்தின்று ஆங்கிலேயருடைய நல்ல குணத்தைப் பழகாமல் கெட்டதைப்பழகி பார்ப்பனனுக்குவேதத்தில்விதித்தவைகளை யெல்லாம் தள்ளி விலக்கப்பட்டதை யெல்லாம் கைகொண்டு தங்கள் தொழிலையெல்லாம் விட்டு எல்லாத் தொழிலும் செய்து நானும் பிராமணன் என்று சொல்லி மற்ற சமூகங்களைத் தாழ்வாக நினைப்பது சனாதன தருமமா? அதைக்குற்றமென்பது விஷமத்தனமா?

(2) வேதமார்க்கத்தையும் சிஷ்டாசாரத்தையும் அனுசரிப்பவர்களும் வேதமனுநீதியென ஒப்புக்கொள்ளுகிறவர்களும் சனாதன இந்துக்களாவார்கள். இந்த நம்பிக்கையாருக்கிருந்தாலும் அவர் அனுஷ்டானத்தில் எவ்வித மிருப்பினும் உணர்ச்சியில் இந்துக்களெனக் கூறலாம்.

மேலேகண்ட கடைசி வாக்கியம் பிராமணச்சபைத் தலைவரின் தீர்மானமானால் உணர்ச்சியோடு அனுஷ்டானமில்லாமல் நம்பிக்கையோடு நடக்கை யில்லாத இந்துமதம் இல்லை என்றும் அது இருப்பதில் பிரயோஜனமில்லை என்றும் சுயமரியாதைத்தலைவர் சொல்லுவதில் குற்றமென்ன? பார்ப்பனர்கள் தங்களிஷ்டம் போல் தங்கள் நடக்கைக்குத் தகுந்த மாதிரி வேதத்திற்கு அபிப்பிராயம் கூறி மற்றவர்களைவேதமென்னும் பிரமைக்குள்ளாக்குவதற்கு சனாதனதருமமென்கிறபெயர் தானா. எந்த பார்ப்பனர்களையும் சேவுகாவிர்த்திக்கும் அன்னக்கடைக்கும் போக வேதமார்க்கம் சொல்லவில்லை. அக்காள் தங்கையை விவாகம் செய்துகொள்ளவும், அண்ணன் தம்பி பெண்சாதியிடம் பிள்ளைப்பெறவும், ஆடு மாட்டை அடித்துத்தின்னவும், வேதமார்க்கம் சொல்லுகிறது. எல்லா உலக போகங்களையும் தன்னிஞானத்திற்கே போய்விடுவென்றும் சொல்லியிருக்கிறது. வேதமார்க்கமென்பதுதான என்ன? சிஷ்டாச்சாரமோ வாயிலும் கையிலும் மலத்திலும்கூடவில்லையே. சிஷ்டாச்சாரத்தில் வாயிற்கு கை ஆகாரத்தைஎடுத்துக்கொடுக்கும். இப்பொழுது கைக்கு மத்தியில் கரண்டியல்லவோ வந்துவிட்டது. சிஷ்டாச்சாரம் ஊருக்கு வெளியில் மலத்தை விடுவதாகவிருந்தது. இப்பொழுது மலத்தைமடப்பள்ளிக்குப்பக்கத்து அறையில் போடவேண்டியதாய் விட்டது. வேத அத்தியனம் செய்கையில் சுரம் தவறிவிட்டால் பாவமென்றுநினைத்துக்கொண்டிருந்த சிஷ்டாச்சார நாக்கு கூட இங்கிலீஷ பதத்தை இடையில் போடாவிட்டால் தன்பெருமைபோய்விடுமென்று நினைத்துவிட்டது அதுபோலவேஇப்பொழுதுஎல்லாசிஷ்டாச்சாரமும் சிட்டரோடுமண்ணுக்குள் அடங்கி ஆங்கிலேயஆசாரம் ஆளை ஆட்டுகிறது. நதி, மலை, காடு முதலியவைகள் கூட தங்கள் சிஷ்டாச்சாரத்திலிருந்து விலகி ராஜாங்க ஆசாரத்திற்கு வந்துவிட்டது. ஆகவே சிஷ்டாச்சாரமோ இல்லாமலொழிந்தது. வேதமார்க்கமோ இல்லாமல் போய்விட்டது. அப்படி இருக்கையில் சிஷ்டாச்சாரத்தையும் வேதமார்க்கத்தையும் ஒப்புக்கொள்ளுகிறவர்கள் தான் சனாதன இந்துக்களாவார்கள் என்று பாப்பனர் சபை தீர்மானம் பண்ணினால் அந்த இந்துக்கள் கல்லறையிலிருக்கிறார்களா? கைலாசத்திலிருக்கிறார்களா? அதுவும் அல்லாமல் த்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் அத்வைதிகள் சைவ, வைணவ, சாக்த, சௌர, காணாபதர்கள் இன்னும் இந்துமதமெனப்பட்டதை சேர்ந்தவர்கள் இவர்களுக்கெல்லாம் வேதங்களே பிரமாணமென்கிறார்கள். ஆனால்இவர்களுடைய ஊண், உடை, நடை, ஆசாரம், ஒழுக்கம், வழிபாடு, கர்மம், எல்லாம்வேறுபட்டே இருக்கின்றன. எல்லா சிஷ்டா ஆசாரமும் ஆங்கிலேய ஆசானின் மேற்கோளையே நாடிச் சொல்லுகின்றன. இதில் யாரைப் பார்ப்பனர் சபை இந்துக்களென்று சொல்லுகிறது? இதெல்லாம் பார்ப்பனருக்குத்தெரியும். அதனாலேயே தான் வேதமார்க்கத்திலும் சிஷ்டாச்சாரத்திலும் அனுஷ்டானமில்லாவிட்டாலும், நம்பிக்கை யிருந்தபோது அவர்களே இந்துக்களென்கிறார்கள். அப்படி நம்பிக்கை இருந்துவிட்டால் பார்ப்பனன் பிராமணனாகவும்மற்றவர்கள் சூத்திரர்களாகவும் இருந்தேதீர வேண்டும். அப்பொழுது தன் மேன்மைக்கும் லாபத்திற்கும்குறைவில்லை. இதுதான்பார்ப்பனனின்சாமர்த்தியம்

தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க.

தீண்டப்படாதார் நிலைமை

ஹிந்துக்களென்று கூறிக்கொள்ளும் வரை விடுதலை கிடையாது.

நமக்கு உண்மையான சமத்துவம் வேண்டுமானால் இஸ்லாம் மதத்தில் அடைக்கலம் புகவேண்டும்.

(திருச்சி ப. சி. அபிமன்னன்)

இந்துக்களில் தீண்டப்படாதார் என நம்மை ஒரு வகுப்பாக பிரித்து இருக்கின்றனர். நம்மின் தொகை ஏழுகோடியாம். நம் ஏழுகோடி மக்களின் நிலைமை இந்தியாவில் எவ்வாறிருக்கின்றதென்பதை சிறிது கவனிப்போம். இயற்கையாக மனிதர்களுக்குள்ள உரிமைகளில் எதுவுமே நமக்கு கிடையாதெனக்கூறி மற்றைய இந்துக்கள் நம்மை மிருகத்திலும்மிக்கக்கேடான தாழ்ந்த நிலைமையில் ஆழ்த்திவைத்திருக்கின்றனர். எனினும் இவ்வாறு நம்மை ஆழ்த்தி வைத்திருக்கும் இந்துக்கள் நம்மை தங்களது இந்துமதத்தை சார்ந்தவர்களென்று சொல்லி பெருமை அடைந்துகொள்கிறார்கள். அதோடு நம்மிடம் நன்றாய் சரியான கூலியில்லாமல் வேலைவாங்கிக்கொள்ளுகின்றார்கள்—இதற்கு சரியான கூலியாக நம்மை மிருகத்திலும் தாழ்ந்த நிலைமையில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஆழ்த்தி வைத்திருக்கின்றார்கள். ஆகையால் கேவலமான இவ்வடிமைத்தனத்திலிருந்து விடுவித்து மற்றைய எம்மனிதர்களும் எவ்விஷயத்திலும் நாம் சமமானவர்களேயொழிய தாழ்ந்தவர்கள் அல்ல என்பதையும், மற்றைய மனிதர்கள் அடைந்திருக்கும் மேலான எப்பதவியையும் நாம் அடையலாம், நமக்கும் மற்றைய மனிதர்களைப்போலவே உரிமை உண்டு என்றும், எவ்விஷயத்திலும் எந்தவிதமான வித்தியாசமில்லாமல் நம்முடைய பொருள், கௌரவம், உயிர் முதலியவைகள் மற்றவர்களின் பொருள், கௌரவம், உயிர் முதலியவைகளைப் போலவே மதிக்கப்படத் தகுந்ததென்றும், இவ்வுலகிலுள்ள பொருள்களை உபயோகிக்க மற்றொருவருக்கு என்ன உரிமை உண்டோ அதே உரிமைநமக்கும் உண்டு என்றும், மனிதர்களுக்கு இயற்கையாகவுள்ள இவ்வுரிமைகளில் அரசனென்றோ, அடிமையென்றோ, ஆணென்றோ, பெண்ணென்றோ, பணக்காரனென்றோ, தாழ்ந்தவனென்றோ, உயர்ந்தவனென்றோ எவ்விதவித்தியாசமும் பாவிக்கமுடியாது என்றும், காட்டிக்கொள்ள வேண்டுமானால் தீண்டப்படாதாரென மிக்க தாழ்ந்த நிலைமையில் ஆழ்த்தப்பட்டு இழிநிலை பெற்றுத் தவித்துக்கொண்டிருக்கும் நம்மக்களே! அடியில்வரும் விஷயங்களை சிறிது கவனியுங்கள்.

நம்முடைய அடிமைத்தனத்திற்கு காரணம் நம்முடைய பிறப்பல்ல; நம் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் மதமும் நமது அறியாமையும், கவலையின்மையுமே காரணமாகும். நம்முடைய அடிமைத் தனத்தை நீக்கிகொள்ள தற்காலம் நம் இந்துமதப் பெரியார்கள் செய்யும் முயற்சிகள் எதுவும்நமக்குசிறிதும்பலனளிக்கக்கூடியவைகளல்ல. இந்து ஆலயங்களுக்குள் சென்றுவிட்டதினாலேயே நாம் விடுதலை அடைந்துவிடலாமென்று எண்ணிக்கொண்டு இருப்பதும் மிகத்தவறான எண்ணமேயாகும். அன்றியும் அது நம்மால் செய்யக்கூடியதுமல்ல. செய்யமுடிந்து அந்தக் கோவிலுக்குப் போய்விடுவதினாலும் அதனாலடையக்கூடிய பயனுமொன்றுமில்லை. அந்தக் கோவில்களில் இருப்பது என்ன? மனிதனால் செய்யப்பட்ட கல்லும் கட்டைகளும் மண்ணுருவமும் தானே. அவைகளை நாம் சிருஷ்டித்தோமேயன்றி நம்மை அவைகள் சிருஷ்டிக்கவில்லை. நம்முடைய குறைகளை அவைகள் நீக்க வல்லனவல்ல. ஆனால் நம் பணத்தையும் நேரத்தையும்தான் செலவழிக்கச்செய்கிறது. இப்படிப்பட்ட சாமிகள் எதனாலும் இதுவரையில் இயற்கையாக மற்ற மனிதர்களுக்கிருக்கும் சாமான்யமானதொரு உரிமைகள் கூட நமக்களிக்கப்படவில்லை. பன்றியிலும், பன்றிதின்னும் மலத்திலும் கேவலமான இத்தாழ்ந்த நிலைமையில் தான் நம்மை ஆழ்த்தி வைத்திருக்க வேண்டுமென்றும், இந்துமதமே கட்டளையிடுகின்றது. அக்கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் அதன் எல்லா கடவுள்களும் அடங்கி இருக்கின்றன. ஆகவே, இந்துமதத்தை நாம் பின்பற்றுவதாகக் கூறும் வரையில் அக்கடவுள்களை நம்பிக்கொண்டிருக்கும் வரையில் நம்முடைய இழிவான இந்நிலைமையிலிருந்து விடுதலையடைவதாம் என்ன முயற்சி செய்தபோதிலும் அது நமக்கு பயனளிக்காது. "இந்து" என்னும் பதத்தின் அருத்தமே எவரும் விரும்பத்தக்கதல்ல. இந்து என்னும் பதத்திற்கு அர்த்தம் என்ன தெரியுமா? இந்து என்றால் அருத்தம் திருடன், அயோக்கியன், அடிமை, எத்தன் என பலபாஷையும் ஆரியர்களின் சட்டதிட்டங்களும் கூறுகிறது. ஆகவே நாம் நம்மை இந்துக்களென்று கூறும் வரையில் நாம் விடுதலை அடையபோவதில்லை. அல்லது கிறிஸ்துவமதமேனும் நம்முடைய இவ்வடிமைத்தனத்திலிருந்து விடுவித்து விடுமா? கிறிஸ்துவமதத்தைத் தழுவியநம்மவர்களின் நிலைமைதான் என்ன? அவர்கள் இன்றைய தினம் மெய்யான சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைந்திருக்கின்றனரா? கிறிஸ்துவ பாதிரிகள் நம்மை இந்து அடிமையில் இருந்து கிறிஸ்துவ அடிமையாக்கத்தான் பார்க்கிறார்களேயொழியவேறில்லை. எனெனில் கிறிஸ்துவமத உடையார், ஐயர், பிள்ளை, நாயுடு, ஆதிதிராவிடன், சாம்பன், குடும்பன் முதலிய ஜாதியும் பட்டமும் இருந்து கோவிலிலும் அந்தப்படி நடைபெறுகின்றன. ஆகவே இவ்வடிமைத்தனத்திலிருந்து மெய்யாகவே நம்மைவிடுவித்து மானிடவர்க்கத்திற்குரிய சகல உரிமைகளுடன் கூடிய மெய்யான சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நமக்கு அளித்துநம்மை சகோதரர்போல இன்றையநிலையில் நாம் போய் அடைக்கலம் புகத்தக்கது மகமதிய மதமேயாகும். உதாரணம் என்னவென்றால் திரு. காந்தி கூட மகமதியருடன்தான் ராஜிபேசுகின்றாரேயொழிய நம்மிடமாவது கிறிஸ்துவரிடமாவது ராஜி பேசுகின்றாரா?

இவ்வுலகத்தில் பற்பல தேசங்களில் பற்பல பாஷைகள் பேசி வாழ்ந்துவரும் ஐம்பதுகோடி மகம்தியர்களில் தீண்டப்படாதாரென யாதொருவகுப்போ, நபரோ இருக்கின்றனரா? ஆகவே, தீண்டப்படாதார் என்னும் நாம் நம்முடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடையக் கருதி எந்த நேரத்தில் இஸ்லாத்தைத்தழுவி மகமதியராகின்றோமோ அதே நேரத்தில் தான் நாம் நம்முடைய அடிமைத்தனத்திலிருந்தும்தீண்டக்கூடாத இழிவானஜாதியார்என்ற பெயரிலிருந்து விடுபட்டு மனிதர்களாவோம்.

நம்நாடு முன்னேற்றமடைவது எப்படி?

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை
பி. ஏ, எல். டி.

ஆண்டுதோறும் காங்கிரசும், கான்பரென்சுகளும் கணக்கில்லாமல் நிகழ்கின்றன. சூரத்தில் நிகழ்ந்த காங்கிரசில் குறையடித்துச் செருப்புகள் சுழன்று பறந்து விழுந்தபின் அக்கூட்டத்தின் மதிப்புக்குறைந்தது. அது உன்னத பதவிகளைப்பெறுவதற்கு உழைக்கும் வாயாடிகள் கூட்டமாயிற்று. அதில் மிதமிழந்து அமிதம் பெருகிற்று. எவராலும் வெறுக்கத்தக்கதாயிற்று. அதன் தீர்மானங்கள் பலராலும் அங்கீகரிக்கப்படாதனவாயின. பார்ப்பனரல்லாதார் பல வகுப்பினரும் தங்கள் தங்கள் குறைபாடுகளை எடுத்துக்கூறி முன்னேற்றமடையக்கூடிவருகின்றனர். இவற்றால் நன்மையுண்டாய் வருகின்றது. இவையல்லாமல் மாகாணக்கூட்டங்களும், ஜில்லாக்கூட்டங்களும் நடந்துவருவதில் புதியனகாண்பது அரிதாயிருக்கின்றது. இவைகள் கூற்றுகளாக மதிக்கப்படுவதேயன்றி மக்கள் உணர்ச்சியினின்றெழுங்குறைக் குறிப்புகளாகத்தோன்றவில்லை. யாதுகாரணம் பற்றியாயினும் நம்நாடெங்கும் கிளர்ச்சியுண்டாயிருக்கின்றது. வேலை நிறுத்தத்தால் வேலையாட்களுக்கு ஒரு சிகைச்சோறு அதிகப்படினும் கம்பெனிக்குக் கனத்த இலாபமும் சமூகத்திற்கு மிகுந்த பணக்கேடுமுண்டாகின்றன. உப்புவரி முதலான பலவகைச் சத்தியாக்கிரகத்தால் இராணுவச்செலவு அதிகரித்துப் பலர் துன்பமுற்றனரேயன்றி அதனால் ஞாலத்திற்குச்சிறிதும் பயனில்லை. இந்நாட்டில் முன்காலத்தில் வீடுதோறும் பெண்பிள்ளைகள் பஞ்சை வாங்கிக் கொட்டை கண்டு திரித்து நூலாக்கி விற்று ஊதியம் பெற்று வந்ததைத்தடுத்தாரெவருமிலர். யந்திரங்களின் மூலம் இராட்டைகள் பறந்தன. இவற்றைப் பட்டதாரிகள் மீண்டும் கைகொள்ளுமாறு செய்யும் பிரசங்கங்களாற் பயனென்? சீமைத்துணிவிற்பனையை மறியல் செய்வதால் வாணிபம் குறையுமேதவிர கதரைவாங்குவோர் பெருகமாட்டார் ஏனெனில் ஏழை எளிய மக்கள் மிகுந்துள்ளதேயத்தில் நயமான துணியை நயமான விலை கொடுத்து வாங்கத்தான் கூடும். அன்றிச் சரடு முரடான துணிக்கு அதிக விலை கொடுத்து வாங்க வியலாது வாணிபர் ஊதியம் பாமரமக்களின் பாடுபட்டுத்தேடும் பணமே. இவைவுண்மையானால் முன்னேற்றமடைவதெங்ஙனம்? சிற்சில வழிகளில் அதனைப்பெறலாம்.

1. இந்நாட்டில் விளையும்பொருள்களை அயல்நாட்டார் வாங்க விடங்கொடாமல் இந்நாட்டின் கணுள்ள தனிகர் பலர் வாங்கிச் சில்லறையாக இந்நாட்டினர்க்கே விற்றலால் நாட்டின் பொருள் நாட்டிலே தங்கும். நாடெங்குஞ்செழிக்கும். குயவன் புறமடையடைத்தாற்போன்றது, அன்னிய நாட்டுத்துணி விற்பனையைத்தடுப்பது. ஆணிவேரை வெட்டினால் அடியோடே மாஞ்சாயும். வடவிந்தியாவிலுள்ள கோடீஸ்வரப் பிரபுக்களும் பாரசீகப்பெருவியாபாரிகளும் இதனைக்கைகொள்வது நலமாகும்.

2 நமக்கு யந்திரங்களை யாக்கும் வன்மையும் வசதியும் வரும்வரை யந்திரங்களை வருத்தி நம் நாட்டுப்பஞ்சை நூற்று ஆடையாக்குவது நம் தொழில் மக்களுக்கு இலாபங்கிடைப்பதுமன்றி முயற்சிக்கும் முதலாளிகளுக்கு மூதியமுண்டு. இவ்வாறு செய்வதனால் சீமைச்சரக்கிற்கும் நாட்டுச்சரக்கிற்கும் போட்டிவரினும் வெற்றி நாளடைவில் நமதேயாகும்.

(தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க)

தெய்வீகத்தால் பயன் என்ன?

(சாமி சிதம்பரனார்.)

அபூர்வமான செய்கையைத் தெய்வீகம் என்று சொல்லுவது உலக இயல்பு. ஒவ்வொரு அபூர்வமான செயல்களையும் மனிதன் செய்கின்றான். ஒரு காலத்தில், மனிதனால் முடியக்கூடிய காரியம் அல்ல என்று சொல்லிக்கொண்டிருந்தவைகளெல்லாம் இப்பொழுது மக்களால் செய்யப்படுகின்றன. உதாரணமாகச் சில விஷயங்களைப்பாருங்கள்!

வருணாச்சிரம தருமம் என்பது கடவுள் என்பவரால் உண்டாக்கப்பட்ட தெய்வீகமானது என்பது பார்ப்பனர்களின் கொள்கை. ஆனால் இப்பொழுது அவை எங்கேயிருக்கின்றன? வருணாச்சிரம தருமத்தின் உச்சியில் இருந்துகொண்டு அரசுபுரிந்த பிரமகுலம் அதாவது பார்ப்பனச்சாதியே தான் முதலில் தமது "தெய்வீகத்தை" விட்டது. அவர்களுக்குத் "தெய்வத் திருவால்" ஏற்படுத்தப்பட்ட தொழில்கள் 'ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்" என்னும் ஆறுவகையானவை. இப்பொழுது எல்லாப்பார்ப்பனர்களும் தெய்வீகத்தில் ஈடுபட்டு வேதத்தை ஓதிக்கொண்டிருக்கிறார்களா? இல்லையே! அதை ஓதிக்கொண்டிருந்தால் பிழைப்பிற்கு வழியில்லையென்பதை உணர்ந்துகொண்டு ஆங்கில நூல்களைத் தானே ஓதிக்கொண்டிருக்கிறார்கள்?

அடுத்தபடியாக ஓதுவித்தல் என்னும் தொழில் அவர்களிடம் எங்கே இருக்கிறது? வேதங்களை ஓதுவிப்பதற்குப்பதிலாக, பி, ஏ, எம், ஏ முதலிய பட்டங்களைப் பெற்று ஆங்கில கலாசாலைகளில் உபாத்தியாயர்களாக அமர்ந்து அந்நிய பாஷையைத்தானே ஓதிக்கொடுக்கிறார்கள்? வேட்டல் ஆகிய யாகஞ் செய்கின்ற தொழிலும் நடைபெறுவதில்லை. வேட்பித்தலாகிய யாகஞ் செய்து வைக்கின்ற தொழிலையும் செய்வாரில்லை.

அடுத்தபடியாக ஈதல் தொழிலை இன்றும் அன்றும் அவர்கள் செய்வதும் செய்ததும் இல்லை. ஒருவேளை விருந்துக்கு இடைவேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு 'வயிற்றைக் காலிசெய்துகொண்டு ஒன்பது மைல் தூரம் ஓடுகின்ற இவர்களா பிறருக்குக்கொடுக்ககூடியவர்களாயிருப்பார்கள்? அடுத்தபடியாக ஏற்றல் தொழில்; இதுவும் இப்பொழுது மறைந்து விட்டது. ஒருவனைச்சும்மா உட்காரவைத்துக்கொண்டு சோறுபோடுகின்ற காலம் மலையேறிவிட்டது. வேலைசெய்கின்றவனுக்குத்தான் கூலி என்ற காலம் வந்து விட்டது. ஆகையால் ஏற்றல் தொழிலும் மறைகின்றது. ஆகவே இவைகளைச் சிந்திக்கும்போது வருணாச்சிரம தரும அமைப்பின் தெய்வீகம் மானுஷீகத்தினால் மறைந்துபோனதை உணரலாம்.

அடுத்தபடியாகக் கடவுள்களுடைய தெய்வீகங்கள் எப்படி மானுஷீகத்தால் மாண்டு மடிகின்றன என்பதைப் பாருங்கள். நமது நாட்டில் தெய்வீகம் பெற்று விளங்கிய கோயில்களில் எண்ணற்றன இடிந்துபோயின. பகைவர்களால் இடிக்கப்பட்டு அழிந்தன. இப்பொழுதும் சாமிகளுக்கு வரும் ஆபத்துக்களையும் அந்தசாமிகளுக்கு உதவி செய்கின்ற ஆள்களுக்கு வரும் ஆபத்துக்களையும் பாருங்கள். சோழமன்னர்கள் கட்டிய கோயில்கள் அளவற்றவை யென்பதும், தஞ்சையிலிருந்த மராட்டிய மன்னர்கள கட்டிய தருமச்சத்திரங்கள் எண்ணற்றன வென்பதும், இப்பொழுது அவர்கள் இருந்தவிடம் தெரியவில்லை யென்பதும் சரித்திர உண்மையாயிருந்தாலும் பழங்கதைகளென்று தள்ளிவிடுவோம்.

நேற்று நம் கண் முன் நடந்த தெய்வீகத்தைப் பாருங்கள். திரு. தீ. நா. முத்தையா செட்டியார் என்பவர் சமீபத்தில் சிறந்த பணக்காரராகவும் தருமஸ்தராகவும் இருந்த ஒரு நாட்டுக்கோட்டை நகரவரென்பதை இதற்கு முன் நீங்கள் அறியாவிட்டாலும் இப்பொழுதுதெரிந்துகொள்ளுங்கள். இவர் திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் என்னும் பெரியாரால் மிகவும் மதிக்கப்பற்றவர் இக்காலத்தில் உள்ளமடாதிபதிகளில் நல்ல கல்வியும், உண்மை யொழுக்கமும் உள்ளவர்களில் இவர் தலைசிறந்தவர் என்பதைத் தமிழுலகம் அறியும்.

அடுத்தபடியாக உலககுருவென்று பார்ப்பனர்களால் போற்றப்படுகின்ற சங்கராச்சாரியா அருடையவும்நன்மதிப்பைப்பெற்றவர். வருக்காக ஏராளமான பொருளைப் பறிகொடுத்தவர். இதனால் சங்கராச்சாரியாரால் 'தரும பூஷண" என்னும் பட்டம் பெற்றவர்.

அன்றியும், திருப்பாதிரிப்புலியூரில் உள்ள தெய்வீகம் பொருந்திய கோயிலுக்காக எண்ணற்ற பொருளைச் செலவிட்டவர். வெள்ளி ரதம் முதலிய பல வகையான காணிக்கைகளை யெல்லாம் அக்கடவுளுக்குக் கொடுத்தவர். அன்றியும் இராமலிங்கசாமி அருட்பா என்னும் புத்தகத்தை ஆயிரக்கணக்கான செலவில் அச்சிட்டு இனாமாக வழங்கியவர். இன்னும் இவர் செய்த தெய்வீகத்தருமங்கள் அளவற்றவை. இதனால் அரசாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்பட்டு "திவான் பகதூர்" பட்டமும் பெற்றவர். இவர் கதி இன்று என்னவாயிற்று? அவருடைய ஆஸ்திகள் அடியோடு ஒழிந்தன. அவரால் திருப்பாதிரிப்புலியூர் கோயிலுக்குத் தருமமாக வைக்கப்பட்ட பொருள்களையும் கடன்காரர் கைகொள்ள வந்துவிட்டனர். என்னே தெய்வீகத்தின் மகிமை!

மதப்புரட்சி யுண்டான காலங்களில் மேல்நாடுகளிலும், கோயில்களும், மடங்களும் இடிக்கப்பட்டன என்பதைச் சரித்திரத்தில் படித்தோம்; மறந்து போய் விட்டோம். சமீபத்தில் ரஷியாவில் உள்ள மடங்களும் கோயில்களும் இடிக்கப்பட்ட விஷயத்தை அறிந்தோம். இன்றும் ஒன்றிரண்டு மீதமாக உள்ளவைகளும் இடிபட்டுக்கொண்டு வருகின்றதையும் அறிகின்றோம். இதுபோலவே, துருக்கியில் தெய்வீகமாகவும் மதமாகவும் கருதப்பட்டுவந்த அநேக விஷயங்கள் அழிக்கப்பட்டு ஐரோப்பிய நாகரீகம் பரப்பப்பட்டது. அதனால் அந்த நாட்டிற்கோ அந்த நாட்டு மக்களுக்கோ எந்த விதமான ஆபத்தும் வந்ததில்லை. இந்த நிகழ்ச்சிகள் நடந்து மாதக்கணக்கும் வருஷக்கணக்கும் ஆகிவிட்டதால் இவற்றையும் பழங்கதை யென்று தள்ளிவிடுவோம்.

சில தினங்களுக்குமுன் ஸ்பெயின் தேசத்தில் உண்டான புரட்சியைப் பாருங்கள். மிகவும் புராதினமான தேசம். தெய்வீக சம்பந்தமுடைய தேசம் அது எந்த நிலையை அடைந்தது. அரசர் குடிமக்களின் மனப்பான்மையை அறிந்து தாமே நாட்டைத் துறந்து வெளியேறினார். இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் கடவுள்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும் வெளியேறும்படி நேர்ந்ததுதான் ஆச்சரியம். உடனே உண்டான கலகத்தில் எண்ணற்ற (சர்ச்சுகள்) கோயில்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அப்பொழுது அவைகளுக்குரிய கடவுள்கள் எங்கே குடி போயிருந்தார்கள்? இது மட்டோ! அக்கடவுள்களின் பிரதிநிதிகளாகிய பாதிரிகள் மூலைக்கு மூலை ஓடி ஒளிந்தனர். பாதிரிகளின் தலைவராகிய "பிஷப்" என்பவரும் பிரான்சு தேசத்திற்கு ஓடிவந்துவிட்டாராம்! ஆகவே தெய்வீகம் எங்கே போயினவென்று யோசித்துப்பாருங்கள்.

நமது நாட்டுக்கடவுள்கள் நம்மை யென்ன செய்திருக்கின்றனவென்று பாருங்கள். "ராம" என்ற இரண்டு எழுத்தை உச்சரிப்பதனால் ஒவ்வொரு நாளும் நன்மையையும் செல்வத்தையும் பெறலாம்; துன்பமும், பாவமும் அழியும்; பிறப்பும், இறப்பும் இல்லாமற்போகும் என்பது நமது மக்களின் கொள்கை. இதை,

நன்மையும் செல்வமும்
நாளும் நல்குமே
தின்மையும் பாவமும்
சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும்
இன்றி தீருமே
இம்மையே ராமவென்ற
இரண்டெழுத்தினால்

என்பதனால் அறியலாம், இது நாம் கூறிய வார்த்தையல்ல. தெய்வப்புலவராகிய, கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் என்ற நீண்ட பெயரையுடைய பெரியாரால் பாடப்பட்டது. இதை இன்னும் நமது மக்கள் நம்புகின்றார்கள். இந்த "ராம" என்னும் இரண்டு எழுத்தினால்தான் மகாத்மா காந்தியும் பாமர மக்களைத்தன் வசமிழுத்துக்கொண்டிருக்கின்றார். இப்பொழுதும் வடநாட்டிலும், தென்னாட்டிலும் காங்கிரஸ் கூட்டங்களில் ராமபஜனை நடந்துகொண்டுதான் இருக்கிறது. ராமாயணம் உண்டான காலமுதல் ராமபஜனையும் தோன்றிவிட்டது. அநேகர் ராம ராம வென்று ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். போதும் போதாமைக்குத்தமது பிள்ளைகுட்டிகளுக்கும் இப்பெயர் வைத்து அழைக்கிறார்கள். ராமாயணக்காலட்சேபங்கள் எண்ணற்றன நடக்கின்றன. புலவர்கள் ராமனுடைய கல்யாண குணங்களில் ஐக்கியப்பட்டு உபந்யாசம் செய்கிறார்கள்! இருந்தும் எங்கே நாம் முன்னுக்கு வந்தோம்? சென்ற சில தினங்களுக்குமுன் கான்பூரில் நிகழ்ந்த கலகங்களைப்பத்திரிகைகளிற் கண்டு கண்ணீர் விட்டோமே. இந்த ராமபஜனைக்கு அடங்கும் தெய்வீக சக்தி இல்லாமல்தானே ஒழிந்தது. சதா ராமபஜனை செய்யும் மகாத்மா காந்தியால் இன்னும் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி தேடமுடியவில்லையே. ஆகையால் தெய்வீகத்தினால் ஒன்றும் நடக்கப்போவதில்லை யென்பதற்கு இவைகளெல்லாம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அல்லவா?

வரப்போகும் சுயராஜியத்தில் ஒவ்வொருமதங்களுக்கும், அம்மதக்கலைகளுக்கும் நாகரிகங்களுக்கும் பாதுகாப்புவேண்டுமெனக் காங்கிரஸ்காரர்களால் கேட்கப்படுகின்றது. ஏனென்றால் மதமும், மதக்கலைகளும், மதநாகரீகங்களும்தெய்வீகமானவை; அவற்றை அழிக்கக்கூடாது என்பதற்காகவே பாதுகாப்பு வேண்டப்படுகின்றது. தெய்வீகமாய் இருந்தால் அவற்றைப்பாதுகாக்க நாம்நமது மண்டைகளை உடைத்துக்கொள்வானேன்? தெய்வீகம் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளாதா? தம்மைத்தாமேபாது காத்துக்கொள்ள முடியாதவை தெய்வீகம் ஆகுமா? என்னும் பகுத்தறிவு உணர்ச்சி நமது நாட்டுத் தேசாபிமானிகளுக்கு இல்லையா? நல்விமான்களுக்கு இல்லையா? அதிமேதாவியான புத்திசாலிகளுக்கு இல்லையா? இல்லையென்று நாம் கூறமாட்டோம். அவர்கள் மனதிற்கு இவ்விஷயம் நன்றாய்த்தெரியும். தெரிந்தும் இவ்வாறு பாதுகாப்பு வேண்

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

கொள்ளை ! கொள்ளை !! பகற்கொள்ளை !!! சங்கராச்சாரியார் கொள்ளை.

"காட்டுத்தீ"

உள்ளது உள்ளபடி உரைத்து விடுகின்றேன். கவனமாய் பூர்த்தியாய் கேளுங்கள்.

'சான்றோருடைத்து' என்று புகழ்ந்து பாடப்பெற்ற தொண்டை வளநாட்டில், 'நாஸ்திகர்'களும் 'கயவர்'களுமாகிய சுயமரியாதைக்காரர்கள் முதலாவது மகாநாடு கூட்டிய செங்கல்பட்டு ஜில்லாவின் பல பாகங்களில் கொள்ளையப்பா, கொள்ளை. சிலமாதங்களாகப் பெருங்கொள்ளை. அது எப்படிப்பட்ட கொள்ளை யென்பீர்களோ? சாதாரணக் கொள்ளையல்ல, ரயில்வேஸ்டேஷனில் டிக்கட்டுக் கொடுக்கும் 'டிக்கட்டு' ஜன்னலின் கதவு திறக்கப்படுமா என்று ஏங்கி வாயினித்து நிற்கையில் முடிச்சவிழ்த்தோடும் அல்லது ஜேபியில் உள்ளதைச் சாப்பிட்டுவிடும் கொள்ளையினத்தைச் சேர்ந்ததல்ல. கண்ணில் மிளகாய் தூளைத்தூவி பொருள்பறித்தோடும் கன்னாலிக் கொள்ளையல்ல துப்பாக்கியைக்காட்டி பணம்பறித்தோடும் துணிகரக் கொள்ளையல்ல. தீவட்டிக்கொள்ளையுமல்ல. நான் குறிப்பிட்டது இவைகளில் எதிலும் சேராத விசித்திர பகற்கொள்ளை. இக்கொள்ளை மக்கள் கண்ணுக்குத் தெரியாமலும், அவர்கள் உணரமுடியாதவாறும் நடைபெறுகின்றது. அதுவும் இன்று நேற்றல்ல. அநேக நூற்றாண்டுகளாக நடைபெறுகிறது.

பல மதஸ்தர்களையும் 'கடவுளை' மறுக்கும் ரஷியர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஜகத்திற்கு குருவாகிய லோககுரு சங்கராச்சாரி என்பவர் சில மாதங்களாக செங்கல்பட்டு ஜில்லாவின் பல பாகங்களில் கொள்ளையடித்துவிட்டு இப்பொழுது காஞ்சிபுரத்தில் கூடாரமடித்துள்ளார். அந்நகரைச் சுரண்டத்துடங்கிவிட்டார். அவர் சென்ற விடமெல்லாம் சுயமரியாதைக் கொள்கைகளை யழித்துத் தன் இனத்தவர்களின் செல்வாக்கை விருத்தி செய்வதற்கு வேண்டியவற்றை யெல்லாம் தன்னாலியன்ற அளவு செய்துவிட்டார். இவருக்கு பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், பூர்ண சுயராஜிய வீரர்கள், 'சர்க்கார் தாசர்கள்' பொதுஜன நன்மைகளைப் பாதுகாக்கும் பொருட்டே ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம் வகிப்பதாகக் கூறிக்கொள்ளும் சுயநலம் கருதாப் புண்ணிய புருஷர்கள் ஆகிய யாவரும் வரவேற்புகளும், வேண்டிய உதவியும் கொடுத்தனர். அதிலும் பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்போரும் ஜஸ்டிஸ் கட்சியால் பெரும் நன்மை யடைந்தவர்களுமாகிய சிலர் அவருக்குக் காணிக்கை செலுத்தி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதன் மூலம் தங்களுக்கும் தங்கள் சமூகத்திற்கும் இழிவைத் தேடிக்கொண்டதானது மிகவும் கண்டிக்கத்தக்கதே. இச்செய்கையானது அத்தலைவர்களின் 'பச்சோந்தித்தன்மை'யை அறிந்துகொள்ளவும் பொது ஜனங்களின் சுயமரியாதையற்ற தன்மைக்கும் நல்ல எடுத்துக் காட்டாகும். அவர் நூற்றுக்கணக்கான ரூபாய்களைப்பெற்றுக்கொண்டு தான் ஆசிர்வாதத்தை அருளினர். தனது செலவிற்கு தினம் ரூ 500 பெறுமல் அவர் ஒரு ஊரிலும் தங்குவதில்லை. அரை வயிற்றுக்கஞ்சிக்கும் அவதிப்படுவோர் கோடிக்கணக்கில் இருக்க இவரும் இவரது சிஷ்யர்களும் தின்று கொழுத்து சோம்பேறிகளாய்த் திரிய இவ்வாறு அளவற்ற பணம் உதவி செய்வது எவ்வளவு மதியீனம்! செங்கல்பட்டு ஜில்லாவில் நடைபெறும் கொள்ளையைமாத்திரம் எடுத்துக் காட்டினதால் வேறுஜில்லாவில் இவ்வாறான கொள்ளை யில்லையென நினைக்கவேண்டாம். நம்நாடு முழுவதுமே அநேகர் இவ்வழியில் கொள்ளையிட்டு வருகின்றனர். ஆகவே இது இந்தியரெல்லாருடைய கவனத்தையும் கவரவேண்டிய ஓர் விஷயமாகும்.

இவர் ஒருவரல்ல. இவரைப்போன்ற அநேகர் நமது மூடபக்தியையும் அறியாமையையும் ஆயுதங்களாகக் கொண்டு நாம் உணரமுடியாதவாறு கொள்ளையிடுகின்றனர். இவர்களுக்கு கன்னக்கோல், கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் தேவையில்லை. நமது மூடபக்தி, அறிவீனம், சுயமரியாதையற்ற தன்மை, மோக்ஷம் நரகம் ஆகியவைகளிடமுள்ள குருட்டு நம்பிக்கை ஆகிய ஆயுதங்களே அவர்களுக்குப் போதுமானது. இவைகளைக் கொண்டே அநேககாலமாக மகத்தான வெற்றிபெற்று வருகின்றனர். இக்கொள்ளைக்குப் பரிகாரம் ஒன்றே. மதம், மோக்ஷம் ஆகியவைகளிடமுள்ள குருட்டு நம்பிக்கையை ஒழித்து அவர்கள் பகுத்தறிவை உபயோகிக்கக் கற்பித்து சுயமரியாதை உதயமாகச் செய்வதே அப்பரிகாரம். இதை விடுத்து வேறுவழியிற் சென்றால் நம் எண்ணம் ஈடேறுவதரிது.

இது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல; பஞ்சத்தின் கொடுமையால் உண்டானதல்ல. அநேக நூற்றாண்டுகளாக சாஸ்வதமாக நடைபெறுகிற கொள்ளையாகும். இத்தகையான கொள்ளைதான் நாட்டின் ஜீவாதாரத்தில் பெரும்பகுதியை உறிஞ்சிவிடுகிறது. ஆனால் அதை மக்கள் உணரமுடியாதவாறு நடைபெறுகிறது. இதை அவர்கள் உணர்ந்து இக்கொள்ளையை ஒழித்தாலன்றி இந்தியா உண்மையான முன்னேற்றமடைய முடியாது என்பதைக் கவனியுங்கள். அரசியல் சுதந்திரம் அடைதல் மட்டும் போதாது. வியாபார பொருளாதார துறைகளில் சுதந்திரமடைதலும் போதாது. இக்கொள்ளை ஒழிந்தால் தான் நாடு க்ஷேமமடையும். ஒரு சிலரின் நன்மைக்காக பாமரர்களைக் கொள்ளையிட ஒருவரையும் அனுமதிக்கக் கூடாது. எவ்வளவு விரைவில் மடாதிபதிகளினுடையவும், புரோகிதர்களினுடையவும் கொள்ளை ஒழிகின்றதோ அவ்வளவு விரைவில் இந்தியர்களும் க்ஷேமமடைவர். நாட்டின் க்ஷேமத்தில் கருத்துள்ள யாவரும் இதிற் கவனஞ் செலுத்தவேண்டும். "காசியில் காங்கிரஸ் மகாசபை சுயமரியாதைக் கொள்கைகளை யனுசரித்து பிறகும், சுயமரியாதைக்கட்சி இருக்கவேண்டிய அவசியமென்ன" என்று கேட்போர், காசியில் இக்கொள்ளையைத் தடுக்க ஏதாகிலும் வழி தேடியுள்ளனரா? அல்லது அங்கு இதைப்பற்றிய பிரஸ்தாபந்தானுண்டா? என்பதை ஊன்றி கவனிப்பார்களாக. இப்படிப்பட்ட கொள்ளைகள் நடைபெறுகிற வரையிலும் தனி ஒருவனது சுயமரியாதைக்கு ஊறு விளைக்கப்படுகிறவரையிலும் சுயமரியாதைக்கட்சி இருந்துதான் தீரும். இக்கொள்ளைகள் ஒழிந்தாலன்றி சுயமரியாதை இயக்கம் ஒழியாது.

சங்கராச்சாரி இச்சில்லாவின் பல இடங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து கொள்ளை யடித்துவிட்டு, காஞ்சீபுரத்தில் உட்கார்ந்துகொண்டு நகர்வாசிகளின் இரத்தத்தை உறிஞ்சி வருகிறார். தான் கொள்ளை யடிப்பது போதாதென்று பாமரர்களிடமிருந்து பணஞ்சூல் செய்து ஆயிரக்கணக்கான பார்ப்பன ஆண்பெண்களுக்கு சமாராதனை செய்கிறார். இவரது செய்கைகடைத் தேவாரை யெடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதை ஒக்காதா? இவ்வாறு தின்று கொழுத்திருக்கும் சோம்பேறிகளை மேலும் மேலும் தின்றுக்கொழுக்க வைத்து சோம்பேறிகளாக்குவது நாட்டின் நன்மைக்கு எவ்வளவு இடையூறு விளைப்பது என்பதை ஆழ்ந்து சிந்தனை செய்வீர்களா. இவைகளெல்லாம் போதாதென்று அந்நகரிலுள்ள காமாக்ஷி அம்மன் என்கிற விக்கிரகம் சாதாரண ரதத்தில் ஊர்வலஞ்செய்யும் குறையை நிவர்த்தி செய்யவேண்டி ஓர் வெள்ளி ரதம் செய்யும் திருப்பணியை மேற்கொண்டிருக்கிறார். அதற்காகப் பணமும் சுரண்டுகிறார். பணம் சுரண்ட ஓர் சரியான தந்திரத்தையும் கைகொண்டுள்ளார். அந்நகரின் ஒவ்வொரு வீட்டிலும் ஓர் புது மண் பாத்திரம் அவரது சிஷ்யர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வீட்டார் தினந்தோறும் அப்பாத்திரத்தில் ஓர் பிடி அரிசி போடவேண்டுமாம். மூடபக்தியால் மூளை மழுங்கியுள்ள மக்களும் அவ்வாறே செய்கின்றனர். வாரத்திற்கொருமுறை அவர்கள்வந்து அரிசியை எடுத்துக்கொண்டு பாத்திரத்தை வைத்துப் போவார்கள். அவ்வரிசியை விற்று பணமாக்குகிறார்கள். அதன்றியும் பலதனவான்களிடம் பொருள் பறித்து வருகின்றனர். போதியபணம் சேருகிறவரையிலும் இத் தந்திரமான முறையையாளப்படுமாம். இதைநாம் கொள்ளை யென்று கூறுவது என் செய்வது? எவ்வளவு தந்திரமாக மக்கள் உணரமுடியாத வகையில் அவர்களின் செல்வம் கொள்ளையிடப்படுகின்றது என்பதைக்கவனியுங்கள். இவ்வளவு தந்திரமாகக் கொள்ளையடிக்க ஆங்கிலேயருக்குத்தான் தெரியுமோ? தெரியாவிடில் நமது மடாதிபதிகளிடம் கற்றுக்கொள்வார்களாக!

இப்பொழுது உலகமெங்கும் பொருளாதாரநிலை சீர்கேடடைந்துள்ளது. பணமுடையினால் எத்தேசத்தாரும் அவதிப்படுகின்றனர். ஆனால் இன்னும் இம்மாதிரியான கொள்ளைக்காரர்களின் தொல்லையும் 'சாமி'களின் தொல்லையும் குறைந்தபாடில்லை; விருத்தியாகிக் கொண்டேதானிருக்கிறது மக்களின் கஷ்டமதிகமாக ஆக 'சாமி'களுக்கும் ஆடம்பரத்தில் மோகம் மதிகமாவதாகத்தான் தோன்றுகிறது. அவைகள் மக்களின் கஷ்டங்களை உணர்வதாகத்தோன்றவில்லை. நாட்டில் எண்ணற்றவர்கள் இருக்க இடமும், உடைந்தையும், குடிக்கக்கூழுமின்றி பரிதவிக்கையில் சாமிகளுக்கும், செம்பும் வெள்ளிரதங்களும நகைகளும் கணக்கு வழக்கின்றி செய்வது அறிவுடைமையாகுமா? இவைகளில் செலவாகும் பணம வீணாக பொதுஜனங்களுக்குயாதொரு உபயோகமுமின்றி அழுந்திக்கிடக்கின்றது. இதை எவ்வளவு உபயோகமான வழிகளில் செலவிடலாம் என்பதை சற்று சிந்தியுங்கள். ஓர் தேசத்தின் க்ஷேமம அத்தேசத்தில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கும செல்வம் உபயோகிக்கப்படும் விதத்தைபொருத்தது. அளவற்ற பொருள்கள் யாதொரு உபயோகமுமின்றி கோயில்களிலும் மடங்களிலும் சேர்த்துவைக்கப்பட்டிருப்பதால் தேசத்திற்கு நன்மையுண்டாகாது; பலவழிகளிலும் தீமையே உண்டாகும். ஆகவே கோயில் முதலியவைகளின் மூலம் பணம் வீணாவது தடுக்கப்பட்டு அவை தொழிற்சாலைகள் ஏற்படுத்தல் முதலிய தேச முன்னேற்றத்திற்கான வழிகளில் செலவழிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் தேசம் க்ஷேமமடையும்.

நம்நாட்டுச்செல்வம் பலவழிகளில் கொள்ளையிடப்படுகிறது. அதில் கோயில் முதலியவைகளின் மூலம் அழிக்கப்படும் செல்வம் மிக அதிகமானதென்று கூறல் மிகையாகுமோ? ஆனால் நாட்டின் 'துர்அதிர்ஷ்டவசத்

தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குருவின் மரணசாஸனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

(காப்பிரைட்)

பீடிகை.

Jean Meslier (ஜீன்மெஸ்லியர்) என்பவர் "எட்ரிபிக்னி" என்னுமிடத்தில் 30 வருஷகாலம் ரோமன் கத்தோலிக்க குருவாக இருந்தார். பிறகு 'ஷாம்பேன்' 'பிரான்ஸ்' முதலிய இடங்களுக்குச் சென்றபின் மதக்கட்டளைகளையே அடியோடு விட்டார். கடைசியில் அவருடைய சிஷ்ய கோடிகளுக்கும், பொதுவாக உலகத்தாருக்கும் "பகுத்தறிவு" என்று பெயரிட்ட தனது மரண சாஸனத்தை மூலதனமாக விட்டுப் போனார். பிரஞ்சு பாஷையில் எழுதப்பட்ட அச்சாஸனமானது அவருடைய மரணத்திற்குப்பின் வெளியிடப்பட்டு, பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அதை இங்கிலீஷில் மொழிபெயர்த்தவர் மிஸ் ஆனு நூப் என்னும் பெண்மணியாவார்.

அதைத்தமிழில் மொழி பெயர்த்து உலக மக்களின்—முக்கியமாக—கிறிஸ்துவர்களின் பகுத்தறிவுக்கு விடுகிறேன்.

முன்னுரை.

இங்கிலீஷ் பாஷையிலும் ஜர்மன் பாஷையிலும் ஜீன் மெஸ்லியரின் மரண சாஸனத்தைமொழி பெயர்த்துதவிய மிஸ் ஆனு நூப் மிக்க உபயோகமான ஒரு வேலையைச் செய்து முடித்திருக்கிறார் என்பது மிகையாகாது.

நியூபரி போர்ட் 23௳ செப்டம்பர் 1878ல் ஜேம்ஸ் பார்டன் என்பவர் இப்புத்தகத்தைப்பற்றி எழுதியிருப்பதாவது:—

"யோக்கியமான குருவாகிய ஜீன் மெஸ்லியரால் எழுதப்பட்ட இப்புத்தகமானது சென்ற நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சிகளுள் மிகவும் அதிசயமானதும், அதிக அபாரமானதுமான நிகழ்ச்சியாகும்..............'பெயின்', 'வால்டேர்' முதலியவர்கள் சில விஷயங்களை மறைத்து வைத்தார்கள். ஆனால் ஜீன் மெஸ்லியர் அவ்விதம் செய்யவில்லை. அவர் ஒன்றையும் ரகசியமாக வைத்துக் கொள்ளவில்லை. ஆயினும் ஓரே ஒரு குரு மாத்திரம் தனது மரண காலத்தில் சாஸனம் எழுதி வைத்தது அவ்வளவு ஆச்சரியமாகயில்லை. ஆனால் பின் எது ஆச்சரியமென்றால், எல்லா குருமார்களும் இவ்விதம் செய்வதில்லை என்பதே".

ஒரு கத்தோலிக் குருவானவர், அவருடைய அந்தியகாலத்தில், தான் அதுவரைசெய்த நம்பிக்கை காரணமான பிழைகளையெல்லாம் நினைந்துருகி, 'கத்தோலிக்' மதத்தை மக்களுக்குச் சொல்லிக்கொடுத்த பாவத்திற்காகக் கடவுளிடம் மன்னிப்புக்கேட்டு தனது அநுபவத்தைத் திரட்டி யெழுதப்பட்ட, மரண சாஸனத்தை 'வால்டேரும்' புகழ்ந்து பாராட்டியதில் ஆச்சரியமில்லை.

"அப்பே பாரல்" என்னும் கிறிஸ்துமதக் குருவானவர் 'வால்டேர்' போன்ற ஆசிரியர்களின் நூல்களால், கடவுள் மேடைக்கு மாத்திரமல்ல, அரசனுடைய சிம்மாசனத்திற்கே ஆபத்து வரப்போகிறது என்பதை முன்னெச்சரிக்கை செய்தார். இன்னும் ஜீன் மெஸ்லியரின் மரண சாஸனத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது 'அவருடைய மதத் தூஷணைகளும், கடவுள் மறுப்புக்கொள்கைகளும் பாமர மக்களின் மனதைக் கவர்ந்து விட்டனவே", என்று ஆத்திரத்தோடு கூறுகிறார்.

இன்னும் அவர் முன்யோசனையோடு கூறியிருக்கும் விஷயங்கள் மிகவும் ருசியானவை. அவர் கூறுவதாவது:— "ஜாகோபியர்கள் பின் ஒரு காலத்தில் எல்லா மனிதர்களும் சுயேச்சை யென்றும், சமம் என்றும் சொல்வார்கள். இந்த சமத்துவம், சுதந்திரம் இரண்டின் பலனாக மனிதன் பகுத்தறிவையே பின்பற்றவேண்டுமென்று முடிவு கட்டி விடுவார்கள். மனிதனுடைய பகுத்தறிவை அற்புதங்களுக்கும், கடவுள் போலுள்ள விஷயங்களுக்கும் கட்டுப்படுத்தக்கூடிய எந்த மதத்தையும் அடிமைத்தனம் என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே சுதந்திரம், சமத்துவம் ஆகிய பகுத்தறிவு ஆட்சி நடைபெறவேண்டுமானால் மனிதனை இத்தகைய மதங்களிலிருந்துவிடுவிக்க வேண்டுமென்று சொல்லுவார்கள்", என்பதேயாகும்.

இவர் முன் எச்சரிக்கையாகச் சொன்னதெல்லாம் அப்படியே நடந்தேறியது. ஜாகோபியர்கள் (Jacobins) பட்ட பிரயாசையெல்லாம் பலன் கொடுக்காமல் போகவில்லை. அவர்கள் தூண்டிவிட்ட புரட்சியானது பிரான்ஸ் தேசத்தை மக்களுடைய சொந்த ஆட்சிக்குக்கொண்டு வந்து விட்டது.

எப்படியெனில் சில வருஷங்களுக்குள், அதாவது மே1889ல், "பிரசிடெண்ட் கார்னட்" என்பவர் பேசும்போது கூறியிருப்பதைக் கவனித்தாலே தெரியும்:—

"நாம் இந்த உன்னத நிலைமையிலிருப்பதற்குக் காரணம் நமது முன்னோர்களாவார்கள். நமது முன்னோர்கள் நமது பிரான்ஸ் தேசத்துக்கும், பொதுவாக உலகத்துக்குமே செய்திருக்கும் பேருபகாரத்திற்குச் சமம் உலகில் எதுவுமேயில்லையென்று சொல்லலாம். நமது புரட்சியானது மனிதனுடைய உரிமைகளை அடிப்படையாய்க் கொண்டதாகும். இப்புரட்சியானது சரித்திரத்தில் மாத்திரமல்ல; தற்கால மனித சமூகத்திற்கே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கியிருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது".

இது முற்றும் உண்மையாக வேயிருக்கிறது. பிரான்ஸிலிருந்த அறிவு இயக்கத்தார்கள்தான் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம்" ஆகிய மூன்று தத்துவங்களையும் மனித சமூகத்திற்கு ஊட்டியிருக்கிறார்கள். மனிதனுடைய பகுத்தறிவின் உயர்வையும் மனித உரிமைகளின் சிரேஷ்டத்தையும் கற்பித்தவர்கள் அவர்களே. கடவுள் மேடையின் (மூலஸ்தானம்) கட்டுப்பாட்டையும் சிம்மாசனத்தின் விலங்குகளையும் உடைத்தெறிந்தவர்களும் அவர்களே......

ரோம் நகரிலுள்ள மதக்கூட்டத்தினரெல்லாம் இயற்கைக்கு எதிரியாக அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமை தங்களிடம் இருக்கிறதாகச் சொல்கிறார்களேயொழிய, அந்த அற்புதங்களின் உதவியினாலோ, அல்லது இல்லாமலோ, இது வரையில் ஜீன் மெஸ்லியருடைய ஒரு சிறிய கேள்விக்குக்கூட அவர்களால் பதில் சொல்ல முடியாது போயிற்று. சுவர்க்கத்தின் சாவி தங்கள் கையில் இருப்பதாகச்சொல்லிக்கொண்டாலும், சுவர்க்கத்தில் கட்டுப்படக்கூடிய ஆன்மாக்களைத்தாங்களே இவ்வுலகில் கட்டுப்படுத்தும் சக்தியுள்ளவர்களாகப் பெருமை பாராட்டிக் கொண்டாலும், வருஷா வருஷம் அவர்களுடைய அதிகாரம் குறைந்து கொண்டு வருவதானது அவர்களுடைய வீண் பெருமையின் அறிவீனத்தை விளக்குகிறது. 'போப்'பினுடையசர்வாதிகாரத்தைப்பற்றி அவர்கள் பிதற்றிக்கொண்டிருந்தாலும் முன் ஒரு காலத்தில் ரோமபுரி செலுத்திவந்த ராஜீய அதிகாரமெல்லாம் அடியோடு ஒழிந்து போய்விட்டது என்பதும், ஒவ்வொரு 'போப்'பும் இறந்து போகிறார்கள் என்பதும், 'போப்' சாமான்ய மனுஷன் என்பதையும், அவனும் இறக்கக்கூடியவன் என்பதையும் நிரூபிக்கிறது. அதுமாத்திரமா? செயின்ட் பீட்டரினுடைய (St. Peter) சந்ததியார்கள்சாதாரண மனிதர்கள் தான்;—ரோம் நகரிலுள்ள புனிதமான காலேஜும் ஒரு காலத்தில் அழியக்கூடியது தான். நம்பிக்கையும் மதக்கட்டளையும் வெளிச்சத்தையும் அறிவையும் என்றும் எதிர்க்கவே முடியாது. கத்தோலிக்க மதமானது ஐரோப்பா முழுதும் நிச்சயமாய்க் குன்றிக்கொண்டே போகிறது. ஆனால் அமெரிக்காவில் மாத்திரம் அம்மதம் தலைகாட்டுகிறதென்றால் அது அவர்களுடைய தவறுதும். "சுயேச்சை வேண்டுமென்றால் எப்போதும் விழிப்பாகவே இருக்கவேண்டும்" என்ற அரிய உண்மையை அமெரிக்கர்கள் மறந்து போனதால் தான் இந்த நிலை ஏற்பட்டது.

(இது பீட்டர் எக்ளர் என்பவர் ஷை புத்தகத்திற்கு 1889ம் ௵ மே மீ 21௳யில் எழுதிய முகவுரையாகும்)

(தொடரும்)

பொதுக்கூட்டம்.

18-5-31ல் ஆறுமுகநேரி ஹிந்து நாடார் ஸ்கூலுக்கு வடபுறமாக நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரக்கூட்டத்தில் தலைமை வகித்த புரோபஸர் அன்பையன்—எம். ஏ. பி. பி. டி. அவர்கள் தம் முடிவுரையில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை ஆதரித்து மிக இனிமையாக நீண்டநேரம் பிரசங்கம் செய்தார்கள்: கூடிய விரைவில் சுயமரியாதைத்தொண்டர்களை அழைத்து சுயமரியாதைப்பிரசாரம் நடைபெறுமெனவும் அறிகிறேன் என ஒரு ஒருநிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதையும் "கடவுள் செயல்தான்"

[எம். எஸ். நாதன்]

கற்றவர், கல்லாதவர், பணமுள்ளவர், பணமில்லாதவர், உலகை ஆள்பவர், உலகைத் துறந்தவர் ஆகிய எல்லோரும் தம், தம் நிலைமைக்கு எல்லாம் கடவுள் செயலென்றே திருப்திப் படுகிறார்கள். உலகில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களும் அவரால் (கடவுளால்) நடைபெறுகிறதென்றும், அவரின்றி ஓர் அணுவும் அசையா என்றும், அவர் நினைத்தால் ஆகாதகாரியமில்லை என்றும், மற்றும் தூணிலுமிருப்பார், துரும்பிலுமிருப்பார், எங்கும் நிறைந்தவர், எல்லாந் தெரிந்தவர், அவர் திருவிளையாட்டே பெரும் விளையாட்டென்றும் சொல்லி மகிழ்கின்றார்கள். என்றாலும், ஒவ்வொரு மனிதரும் தன் திறமையால் ஓர் காரியத்தைச் செய்து முடித்துவிட்டால் மாத்திரம் அதை நான் செய்தேன், நான் பண்ணினேனென்று ஆண்மையுடன் அறைகின்றனர். காரணம் தன்மதிப்புடன் செய்ததினாலேயேயாகும். ஆனால்தன் புத்திக்கு எட்டாததை மாத்திரம் கடவுள் செயலென்று சொல்லிவிடுகின்றனர்.

இது அடிமைப் புத்தியால் சொல்லுவதாகும். இந்தப் புத்தி ஆகாதென்றுதான் நாம் சொல்லுகிறோம். எதையும் சுயபுத்தியுடன் செய்தும், சுயபுத்தியைச் செலவுசெய்து உண்மையைக் கண்டு பிடிக்க முயற்சிக்கும் ஆண்மையுள்ள மனிதர்களாகவிருக்கவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். இப்படிச் சொல்லும்போது நான் நம்மேல் சிறிவிழுகிறார்கள். "இவர்கள் கெட்டார்கள், சுயமரியாதைக்காரர்கள்—தானென்கிற அகம்பாவம் பிடித்தவர்கள். கடவுள் செயல் இல்லாமல்தான் பொழுது விடிகிறதோ?" வென்கிறார்கள். போகட்டும். இவர்கள் கூற்றுப்படியெல்லாம் அவர் செயலாகவே வைத்துக் கொள்வோம். அப்படியானால் நமது நாட்டிற்கு அவதாரப் புருஷராய் அவதரித்த மகாத்மா காந்தி அடிகள் ஆரம்பித்த ஒத்துழையாமை தோற்றுப்போனதும் இந்தியர்களுக்குச் சட்டசபை சீர்திருத்தம் கிடைத்ததும் அங்குபோய் முட்டுக்கட்டை போட்டதும், ராயல் கமிஷன் வந்து விசாரணை செய்ததும், அதை ஒரு கூட்டத்தார் பகிஷ்கரித்ததும், திரு. காந்தியின் 11 திட்டங்களை லைசிராய் மறுத்ததும், காந்தி உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்ததும், அதைப் பின்பற்றின தேசபக்தர்கள் சிறை சென்றதும், அடிபட்டதும், உயிர் துறந்ததும், லண்டனில் வட்டமேஜை கூடினதும், பிறகு காந்தி, இர்வின் கலந்துறவாடினதும், கராச்சியில் காங்கிரஸ் தலைவர்கள் மிக கம்பீரமாய் கர்ஜித்ததும், காங்கிரஸ் பிரதிநிதிகள் சேர்ந்த இனியொரு வட்டமேஜை இங்கிலாந்தில் கூடப்போவதும், அதன்மூலம் நம் நாட்டிற்குக் கிடைக்கப் போகிற சுயராஜியமும் கடவுள் செயலேயாகுமன்றோ. அதுபோலவே சாதிச் சண்டை, சமயக் கொடுமை, பெண்ணடிமை, பணத்திமிர், பணமில்லாமை முதலிய வித்தியாசங்களைப் போக்கி, நாட்டில் சமதர்மத்தை நிலைநாட்ட சுயமரியாதை என்னும் ஓர் இயக்கம் தோன்றியிருப்பது எல்லோருக்கும் தெரியும். இந்த இயக்கத்தை ஆரம்பத்திலேயே அழித்துவிட வேண்டுமென்று அறப்போர் பண்டிதர் ஒருவர் புறப்பட்டார். சுயமரியாதைக்காரர்கள் பறையர்களையும், புலையர்களையும் கோவிலுக்குள் அழைத்துப் போகிறார்கள். ஆதலால் இவ்வியக்கத்தை ஒழிக்கவேண்டுமென்றார் ஒரு புலவர். இவர்களை அழிக்க வேண்டுமென்றார் மற்றொரு புலவர். அரசர் பழி கொள்ளினும், புலவர் பழி கொள்ளற்க என, அச்சுறுத்தினார் மற்றொரு புலவர். இன்னும் இதை அழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்ட பண்டிதர், பாவலர், நாவலர், அரசியல் வாதிகள், அந்தணர், அந்தணரல்லாதார் முதலிய அநேகம் பேர்கள். இதுவும் இதுபோன்ற இன்னும் பலவிதமான எதிர்ப்புகள் தோன்றியும் இத்தனை கஷ்டங்களையும், நஷ்டங்களையும் லட்சியம் செய்யாமல், எவ்வளவோ தீவிரமாய் முன்னேறிக் கொண்டிருக்கிறது சுயமரியாதை இயக்கம்

யாராவது இதைக் கடவுள் செயல் அல்லவென்று சொல்ல முடியுமா? அவர் கிருபா கடாக்ஷமில்லாமல் பல சாதிப் பல சமயக்காரர்களும், வாலிபர்களும், வயோதிகர்களும், பெண்களும், பிள்ளைகளும், ஏழைகளும், பணம்படைத்தவர்களும் எல்லோரும் ஓரிடத்தில் ஒன்றுகூட முடியுமா? சமபந்தி போஜனம் செய்ய முடியுமா? விதவைகள் விமோசனமடைய முடியுமா? வீட்டில் அடைபட்டிருந்தவர்கள் வெளியில் வரமுடியுமா? காலப்போக்கை கவனித்தே சுயமரியாதை இயக்கத்தையும் அனுப்பியிருக்கக் கூடும். அவருக்கு எல்லா பாஷையும் தெரியுமாதலால் தரகன் [குருக்கள்) தேவையில்லையென்று எண்ணியிருக்கக்கூடும். எங்கும் நிறைந்தவராயிருப்பதால் பிரத்தியேகமாய் குடியிருக்கக் கோயில் வேண்டியதில்லையென நினைத்திருக்கலாம். அவர் எல்லோரையும் சிருஷ்டிப்பதால் எண்ணற்ற சமயமும், எல்லாத் தொழிலும் தெரிந்திருப்பதால் எழுதமுடியாத சாதியும் இருக்கப்படாதென்றும் எல்லா சொத்தும் அவர் படைப்பாதலால் எல்லாருக்கும் பொதுவாயிருக்கவேண்டுமென்றும் யோசித்திருக்கலாம். அவர் நினைத்தால் முடியாத காரியமில்லையென்றும், அவர் மாறி, மாறித் திருவிளையாடல் செய்வாரென்றும், சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. ஆராய்ந்து பார்த்தால் சுயமரியாதைக் கலியுகத்தின் திருவிளையாடலாகயிருக்குமென்றே உறுதியாகச் சொல்லலாம். ஏனெனில், 84 லட்சம் ஜீவராசிகளையும் படைத்த கடவுள்தான் சுயமரியாதைக்காரர்களாகிய சங்களையும் படைத்திருக்க வேண்டும். நாங்கள் செய்யும் வழி அவ்வளவு கெட்ட வழியாகவிருந்தால் அவர் பார்த்துக்கொண்டு சும்மா விருப்பவரல்ல. ஆக்கவும், அழிக்கவும் அவரால் முடியும். அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த ஒரு கடவுளைச் சுயமரியாதைக்காரர்கள் குற்றம் சொல்லுகிறார் என்றும், அப்படிப்பட்ட இயக்கத்தை அழித்துவிட வேண்டுமென்றும், சில சுயநல சொரூபிகள் பிரயத்தனப்பட்டால், அப்படிப்பட்டவர்களின் பண்டிதப்புரட்டு, பாவலர் புரட்டு, நாவலர்புரட்டு, பஞ்சாங்கப் புரட்டு, குருக்கள் புரட்டு, மாந்திரீகப்புரட்டு, சோதிடப்புரட்டு, அரசியல் புட்ரடுக்காரர்களின் அயோக்கியப்புரட்டு ஆகிய யெல்லாம் அறியாமலாவிருப்பார்? அத்தகைய ஆதிக்கத்தை அழிக்க மனமில்லாதவரானால், சுயமரியாதைக்குத் துணைபுரிவாரா? ஏமாற்றுவது அவர் செயலானால், தப்பித்து விடுவதும் அவர் செயல் தானே.

காலச்சக்கரம்.

(டி. ஜி. வெங்கடாசலம்.)

உயர் திரு. காந்தி அவர்கள் விஷ்ணுவின் பதினோராவது அவதாரமெனப் புகழப்படுகிறார். அதை அவர் ஒப்புக்கொண்டு அப்பதவியை நிலை நாட்டும் பொருட்டுத் தமக்கு ஒழிந்த வேளையில் சிறைக்கூடத்திற் கூட ராமநாம பஜனையே செய்து வரும் வழக்கத்தைக் கையாடிவருகிறார். அதுமட்டுமல்ல. விஷ்ணுவின் கிருஷ்ணாவதாரத்தில் அர்ச்சுனனுக்குச்சொல்லப்பட்ட நீதிகள் எனப்படும் பகவத் கீதையை புதுப்பித்தெழுதி வியாக்யானமும் சொல்கிறார். அம்மட்டோ, சுமார் 50வருடகாலமாக நமது நாட்டில் ஏற்பட்டு நடந்து வந்திருக்கும் காங்கிரஸ் என்னும் ஸ்தாபனத்துக்கு சென்ற 10வருடங்களாய்த் தலைமைவகித்தும் இன்றையதினம் சர்வாதிகாரியாகவும் விளங்கிக்கொண்டு 50 வருடகாலம் மக்களால் நினைத்து நினைத்துச் சொல்லிச் சொல்லித் தழும்பேறிய வார்த்தையாகிய "சுயராஜ்யம்" என்னும் வார்த்தையை வெகுலகுவில்மறைத்து தமது பதவிக் கேற்பதாம் விரும்புவதும், கோறப்பெறுவதும் "ராமராஜ்யம்" தான் என்று வெகு தைரியமாய்ச் சொல்ல முன் வந்து விட்டார். அதற்கேற்ப தன்னுடைய ஆதிக்கத்தில் தன்னால் பலனடையும் மக்களில் பெரும்பாலான நாமதாரிகளையே நம்பித்தன் உற்ற சீடராகவும் வைத்து அவர்களை எவ்வளவோதூரம் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து தன் அருளில் முதல் பங்கு அவர்களையே பெறவைக்கிறார்.

இதில் சிலருக்குச் சந்தேகமிருக்கலாம் அதற்குத்தகுந்த உதாரணம் கூறப்புகின் திரு. காந்தியவர்கள் கதர்நிதிக்கெனத் தமிழ்நாட்டில் சுற்றுபபிரயாணம் செய்யும்பொழுது அவர் கூட இருந்து பணமுடிப்புப் பெற்றவர்களில் முதன்மையானவர்கள் நாமதாரிகளே. பிறகு கோடிக்கணக்கான ரூபாய்கள் வசூல் செய்துதமிழ்நாட்டைப் பொருத்தவரை கதர்போர்டு நிர்வாகத்தை ஒப்புவித்ததும் நாமதாரிப் பார்ப்பனர்களிடமே. அதைப் பெற்றுத் தற்காலம் நடந்துவரும் கதர் போர்டில் உள்ள உத்தியோகஸ்தரில் 100க்கு 95பேர் நாமதாரிப் பார்ப்பனர்களே. சுருங்கச் சொல்லில் பிராமணரல்லாதார் கக்ஷிசெய்துள்ள அருமையான வேலையின் பயனாய் பார்ப்பனருக்குச் சர்க்கார்வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாய்ப் போன சமயம் திரு காந்தியவர்கள் பார்ப்பனர்களில் ஒரு சாராராகிய விஷ்ணுமத தமது சீடராகிய ஐயங்கார் பார்ப்பனர்களை கைதூக்கிவிடவே கதர் போர்டு என்னும் ஒரு டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி அவர்களுக்கு உயிரப் பிச்சை கொடுத்தார் என்று சொல்லலாம். ஆகவே மேற்கண்ட காரணங்களால் பொதுவாக இந்தியநாட்டு மக்களில் சர்வமதஸ்தர்களும் பேதாபேதமின்றிச் சென்ற 10வருடங்களாய்க் கண்மூடித்தனமாய் திரு. காந்தியவர்களைப் பின்பற்றி வந்ததின் பலனென்னவாய் முடிந்ததென்றால் விஷ்ணுமதஸ்தர் என்று சொல்லிக்கொள்ளும் ஐயங்கார் ஆச்சாரிப்பார்ப்பனர்களைத் தவிரப் பொதுவாக எல்லாமதஸ்தர்களும், குறிப்பாகச் சைவமதஸ்தரும் சிறப்பாகச் சிவநேயர்களும பெரும் ஏமாற்றமடைந்தனர். என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் பகுத்தறிவுக் காரர்கள் என்னும சுயமரியாதைக்காரர்கள் ஏமாற்றமடையவில்லை. ஏன்? எங்களுக்குக்காலச்சக்கரத்தின் சுற்றளவு முதல் அதுசுற்றும் வேகத்தின் சுழலும் கூடத்தெரியும். அதை நாங்கள் எங்கள மட்டும் வைத்துக்கொள்ளவில்லை. அப்போதைக்கப்போது சொல்லி வந்திருக்கிறோம். அவைகளெல்லாம் அப்போது உங்களுக்குப் புலப்படாமற் போனதோடு எங்களையும் தூஷித்தீர்கள். ஏ. சைவர்களே! சிவநேயர்களே!! மற்ற மதஸ்தர்களிருக்கட்டும். உங்களைப் பொருத்தவரை உலகம் தோன்றிய நாள் தொட்டு சைவ வைணவப் போட்டி நடந்து வந்து தற்காலம் அரசியல்கிளர்ச்சியில் உங்கள் எதிரிகளால் திரு. காந்தியைக் கொண்டு உங்கள் மதத்தை வீழ்த்தித் தங்கள் மதத்தை மதிப்புப் பெறவைத்துவிட்டார்களே! திரு. காந்தியவர்களின் உறைகல்லுக்கு உலகம் மதிப்புக் கொடுக்காமல் போகுமா? பாவம்! எல்லாம் காலவித்தியாசமே.

[தொடரலாம்.]

தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாடு பிறையார்.

புரொபசர் பி. எல். லக்ஷ்மிநரசு பி. ஏ., எல். டி., தலைவர்.

தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாடு பிறையாரில் 24, 25உ களில்கூடியது. மகாநாட்டுக்காக பிறையார் நாடார் ஹைஸ்கூல்கொட்டகையை மிகவும்சிங்காரிக்கப்பட்டிருந்ததுடன் வாழை முதலிய பச்சைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ரயிலடிமுதல் ஊர்முழுதும் ஆரங்களால் விளவுதட்டிகள் கட்டப்பட்டிருந்தன. தலைவர்களும் பிரபலஸ்தர்களும், மகாநாட்டு வரவேற்புத் தலைவராகிய பிறையார் திருவாளர் கனகசபை நாடார் அவர்கள் சகோதரர் திருஜம்புகேசம் அவர்களது விருந்தினர்களாக உபசரிக்கப்பட்டார்கள். தலைவர் திரு புரபசர் லக்ஷ்மிநரசு அவர்களும் அவர்களது மனைவியாரும் தனி ஜாகையில் இருந்தார்கள். மகாநாட்டுக்கு ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். செட்டிமார் நாட்டிலிருந்து சுமார் 10 பெண்மணிகளும் 10,15 செட்டியார்களும் விஜயம் செய்திருந்தார்கள். 24ந் தேதி பிற்பகல் 4 மணிக்கு வரவேற்புத்தலைவர் ஜாகையாகிய கும்பினித்தோட்டம் என்னும் டேனிஷ் கவர்னர் இருந்த பங்களாவிலிருந்து தலைவர்களை ஊர்வலமாக பாண்டுமேளவாத்தியங்களுடன் பிறையார் முக்கிய தெருவழியாக மகாநாட்டுப்பந்தலுக்கழைத்துச் செல்லப்பட்டார்கள். வழிநெடுக ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானபேர்கள் பெண்களும் ஆண்களுமாய்க்கலந்து கொண்டார்கள். ஊர்வலம்மகாநாட்டுப்பந்தலை அடைந்ததும் கூட்டம் சுமார் 1500 பேருக்குமேலாகவே கொட்டகையில் நிறைந்துவிட்டது. உள்ளூர்பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. கூட்டத்தின் முன்னிலையில் பிரசன்னமாய் இருந்தவர்கள் திருவாளர் காரைக்குடி சொ. முருகப்பர், மு. மரகதவல்லி, ராம சுப்ரமணியம், நீலாவதி, அள. அருணசலம், மனைவியாபுதல்விசகிதம், நா. முருகப்பா மனைவியும், இ. சிவம், என். வரதராஜன், சி. த. கதிரேசன், மு. ராம. சுப்பையா, சு. ப. விசாலாட்சி, ஆண்டியப்பா.

கோட்டையூர், ராம. அபு. சிதம்பரம் வள்ளியம்மை, சி. த. நித்தியானந்தம் தெய்வானை, பழனியப்ப செட்டியார், லெட்சுமணஞ் செட்டியார், ராம. சுப்பையா, நாராயணன் அம்பலம். கண்டனூர், ந. வீரப்பன், நாச்சியார்புரம் ப. ஜீவானந்தன், உரையூர் ச. ம. சி. பரமசிவம், ஸ்ரீரெங்கம், தா. காமாக்ஷியார், தா. துரைசாமியார், நா. ரெங்கனார், நகர் எஸ். ஆரோக்கியசாமி. பூவாலூர், நா. சு. மு. செல்வக்கணபதி (மனைவி) செல்லம்மாள். பல்லபுரம் மணிவாசகக்கழகத்தார், பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, குஞ்சிதபாதம், வரதராஜன், திருஞானசம்பந்தம். திருவாரூர் சாமிசிதம்பரனார், சௌரிராஜன். கும்பகோணம், சுப்பிரமணியபிள்ளை, மாயவரம் எஸ். ராமநாதன் எம். ஏ, பி. எல்., எஸ். சம்பந்தம், சி. நடராஜன், எல். வி. லிங்கம், நாராயணசாமி இராமாமிர்தத்தம்மாள், ஈரோடு ஈ. வெ. இராமசாமியார், ஸ்ரீமதி நாகம்மாள், நன்னிலம், தரங்கம்பாடி, சீர்காழி, தஞ்சை, திரிச்சி, காரைக்கால், அருப்புக்கோட்டை, நாகப்பட்டணம் முதலிய இடங்களிலிருந்து சுமார் 100 பிரதிநிதிகள் ஆக சுமார் 1500 பேர்கள்போல் மகாநாட்டுப்பந்தலில் கூடியிருந்தார்கள்.

குமரன் ஆசிரியர் திரு. முருகப்பா அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் உற்பத்தி, அதன்லட்சியங்கள், அதன் வளர்ச்சிக்கு இடையூறுகள், தாழ்ந்த வகுப்பினர் அடைந்துவரும் துன்பங்கள் முதலியவைகளைப் பற்றி [illegible]த்துரைத்து, இவைகளை நிவர்த்திப்பதே சுயமரியாதை இயக்கத்தின் நோக்கமென்றும், இதை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்றும், அடிக்கடி சந்தர்ப்பங்கள் நேர்ந்தபோது பலவிடங்களிலும் இவ்வித மகாநாடுகளைக் கூட்டவேண்டுமென்றும் கூறி மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

புதிய முறை சீர்திருத்த மணம்.

பொன்னம்பலனார் சுலோசனா.

திருவாளர் அ. பொன்னம்பலனார் அவர்களது திருமணமானது 24ந்தேதி மாலை5மணிக்கு பிறையார் நாடார் ஹைஸ்கூல் ஆலில் உயர்திரு. புரபசர்லக்ஷ்மி நரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமண ஒப்பந்தம் நடைபெறுவதற்கு முன் திரு. ஈ. வெ. இராமசாமி எழுந்திருந்து சிலவார்த்தைகள் சொன்னார்.

அதாவது சீர்திருத்த திருமணம் என்றும் சுயமரியாதைத்திருமணமென்றும் சொல்லப்படுபவைகளெல்லாம் எனது கருத்துப்படி பழைய முறையில் உள்ள அதாவது தெய்வீக சம்மந்தம், சடங்கு, இருவருக்கும் சம உரிமை இல்லாத கட்டுப்பாடு, நியாயவாழ்க்கைக்கு அவசியமில்லாத இயற்கை தத்துவத்திற்கு முரணான நிபந்தனைகள் ஆகியவைகளில் இருந்து விடுபட்டு நடைபெறும் திருமணங்களேயாகும். சுயமரியாதை இயக்கத்திற்குப் பின் இத்திருமணவிஷயத்தில் அனேகவித சீர்திருத்த மணங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அதாவது பார்ப்பனப் புரோகிதமில்லாத- அர்த்தமற்ற, அவசியமற்ற சடங்குகள் இல்லாத, புரோகிதமே இல்லாத, ஒரே நாளில், ஒரே மணியில் நடைபெறக் கூடிய வீண்செலவு இல்லாத முதலிய மாதிரியிலும் மற்றும் கலப்புமணங்களும், விதவைமணங்களும், குழந்தைகளுடன் விதவை மணங்களும், ஒரு கணவன் ஒரேகாலத்தில் இருபெண்களைவாழ்க்கைத் துணைவர்களாய் ஏற்றுக்கொண்டமணங்களும், மனைவியை புருஷனாத்துசெய்துவிட்டுவேறுபெண்ணை செய்துகொண்டமணங்களும் மற்றும் கிறிஸ்துவமதத்தில் ஒரு மனைவி ஏற்கனவே இருக்க அதைத் தள்ளிக் கொண்ட திருமணமும் மற்றும் பொட்டுக்கட்டி தாசித்தொழிலில் விடப்பட்ட பெண்கள் பொட்டுக்களை அறுத்து விட்டு செய்துகொண்ட மணமும் இப்படியாக பலவித சீர்திருத்த மணங்கள் இதுவரை நடைபெற்றுவந்திருக்கின்றன.

ஆனால் இந்த திருமணம் என்பதானது இதுவரை நடந்த சீர்திருத்த திருமணங்களையெல்லாம் விட ஒருபடி முன்னேறிய திருமணம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய மணமகளாகிய திருமதி சுலோசனா ஏற்கனவே திருமணம் நடந்து அந்தம்மையினுடைய கணவனார் இப்பொழுது நல்ல நிலையிலும் உத்தியோகத்திலும் இருந்து கொண்டிருக்கிறார். அப்படி இருக்க இந்தம்மைக்கு இப்போது முதல்புருஷன் இருக்கவே அவரிடமிருந்துவிலகி, இதுஇரண்டாவதாக செய்துகொள்ளும் சீர்திருத்த திருமணமாகும். இந்தத் திருமணம் முதல் புருஷனுடைய சம்மதப்படியே நடைபெறுவதாகும். பெண்ணின் தகப்பனாரும் மற்றநெருங்கிய பந்துக்களுடையவும் முழுச்சம்மதத்துடனேயே இது நடைபெறுகின்றது. பெண்ணின் தகப்பனார் இப்பொழுது ரூ 500, 600ரூபாய் சம்பளத்தில் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பதாக அறிகிறேன். பெண்ணின் தகப்பனார் பெண்ணுக்கு இந்த நகைகள் போட்டிருப்பதல்லாமல் இந்தமகாநாட்டுச் செலவுகல்யாணச்செலவுமற்றசெலவு ஆகியவைகள் அவராலேயே செய்யப்படுகிறது. பெண்ணின் சிறிய தகப்பனார் நேரில் இருந்து எல்லாக்காரியங்களையும் நடத்துகின்றார். அதனால்தான் இந்தத்திருமணம் இதுவரை நடந்த சீர்திருத்த திருமணங்களையெல்லாம் விட ஒருபடி முன்னேறிய திருமணம் என்று சொன்னேன். மணமகன் திரு. பொன்னம்பலம் அவர்களைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. அவர் "சைவவேளாளர்" வகுப்பு என்பதைச் சேர்ந்தவராயிருந்தவர். அவற்றையெல்லாம் அடியோடு ஒழித்து எவ்வித ஜாதிபேதம் இல்லாமல் சகலத்திற்கும் துணிந்து சுயமரியாதைத் தொண்டாற்றி வருபவர். பெண் ஸ்ரீவைணவர் என்று சொல்லப்படுவதும் சாத்தாதார் என்று சொல்லப்படுவதுமான வகுப்பைச் சேர்ந்திருந்தவர். அவற்றையெல்லாம் அடியோடு விட்டுவிட்டதுடன் இத்திருமண விஷயத்தில் அப்பெண்ணுக்கு வேறுயாரோ எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் பெரும் பெரும்பழிகள் கூறி அதன் புத்தியை கலைத்தும் அதற்கெல்லாம் முற்றிலும் ஏமாறாமல் தைரியமாய் இருந்து இத்திருமணத்திற்கு இசைந்தனர்.

ஆகவே இத்திருமணமானது நாம்விவாக முறையில் என்னென்ன விதமான கொள்கைகளை நமது இயக்கத்தின் மூலமாக சுப்பிரசாரம் செய்கின்றோமோ அவைகளில் முக்கியமானதொன்றும் ஆண் பெண் விவாக விஷயத்தில் ஏற்படும் சீர்திருத்தமே யென்னாட்டை—என் உலகத்தையே சமதர்ம மக்களாகச்செய்யக்கூடிய ஒரு முக்கியகருவியாக இருக்கும் என்று கருதுகிறேன், எனப்பேசினார்.

பின்னர் மகாநாட்டுத்தலைவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரமும், வரவேற்புக்கழகத்தின் சார்பில் பிரதிநிதிகளுக்கு வரவேற்புப் பத்திரமும், வரவேற்புக் கழகத்தலைவர் திரு. ஜெம்புகேசன் அவர்களால் வாசிக்கப்

பட்டு முடிந்ததும், மகாநாட்டின் தலைவர் உயர் திரு. பி. லட்சுமிநரசு அவர்கள் தமது சொற்பொழிவை நிகழ்த்தினார்.

தலைவர் உயர் திரு புரொபசர் P. லக்ஷ்மிநரசு அவர்களின் தலைமை உபன்யாசம்.

சகோதரிகளே! சகோதரர்களே!!

இந்த மகாநாட்டின் தலைமை வகிக்கும் பெருமையை எனக்குக்கொடுத்ததற்கும், இவ்வளவு பெரிய ஆடம்பரமாக என்னை வரவேற்றதற்கும், எனக்கு நீங்கள் வாசித்துக்கொடுத்த உபசாரப்பத்திரத்திற்கும் நான் எனது சந்தோஷத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சுயமரியாதை இயக்கம் என்பது என்ன என்பதாக கொஞ்சகாலம் எனக்கு விளங்காமலேயிருந்தது. அதன் வார்த்தைக்கு அர்த்தம் வெளிப்படையாகவே யாருக்கும் விளங்கும்படியாகவும், யாரும் கவனிக்கக்கூடியதாகவும் இருந்தாலும், அதனுடைய திட்டங்கள் என்ன என்பது எனக்குக் கொஞ்சகாலமாகத்தெரியாமலேயிருந்தது.

சுயமரியாதை இயக்கம் மனிதன் தன் வாழ்க்கையில் உள்ள பகுத்தறிவிற்கும், சமத்துவத்திற்கும் எதிரிடையானவைகளை ஒழிப்பதற்கு செய்யப்படும் ஒரு புரட்சி இயக்கமென்றேயுணர்ந்தேன். அறிவுடன் வாழ்க்கை நடத்துவதும், அவையெல்லாம் மக்களின் மகிழ்ச்சிக்கும், திருப்திக்கும், ஏற்றதாயிருப்பதுதான் வாழ்க்கையின் லட்சியமாயிருக்கவேண்டும். அவ்வித லட்சியத்தையடைவதற்கு மனிதனுக்கு எல்லாத்துறைகளிலும் அதாவது வாழ்க்கைச் சுதந்திரமும், செய்கை சுதந்திரமும் இருக்கவேண்டும். அறிவு வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமாயிருப்பவை மனிதனின் நடுநிலைமையிலுள்ள ஆலோசனைகளும் அனுபோகங்களுமேயாகும். ஆகையால், சமது வாழ்க்கையின் ஈடேற்றத்திற்கு நமக்குள் ஏற்கனவே புகுத்தப்பட்டிருக்கும் மூடப்பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் அலசிப்பார்க்கவும், அறிவுக்கும், அனுபோகத்திற்கும் முரண்பட்டவைகளை நீக்கவும் சுதந்திரங்களிருக்கவேண்டும். அறிவுக்கு முரணான மூடக்கொள்கை முதலியவைகளுக்கு ஜாதி வித்தியாசம், மதங்கள், தரித்திரம், தேசாச்சாரம், எதேச்சாதிகாரம், புரோகித ஆட்சி, அன்னிய ஆட்சி யுத்தங்கள் முதலியவைகள் அடிப்படையான ஆதாரமானவைகளாகும்.

சுயமரியாதை இயக்கமானது இத்தனை இடையூறுகளையும் தாண்டிச் சென்று மக்களுக்கு சுதந்திரத்தையுண்டாக்குவதே நோக்கமுடையதாகயிருக்கவேண்டும். இவைகள் முடியாதவைகள் போல் தோன்றினாலும், நமது முயற்சியானது அறிவைக்கிளப்பி, கல்வியை யூட்டிவிட்டால் தானாகவே சீக்கிரத்தில் எழுந்து போய்விடும். முதலாவதாக, மததிற்கும் அரசியலிற்கும் சம்பந்தமில்லாமல் செய்யவேண்டும். மக்களின் வறுமையைப் போக்குவதற்கு வழி செய்யவேண்டும். உலகத்திலுள்ள நாடுகளிலெல்லாம் நமது நாடே மிகுதியும் புரோகிதர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடாகும். இந்துமதமென்பதே புரோகிதஆட்சிக்கு உட்படுவதுதான். 'ஹிந்து' என்றாலே 'பிராமணனுடைய அடிமை' யென்றுதான் பொருள். ஒரு ஹிந்து, வேதம் படித்தாலும் வேதாந்தியானாலும் பார்ப்பனன் காலில் விழுந்தே தீரவேண்டும். சிரார்த்தமென்பது பிராமணர்கள்மூலமே செய்தாகவேண்டும். பிராமணனையும் பசுவையும் வணங்குவதே ஹிந்துவின் முக்கியகடமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. புரோகிதர்களுடைய ஆட்சி இருக்குமிடங்களிலெல்லாம் மனிதனுடைய பாவங்களுக்கு பரிகாரமும், பிராயச்சித்தமும் இருந்தே வரும். மனிதனுடைய வாழ்க்கையின் முக்கியதத்துவமெல்லாம் பரிகாரமும், பிராயச்சித்தமுமாகவே முடியும். ஆகையால் புரோகிதர்களை ஒழித்து பார்ப்பனீய அடிமைத்தனமாகிய ஹிந்துமதத்திலிருந்து மக்களை விலக்குவதே சுயமரியாதை இயக்கத்தின் முக்கியக்கொள்கையாயிருக்கவேண்டும். இதற்கு பெறும் படிப்பு மட்டும் பயன் தராது. பகுத்தறிவை பிரதானப்படுத்தும்படியான பிரசாரம் பொது ஜனங்களிடையில் நடைபெறவேண்டும்.

ஒரு காலத்தில் சாணிக்கு அதிக மதிப்பு கொடுப்பதைபற்றி படித்தவொருவர் முன்னால் நாம் பரிகாசம் செய்தபொழுது, அவர்சாணியை "அதுஒரு வியாதி பூச்சிகளைக்கொல்லும்படியான சக்தியுடையதல்லவா" என்று கேட்டார். சிறிதும் பூச்சிக்கும் சாணிக்குமுள்ள சம்மந்தத்தை ஆராயாமலே பேசிய பேச்சாகும். மற்றொரு சமயம் கிரஹணத்தைப்பற்றி பேசும்போது சூரிய, சந்திர கிரஹணங்கள் நிழல்களின் காரணமாய் தோன்றப்படுகின்றனவென்று நான் கூறியபொழுது வானசாஸ்திரம் படித்த ஒரு பார்ப்பனர் உடனே கோபித்து "அப்படியானால், பெரியவர்கள் எழுதிவைத்திருக்கிற இராகு, கேது சம்பந்தமான விஷயங்களெல்லாம் பொய்என்று சொல்லுகிறீர்" என்று என்னைக்கேட்டார். மற்றொரு சமயம் சிரார்த்தத்திற்காக கொடுக்கப்படும் பொருள்கள் எங்கேபோகின்றதென கேட்டபொழுது "வையெல்லாம் மேல்நாட்டு நாகரீகத்தின் பலனல்லவா?" என்று கோபித்துக்கொண்டான். இப்படியே அநேக விஷயங்கள் சிறிதும் பகுத்தறிவிற்கும், அனுபோகத்திற்கும் ஒவ்வாத முறையில் நடைபெற்று வருகிறது. ஒருமனிதன்தன்னை "ஹிந்து" என்று சொல்லிக்கொண்டிருக்கும் வரையில் தனது அறிவை பறிகொடுத்துவிட்டு, மூடநம்பிக்கைக்கு ஆளாகி பார்ப்பனனுக்கு அடிமையாகவேயிருந்து தீரவேண்டும். உண்மையான விடுதலைபெற்று சுயமரியாதையுடன் நாம் வாழவேண்டுமென கருதினால் இந்துமதத்தை பகுதி, பகுதியாக தாக்கிக்கொண்டு, சீர்திருத்தம் செய்யவேண்டுமென சொல்லிக்கொண்டிருப்பதில் ஒரு பயனுமே ஏற்படாது. இந்துமதம் என்பதையே அடியோடு தகர்த்து ஒழித்தால் அல்லது நாம் முன்னேறமுடியாது என்பதையுணருங்கள். இந்துமதத்திற்கு ஆதாரமாயிருக்கும் மற்றொரு விஷயத்தையும் சொல்லுகிறேன். பிசாசுகள், ஆன்மாக்கள், இறந்தபின் அடையும் வாழ்க்கைகள் இவையெல்லாம் இந்து மதத்தின் அடிப்படையும் புரோகிதர்களுக்கு ஆக்கமளிக்கக்கூடியவைகளுமான கட்டுப்பாடுகளாகும். புத்தமதத்தில் இவ்வித கொள்கைகள் இல்லாததால், அது பல மதங்களுக்கு விரோதமானதாகக் கருதப்படுகிறது. ஆன்மா நம்பிக்கையானது எல்லாவித மூட நம்பிக்கைகளையும்விட, மூடத்தனமானதோடு, மூடத்தனத்தை மேன்மேலும் விருத்திசெய்யவும் ஆதாரமானது.

எவனொருவன் ஆன்மாவில் நம்பிக்கை கொள்ளுகிறானோ அவன் தனது சரீரம் இம்சைப்படுவதும், மற்றவர்கள் சரீரம் இம்சிக்கப்படுவதையும் பற்றிய கவலையற்றவனாகிறான். விஞ்ஞான ஆராய்ச்சிபடி ஆன்மாவை கண்டுபிடிக்கமுடியாது. உடல்வேறு, ஆத்மாவேறு என்று பிரிவுபடுத்த விஞ்ஞான சாஸ்திரத்தில் இடமில்லையென்று அநேக விஞ்ஞான சாஸ்திரிகள் கூறுகின்றனர். மனிதனுக்கு ஆத்மாவினிடத்திலுள்ள நம்பிக்கையே அதிக ஆசைக்கும், கவலைக்கும் இடங்கொடுக்கிறது. ஆன்ம நம்பிக்கையில்லாவிட்டால் கடவுள் நம்பிக்கைகூட மக்களுக்கு ஏற்பட நியாயமில்லை. ஆத்மா ஒன்று இருப்பதாக கருதுவதாலேயே சிருஷ்டி ஒன்று இருக்கவேண்டுமென கருதுகிறான். அப்பொழுது கடவுளை யேற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமுள்ளவனாகிறான். ஆகையால் சுயமரியாதைக்காரர்கள் "ஆத்மாவென்பது கிடையாது. சரீரத்திற்காகவும், சந்தோஷத்திற்காகவும், திருப்திக்காகவும்உழையுங்கள்" என்றுகூறி, மக்களை சுதந்திரமுடையவர்களாகவும், மூட ஆசையற்றவர்களாகவுமாக்கவேண்டும். ஆன்ம நம்பிக்கையானது சுவர்க்கம், நரகம், அவற்றிற்கு கடவுள் தயவு, முன்பிறப்பு, பின் பிறப்பு அவைகளுக்கு பிராயச்சித்தம், பந்தோபஸ்து முதலியவைகள் செய்து கொள்ளவேண்டிய வேலைகளை மனிதன் கடமையாக ஏற்பட்டு விடுகிறது. ஆத்ம நம்பிக்கைக்கார ஹிந்துக்கள் தங்கள் குடும்பங்களில் யாராவது நோய்வாய்ப்பட்டால் சாகும்வரையில் அவர்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகளைப் பற்றி கவலைகொள்ளாமல், அவர்களுடைய விதியின்மீது பழியைபோட்டு, இருந்துவிட்டு, இறந்தபிறகு அவரது ஆத்மாவை மோக்ஷத்திற்கு அனுப்புகிறவேலையில் அளவுக்குமீறிய சிறத்தையும், அனாவசியமான செலவுகளும் செய்து அதிக மெனக்கேட்டை அடைகிறார்கள். இந்த ஆத்மா நம்பிக்கையிலும், கடவுள் நம்பிக்கையிலுமுள்ள மூட நம்பிக்கையே மனிதனை அரசியல்விஷயத்திலும் நடத்தி, உண்மையான ஜனநாயக ஆட்சியை மறைத்து, ஏகநாயக ஆட்சியில் கொண்டு போய்விடுகிறது. ஆகவே கற்களையும், மரங்களையும், பிசாசுகளாகவும், பூதங்களாகவும், கடவுள்களாகவும் வணங்கும் மூடபக்தி, அறியாமை ஆகியவைகள் ஒழியவேண்டுமானால் ஆன்ம நம்பிக்கையென்பது அடியோடு ஒழிந்தாகவேண்டும். இன்றைய தினம் இந்துக்கள் கடவுள்கள் என்று சொல்லப்படுபவை அநேகம் உயிருடனிருந்து இறந்துபோனவர்களின் ஆத்மாக்கள் என்றும், கடவுளின் அம்சமே ஆத்மாவாகவிருந்த மனிதர்களின் ஆத்மாக்களென்றும் சொல்லிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். எல்லாமதங்களிலும் ஆத்மா சம்பந்தமான பிராயச்சித்தங்கள், பாவமன்னிப்புகள், தீர்ப்பு நாட்கள், ஆத்ம தினங்கள் (*All Souls' Day*) முதலிய மூட நம்பிக்கைகள் இருந்துகொண்டுதான் வருகிறது. ஆத்மாவே இல்லையென்றும், கடவுள் சிருஷ்டியே இல்லையென்றும் மக்களுக்கு விளக்கவந்த புத்ததருமங்களை பின்பற்றுவதாக சொல்லிக்கொள்ளும் ஜனங்களிடத்திலும், "பிக்குக்கள்" என்று சொல்லிக்கொள்ளுகிற பௌத்த புரோகிதர்கள் தாகு வாங்கிக்கொண்டு ஆத்ம சாந்தி செய்ய புறப்பட்டுவிட்டார்களென்றால், மூட நம்பிக்கைக்கு ஆத்ம நம்பிக்கை எவ்வளவு ஆதாரமாயிருக்கின்றதென்று தெரியவரும்.

கர்மா.

கர்மா என்னும் கொள்கையானது மக்களின் ஜாதிவித்தியாசத்தையும், உயர்வு-தாழ்வு தன்மையையும் நிலைநிறுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதேயாகும். கீழ் ஜாதி-மேல் ஜாதி என்பதற்கும், பல்லக்கு ஏறுகிறவன்-தூக்குகிறவன் இருக்கவேண்டுமென்பதற்கும் காரணத்தையும், தகுதியையும் மக்களை கவனிக்காதிருக்க செய்வதற்கே கர்மம் என்னும் கொள்கை பயன் படுத்தப்பட்டுவருகிறது. அது போலவே, மறுபிறப்பு என்னும் விஷயமும் அக்காலத்து காட்டுமிராண்டித் தன்மையிலிருந்த மக்களால், தங்கள் மூதாதைகள் நாயாகவோ, பூனையாகவோ போன ஜன்மத்திலிருந்தார்களென்று கருதிக்கொண்டு தங்களுடைய அறிவற்ற தன்மைக்கெல்லாம் சமாதானம் செய்துகொண்ட சாக்கு போக்குகளே இன்றும் ஒரு பெரிய தத்துவமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாம் பார்ப்பனர்களாலேயே தங்கள் சுயநலத்தின் பொருட்டு காப்பாற்றப்பட்டு வருகிறதென்பது மிகையாகாது.

பெண்கள்:

பெண்களுக்கு வாழ்க்கையில் இழிவைக் கற்பிக்கப்பட்டதும் பார்ப்பனர்களின் சூழ்ச்சியேயாகும். பெண்களை, பார்ப்பனர்கள் தங்கள் சமூகப் பெண்களுட்பட எல்லாப் பெண்களையுமே இழிவுபடுத்தி, அவர்களுக்கு யாதொரு சுதந்திரமும் கொடுக்காமல் அடிமைப் படுத்தப்பட்டிரு

ப்பதற்குக் காரணம் என்னவென்றால், இந்த நாட்டுக்குப் பார்ப்பனர்கள் வந்தகாலத்தில் அவர்கள் வெறும் ஆண்களாகவே வந்ததால், இங்குள்ள பெண்களை கல்யாணம் செய்துகொள்ள வேண்டியவர்களானார்கள். அதற்காதாரமாகவே, மேல்ஜாதிக்காரர்கள் எந்தக் கீழ்ஜாதி வகுப்பிலும் கலியாணம் செய்து கொள்ளலாமென்றும் சாஸ்திரம் எழுதிவைத்துக்கொண்டார்கள். இக்காரணங்களால் பார்ப்பனர்கள் தங்களைத்தவிர வேறு பல ஜாதிகளில் பெண்களை ஜோடி சேர்த்துக்கொண்டதால் அவர்களுக்குத் தங்களுக்குரிய சமமான சுதந்திரத்தை கொடுக்க இஷ்டப்படாதவர்களாகி விட்டார்கள். அன்றியும், அவர்கள் வயற்றில் பிறக்கும் ஆண்களைமாத்திரம் தங்களுடன் சேர்த்துக்கொண்டு, பெண்களை கீழ் ஜாதியென்றே தீர்மானித்துவிட்டார்கள். அவர்கள் இங்குவந்த காலத்தில் வானசாஸ்திரப்பயிற்சியும், சிறிது வெள்ளைத்தோலுடனுமிருந்ததால், அதைக்கொண்டே தங்களை உயர்ந்தவர்களெனவும், பிறரால்மதிக்கத்தகுந்தவர்களெனவும்செய்து கொண்டார்கள். ஆதியில் அவர்கள் இங்குவந்த போது இங்குள்ளவர்களுடன் சமபந்தி போஜனம் முதலியவைகள் வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்களென்றாலும் தங்கள் குடும்பங்கள் பெருகி, தங்களுக்கு போதுமானவரை, தங்களிலேயே பெண்களும் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டவுடன் பிறர்கூட்டத்திலிருந்து தாங்கள் விலகி, தங்களை உயர்ந்தவர்களென சொல்லிக் கொள்ள புரப்பட்டு, தங்கள் உயர்வை நிலைநிறுத்திக் கொண்டார்கள். ஆனபோதிலும், இப்பவும் தாங்கள் மாத்திரம் எந்தக்குலத்திலும் பெண் எடுக்கலாமென்றும், ஏற்பாடு செய்து கொண்டு, தங்கள் குலத்தில் எவனாவது பெண் எடுத்தால் அது மகா பாவமென்று எழுதி வைத்திருப்பதோடு, அதற்குப் பிறந்த குழந்தைகளும் சண்டாளர்களாவார்களென்றும் சொல்லி, பயப்படுத்தி, தங்கள் பெண்களை வெகு பந்தோபஸ்து செய்து கொண்டார்கள். இதற்கெல்லாம் கர்மத்தையும், ஆத்மாவையுமே காரணங்களாக சொல்லி சமாதானப்படுத்தி விடுவார்கள். ஆத்மா எப்படி தோன்றிற்று என்று கேட்டால், அது ஆதியிலேயே தானே அரூபமாய் தோன்றியதாகவும், பின் கல்லிலும், புல், பூண்டு, மரத்திலும், பிறகு புழு, பூச்சி, மிருகங்களிலும் தோன்றி, மனிதவர்க்கத்தில் சண்டாளரிடத்தில் வந்து சேர்ந்து, பிராமணர்களின் கட்டளைப்படிக்கு அதாவது வருணாச்சிரம தருமப்படிக்கு தவறாமல் நடந்து வந்தால், அநேக ஜன்மங்களுக்குப் பிறகு சூத்திரனாகவும், பிறகு அநேக ஜன்மங்கள் கழித்து வைசியனாகவும், பிறகு அநேக ஜன்மங்கள் கழித்து க்ஷத்திரியனாகவும், பிறகு அநேக ஜன்மங்கள் கடந்து யுத்த பிராமணனாகவும், பிறகு காயத்ரி பிராமணன், வேத பிராமணன் கடைசியாய் வேதாந்த பிராமணன் ஆகலாமென்றும் கற்பித்துக் கொண்டார்கள். இவற்றிற்கெல்லாம் கர்மக் கொள்கையானது அவர்களுக்கு மிகவும் உதவி அளித்துக்கொண்டு வருகிறது.

ஆனால், புத்தர் தோன்றி, இவைகளையெல்லாம் கண்டிக்கப்புரப்பட்டபின், இந்தபிராமணாகள்பக்திமார்க்கம் என்றஒன்றை சிருஷ்டித்து, அதுபகவான்சொன்னாரென்றும், அதற்குப் பெயர்தான் பகவத்கீதையென்றும் சொல்லி, மக்களுக்கு அதையேவேதாந்தசாஸ்திரமாகவும், தத்துவ சாஸ்திரமாகவும், வாழ்க்கையின் தர்மசாஸ்திரமாகவும் செய்து விட்டார்கள். கீதையில் சொல்லப்படுவதில் முக்கியமென்னவென்றால் ஜாதி தர்மத்தை விட்டு விடாதீர்கள். மனிதன் அவனவனுடைய ஜாதி தருமத்தை விட்டால் கண்டிப்பாய் நரகம் கிடைக்கும். ஏனென்றால் அவை என்னால்சிருஷ்டிக்கப்பட்டவை. "சாதுர்வர்ணயம்—மயா இஷ்ருஷ்டம்—குணகர்ம விபாகசா" அதாவது உனக்கு ஞானம் தோன்றி, சேராகவே முக்தி தோன்றிடினும் இதர மக்கள் கெட்டுப் போகாதிருப்பதற்காக நீ உன் ஜாதி தர்மத்தை விடுவிடாதே" யென்று பகவான் சொல்லுவதாக குறித்துக்கொண்டார்கள். "இப்படி சிருஷ்டிக்கப்பட்ட ஜாதிகளும்; ஆத்மாக்களின் முன்ஜன்மங்களினுடைய அவைகள் செய்த கர்மங்களாலும் அதற்குத் தகுந்தபடி நான் சிருஷ்டித்திருக்கிறேன்" என்று ஒரு சுலோகத்தையும் எழுதிவைத்துக் கொண்டார்கள். இப்படியெல்லாமிருந்தாலும், எல்லாப்பார்ப்பனர்களும், ஜாதிகர்வத்தை கொண்டிருக்கிறார்களேயொழிய அதற்குத்தகுந்தபடி நடக்க முடியாதென்பதை நன்றாயறிந்தவர்களாவார்கள். அவர்கள் அநேக விஷயங்களில் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் தங்கள் ஜாதி தருமத்தை நிராகரித்துக்கொண்டுதான் வருகிறார்கள். வெளிப்படையாய் மாத்திரம் ஜாதி தருமத்தைவிட்ட பிராமணர்கள் என்று தங்களை அவர்கள் சொல்லிக்கொள்ளுவதில்லை. மேல் நாட்டுக்குப்பிரயாணம் சென்று வந்த ஒரு பார்ப்பனப்பிரயாணியை பம்பாயில் நான் தங்கியிருந்த ஒரு ஓட்டலில் பார்த்தேன். அவரை நான் சந்தித்துப் பேசியபோது நீங்கள் நேரே ஊருக்குப் போகாமல் இங்கு ஏன் இந்த ஓட்டலில் தங்கியிருக்கிறீர்களென்று கேட்டேன். அவர் பார்ப்பன வேஷம் போட்டுக்கொண்டு போவதற்காக இங்கு இறங்கினேன். அதாவது பூணூல், பொட்டு, சவரம் முதலியவைகள் செய்து கொண்டு போவதற்கு இங்கு தாமதித்திருப்பதாகச் சொன்னார்.

அவதாரம்.

கடவுள் ஒன்பது அவதாரங்களெடுத்தாரென கற்பிக்கப்பட்டிருப்பது பார்ப்பனர்களின் கட்டுக்கதைகளேயாகும். அஸ்திவாரமே சிறிதுமில்லாமலும், அறிவுக்கும், அனுபோகத்திற்கும் பொருத்தமான விஷயங்கள் கொஞ்சமுமில்லாமலும், இயற்கைக்கு விரோதமானதும், அநாகரீகமானதுமான கதைகளைக் கட்டி அதைக்கடவுள் செயலென கற்பித்து மக்களை நம்பச்செய்துவிட்டார்கள். இதை சாதாரணமாக எடுத்துச்சொல்லுவதென்றாலும் எவ்வளவு சிரமமிருக்கின்றதென்பதையும், எவ்வளவு எதிர்ப்புகளிருக்கின்றதென்பதையும் யோசித்துப்பாருங்கள். இவற்றால் புத்தரையும் ஒரு அவதாரமாக சேர்த்துக்கொண்டிருப்பதானது உவமை சொல்லுவதற்கில்லாத ஒரு பெரிய சூழ்ச்சியாகும். இப்பேர்ப்பட்ட ஒரு அபாரமான வேலையை மேல்போட்டுக்கொண்ட இவ்வியக்கத்தலைவர் திரு. ஈ. வெ. இராமசாமியை நான் மிகவும் போற்றுகிறேன் என்பதோடு இது மிகவும் கஷ்டமான வேலையென்பதையும்எடுத்துச்சொல்லுகிறேன். மகாத்மா காந்தி கர்மா, ஆத்மா, கடவுள், அவதாரம் ஆகிய அளவுக்கு மீறிய மூடக்கொள்கைகளையுடையவர் ஆனால், தரித்திரம், அரசாங்கத்தின் கொடுமை ஆகியவைகளால் நமது அறிவு தெளிவடைய மார்க்கமில்லாதிருந்து வருகிறது. மதக்கொடுமையும், அரசாங்கக்கொடுமையும், இந்தியாவை கொள்ளை கொண்டு கொண்டேயிருக்கின்றன. அரசாங்கமானது அன்னிய அரசாங்கமென்றாலும், அதன் நிர்வாகப்பொறுப்பு முழுவதும் இந்திய மக்களால்தான் நடைபெற்றுக்கொண்டு அன்னியநாட்டிற்கு உதவி செய்து வருவதை பொதுஜனங்கள் உணருவதில்லை. இவைகளை உணரும்பொழுது நமது மூடநம்பிக்கையும், அதனால் ஏற்படுவதும் கஷ்டமும் எவ்வளவென்பது நன்றாய் விளங்கும். நமது நாட்டில்படித்தவர்களென்பார்கள்தான் அன்னிய ஆட்சிக்குக்காரணஸ்தராவார்கள். ஆதலால் உண்மையான கல்வி அறிவும், அதைப்பொறுத்து ஏற்படும் சமதர்ம ஆட்சி உணர்ச்சியும் நமக்கு ஏற்படாத வரையில் எவ்வித முன்னேற்றத்தையும் நாம் அடையமுடியாது என்று பேசினார்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

மறுநாட்காலை 9-மணிக்கு மகாநாடு கூடியதும் மகாநாட்டில்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன:—

1. திராவிடன் பத்திராதிபர் உயர்திரு மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களின் அகாலமரணத்தைக்குறித்து அனுதாபம் காட்டுவதாகவும்,

2. தீண்டாமையும் ஜாதிவித்தியாசமும் ஒழியவேண்டுமானால் அதற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும் இந்து மதம் என்பது ஒழிக்கப்படவேண்டியது மிக்க அவசியமாகுமென்றும்,

3. மக்கள் சமதர்மமும் உண்மையான சுதந்திரமும் பொதுவுடமை தத்துவமும் அடைய வேண்டுமானால் அதற்குஇடையூறாகவிருக்கும்கடவுள் நம்பிக்கையும் அதன்மீது பொறுப்பு சுமத்தும் உணர்ச்சியும் ஒழிக்கப்பட்டாகவேண்டுமென்றும்,

4. பெண்கள் உண்மையான விடுதலையும், சுதந்திரமும், சமதர்மஒழுக்கமும் அடைய வேண்டுமானால் அதற்கு இடையூறாயிருக்கும் பிள்ளைகளைப் பெறுதல் என்னும் கர்ப்பத்தை அடக்கி, ஆளவேண்டுமென்றும்,

5, தூத்துக்குடிதீர்மானத்தை உறுதிப்படுத்துகிற முறையில் பகத்சிங்கின் தியாகத்தை மறுபடியும் பாராட்டுகிறதென்றும்,

6. கும்பகோணம் பார்ப்பனர்கள் தெருக்கூட்டுவதற்குக்கூட கும்பகோணம் முனிசிபாலிட்டியார் தீண்டப்படாதாரென்பவர்களை நியமனம் செய்யாமல் ஜாதி இந்துக்களை நியமிக்கவேண்டுமென்று முனிசிபாலிட்டியாரைக்கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டித்தும்,

7. கோபிசெட்டிபாளையத்திற்கு அடுத்த கூகலூர் கே. சுப்பணகவுண்டர் அவர்கள் தனது தோட்டத்துக் கிணற்றை தீண்டாதார்களென்று சொல்லப்படும் சகல வகுப்பார்களுக்கும் உபயோகித்துக்கொள்ள தாராளமாய் விட்டு விட்டதோடு, தாங்களும், தங்களது நெருங்கிய பந்துக்களும் அக்கிணற்றையே உபயோகித்துக்கொண்டு வருவதைப் பாராட்டுவதாகவும்,

8. மாகாணத்திற்கென்று சுயமரியாதை பிரசாரக் கமிட்டியொன்று ஏற்பாடு செய்யவேண்டுமென்றும்,

9. மலையாளத்தில் தீண்டப்படாதார் நடக்கக்கூடாத சில தெருக்களுக்கு போர்டு எழுதி தொங்கவிட வேண்டுமென்று தீர்மானம் செய்த மலையாள ஜில்லா போர்டாரை கண்டிப்பதாகவும்,

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேல்கண்ட தீர்மானங்களின்மீது பேசியவர்கள்:--திருவாளர்கள் எஸ். ராமநாதன், சாமிசிதம்பரனார், செல்வக்கணபதியார், திருஞானசம்பந்தம் தமிழ் பண்டிதர், நீலாவதியம்மை, மரகதவல்லியம்மை, அழகிரிசாமி, ஈ. வெ. இராமசாமி, சி. நடராஜன், கும்பகோணம் சுப்பிரமணியபிள்ளை, ராமாமிர்தத்தம்மாள், ராமசுப்பிரமணியம், சொ. முருகப்பா முதலியவர்களாவார்கள்.

(தலைவர் முடிவுரை, அடுத்த வாரம் வெளிவரும்)

மாலையில் சமுத்திரக்கரையில் கூட்டம்:

திருஞானசம்பந்தர்.

பிறகு, மாலை 7 மணிக்கு தரங்கம்பாடி சமுத்திரக்கரையில் நாடார் பங்களாவிற்கு எதிராக ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

குடி அரசு

1931௵ மே௴ 31௳

தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டு தீர்மானங்கள்.

——:0:——

இம்மாதம் 24, 25-ம் தேதிகளில் பிறையாற்றில்நடந்த தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமாகக் கருதப்படுவதும், பலருக்கு திடுக்கிடும்படியான அளவுக்கு பிரமாதமாய்க் காணப்படுவதுமான தீர்மானங்கள் மூன்று.

அதாவது,

1. "மக்களுக்குள் இருந்துவரும் தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் அடியோடு ஒழிக்கப்படவேண்டுமானால் அதற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும் 'இந்துமதம்' என்பது அழிக்கப்படவேண்டியது மிக்க அவசியமாகும்".

2. "மக்கள் உண்மையான சுதந்திரமும், சமதர்மமும், பொதுவுடமைத் தத்துவமும் அடையவேண்டுமானால் அவற்றிற்குஇடையூறாகவிருக்கும்கடவுள் நம்பிக்கையும், எதற்கும்அதையே பொறுப்பாக்கும் உணர்ச்சியும் ஒழிக்கப்படவேண்டியது அவசியமாகும்".

3. "பெண்கள் ஆண்களைப்போன்ற விடுதலையையும்,சமதர்மஒழுக்கத்தையும், சுதந்திரத்தையும் அடையவேண்டுமானால் அவற்றிற்கு தடையாயிருக்கும் பிள்ளைப்பேற்றை [கர்ப்பத்தை] அடக்கி, ஆளவேண்டியது அவசியமாகும்"

என்பவைகளாகும்.

ஆகவே இதன் கருத்து மத உணர்ச்சி, கடவுள் உணர்ச்சி ஆகியவை மக்கள் வாழ்க்கைக்குள் புகுந்து கொண்டு இருக்கக் கூடாதென்பதேயாகும்.

பொதுவாக நமது நாடானது உண்மையான விடுதலையும், சுதந்திரமும், சமதர்மமும் அடைவதற்கு நாம் வெகுகாலமாகவே மேல்கண்ட இம்மூன்று தன்மைகள் அதாவதுமக்களுக்குள் தீண்டாமை ஒழிவதும், ஜாதி வித்தியாசம் நீங்குவதும், பொருளாதார சமதர்மம் ஏற்படவேண்டுமென்பதும், பெண்கள் விடுதலையும், சம உரிமையும் அடையவேண்டுமென்பதையுமே முக்கியமாய்ச் சொல்லி வந்திருக்கின்றோம். இதை அன்று முதல் இன்றுவரை மறுப்பவர்கள் — மறுத்தவர்கள் யாருமில்லை. ஆகவே இம்மூன்று காரியங்களும் ஏற்படவேண்டுமென்று உண்மையாயும், யோக்கியமாயும் விரும்பும்—ஒப்புக்கொள்ளும் ஒவ்வொருவரும் அவற்றிற்கு இடையூறுகளாயிருப்பவைகளை ஒழிப்பதின் மூலம் தான் அவைகளை அடைய முடியுமென்பதை ஒப்புக்கொண்டே தீருவார்கள்.

இந்நிலையில் பார்த்தோமானால் நமக்கு தீண்டாமைக்கும், ஜாதி வித்தியாச உயர்வு—தாழ்வுக்கும் ஆதாரமாக "நமது மதம்" என்று சொல்லப்படும் "இந்துமதம்" என்பதாக ஒன்று இருந்து கொண்டு தான் முட்டுக்கட்டையாக இருக்கின்றதே யொழிய, வேறொன்றுமில்லை.

இந்து மதம் என்பதின் ஜீவநாடியே தீண்டாமையும், ஜாதி வித்தியாசமுந்தான் என்பதை, "இந்து மத" சம்பந்தமான ஒரு சிறிது ஞானமுள்ள மக்களும் உணருவார்கள்.

அன்றியும், இன்றைய தினம் தீண்டாமையையும், ஜாதிவித்தியாசத்தையும் ஒழிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருப்பவர்களானநமது எதிரிகள்எதை பிரதானமாய்ச் சொல்லுகின்றார்களென்றால் "இந்து மதத்தை" த்தான்பிரதானமாய்ச் சொல்லுகின்றார்கள்.

ஆகவே இந்த மதத்தின் நிழலில் தான் தீண்டாமையும் ஜாதி வித்தியாசமும் அடைக்கலம்புகுந்து கொண்டிருக்கின்றதே யொழிய வேறு எவருடைய பலத்தாலும் ஆதாரத்தாலும் அவை இருக்கவில்லை. அன்றியும் ஜாதி வித்தியாசத்தைக்காப்பாற்றுவதுதான் இன்று இந்து மத சம்பிரதாயமாக இருக்கின்றதே யொழிய, வேறு ஒரு காரியமும் இந்துமதத்தின் அனுபவமாய் எந்தஇந்துமக்களிடமுமில்லை என்பதும் அனுபவ ஞானமுள்ள யாவரும் நன்றாய் அறியலாம்.

முதலாவது, இந்த ஜாதி வித்தியாசம், தீண்டாமை ஆகியவைகள் அனுபவத்திலிருப்பது தான் இந்து மதம் என்பதைத்தவிர, மற்றபடி இந்து மதம் என்றால் என்னவென்று இந்துக்கள் என்பவர்களில் கோடிக்கு ஒருவராவது விளக்க முடியுமா? அல்லது தங்களுக்காவது தெரியும்படி விளக்கிக் கொண்டிருக்கின்றார்களா? என்று பந்தயம் கூறிகேட்கின்றோம். வார்த்தையளவு அல்லாமல் கருத்தளவில் யாருக்காவது விளங்குமா? விளங்கியிருக்கின்றதா? என்றும் கேட்கின்றோம்.

தவிரவும், இந்து மதம் என்று சொல்லப்படுவதற்கு ஆதாரமென்று சொல்லக்கூடியதும், இந்துக்கள் என்ற தலைப்பின் கீழ் கட்டுப்பட்ட மக்களில் 100க்கு 25 பேராவது தெரிந்து, ஒப்புக்கொள்ளக்கூடியதுமான ஆதாரமோ, தர்மமோ, கொள்கைகளோ, கோட்பாடுகளோ எதுவுமில்லையென்று நம்மால் தைரியமாய்ச் சொல்லக்கூடுமானாலும், ஒரு சமயம் வேறு யாராவது இருப்பதாகச் சொல்லி கட்டாயப்படுத்தி மக்களை ஒப்புக்கொள்ளச் செய்யும் எந்த ஆதாரத்திலாவது தீண்டாமையையும், ஜாதி வித்தியாசத்தையும் வற்புறுத்தாத ஆதாரமோ, தருமமோ, கொள்கையோ, கோட்பாடோ இருக்கின்றதா யென்றும் கேட்கின்றோம். இஸ்லாம் மதத்திற்கு குர்ஆன், கிறிஸ்துவ மதத்திற்கு பைபிள் என்பவை இருப்பது போல் இந்து மதத்திற்கு என்னயிருக்கின்றது என்பதாக இந்துமத அபிமானிகள் யாராவது சொல்ல முடியுமா? இந்துக்களுககு மேற்கண்டதைப்போன்றஒருவேதமிருக்கின்றதா? இருந்தால்அதுஇந்துக்களென்பவர்கள் தெரியககூடியதா? அது இந்துக்கள் என்பவர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடியதா? என்று கேட்பதோடு இந்து மதத்தைக் காப்பாற்றக் கவலைக்கொண்டவர்கள் என்பவர்களாவது அதில் உள்ளவற்றிற்கு கட்டுப்பட சம்மதிப்பார்களா? என்பதின் மூலம் தான் ஒரு மதத்தின் ஆதாரமின்னதென்பதை நிச்சயிக்க முடியுமே யொழிய, மற்றபடி எவருக்கும் புரிவிக்கப்பட முடியாமலும், தங்களுக்கே புரியாமலும் பேசுவதில் யாதொரு பயனும் ஏற்படாதென்பதுடன் இந்த நிலையில் உள்ள இந்துமத சம்பந்தமான வக்காலத்தே பரிகாசத்திற்கு இடமாகுமென்பதையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

இந்திய பாமரமக்களின் முட்டாள் தனத்தையும், கற்ற மக்களின் அயோக்கியத்தனத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்கறிகுறியாகத்தான் இந்து மதமென்ற உணர்ச்சிஇருக்கின்றதே என்பதோடு இந்தியாவில் 100-க்கு 10-பேருக்குக்கூட இந்துமதமென்றாலென்ன வென்பது விளங்காமலே அதற்கு அடிமையாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்களென்றும் நாம் பந்தயம் கூறிச்சொல்லுவோம்.

மேலும், தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் ஒழிவதற்கு மாத்திரமல்லாமல், இந்து மக்களின் அறிவுவிர்த்திக்குமான உதயத்திற்கும் இந்துமதம் என்கின்ற உணர்ச்சியொழிய வேண்டியது அவசியமென்று மேலும் மேலும் வலியுறுத்திச் சொல்லுவோம். ஆகவே, இவ்வித இந்துமதமென்பதைக் கட்டிக்கொண்டு அழுவதும், அதற்கு ஏதேதோ வியாக்யானங்கள் சொல்லுவதும், அசிங்கத்தையெடுத்து மேலே பூசிக்கொள்ளுவதையொக்குமே தவிற புத்தி சாலித்தனம் ஒன்றும் விளங்காது. பொதுவாக மதங்கள் என்பதே "அதாவது கடவுளுக்கும், மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தைக் காணவும்—கடவுளை மனிதன் அடையவும்" என்று சொல்லப்படுவதான மதங்கள் என்பதே "மூட நம்பிக்கை" யென்றும், "ஹம்பக்" யென்றும் உலகமக்கள் பெரும்பாலோரால் சொல்லிக்கொண்டு வருகின்ற இந்தக் காலத்தில், பல இடங்களில் அவை யொழிக்கப்பட பிரசாரங்கள் செய்துகொண்டும் வரப்படுகின்ற இந்தக் காலத்தில் கேவலம் அர்த்தமில்லாத, ஆதாரமில்லாத இந்துமதம் என்பதற்கு ஒருவர் வக்காலத்துப் பேசவருவதென்றால் இதைவிட பரிகாசத்திற்கிடமான காரியம் வேறில்லை என்றே சொல்லுவோம். அடுத்தபடியாக இந்துமதம் எதற்காகக் காப்பாற்றப்பட வேண்டுமென்பதே நமக்குப்புலப்படவில்லை. அதில் ஏதாவது உயர்ந்த கொள்கைகளோ, பிரயோஜனப்படத்தக்க தத்துவங்களோ அல்லது ஞானங்களோ இருக்கின்றதென்று யாராவது சொல்லவந்தால், அவர்களைப்பற்றி நாம் சிரிப்பதுடன் அவர்களுக்கு உவமையாகவுமொருபழமொழியைச் சொல்லிக்காட்ட வேண்டியவர்களாகவுமிருக்கின்றோம். அதாவது, ஒருவன் "பஞ்சபாண்டவர்களை எனக்குத்தெரியாதா? கட்டில் கால்

கள் போல் மூன்றுபேர்களென்று சொல்லி, இரண்டு விரல்களைக்காட்டி, தரையில் ஒன்றை எழுதி, கடைசியில் அதையும் காலால் தேய்த்து விட்டானும்" என்பதை யொக்கும்.

ஆகவே, இப்பழமொழிப்படி எப்படி இந்த நபர் பஞ்சபாண்டவர்கள் என்பவர்கள் கட்டில் குத்துக்கால்கள் ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று ஆகிய இவையொன்றுமே தெரியாதவர் என்று ஏற்படுகின்றதோ, அது போல் இந்துமதம் என்பது "எனக்குத் தெரியாதா? அது அநேக உயர்ந்த தத்துவங்கள், ஆத்ம ஞானங்கள் முதலியவைகள்கொண்டபழமையான"தென்று சொல்லுபவர்களுமாவார்கள் என்று தான் நாம் அபிப்பிராயப்படவேண்டியிருக்கிறது.

எனவே, இப்படிப்பட்ட மக்களின் அபிப்பிராயத்திற்கு யாரும் பயப்படவேண்டியதில்லையென்பதைத் தவிர, வேறுசமாதானம் பொதுமக்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை யென்றே கருதுகின்றோம்.

மற்றபடி சமதர்மத்திற்கும், பொதுவுடைமைக் கொள்கைக்கும் கடவுள் உணர்ச்சி ஒழிக்கப்படவேண்டியதென்பதும் நமது உறுதியான அபிப்பிராயமே யாகும். கடவுள் நம்பிக்கையும், கடவுள் மீது பொறுப்பு போடுபவனும் சுதந்திரமனிதனுயிருக்க நியாயமே யில்லையென்று பல தடவைகளிலும் சொல்லி வந்திருக்கின்றோம்.

கடவுள் உண்டா? இல்லையா? என்கின்ற பிரச்சினையில் நாம் புகவில்லை. அதுமுடிந்த விஷயமாகும் எப்படியெனில், "தொட்டதிற்கெல்லாம் கடவுள்! கடவுள்!!" யென்று சொல்லி சதா பிரார்த்தனை செய்துகொண்டிருக்கும் திரு காந்தியும், சைவசமய நிபுணர்களின் மகாநாடு கூட்டமும், ஏற்கனவே இதைப்பற்றி ஒரு முடிவு சொல்லியாய்விட்டது. அதாவது "கடவுளிருப்பதாய் மனிதன் நினைத்துக்கொள்வது நல்லது" என்று மாத்திரந்தான் சொல்லிவிட்டார்கள். ஆதலால், அது ஒரு மனிதன் ஒரு பலனை யுத்தேசித்து, நினைத்துக் கொள்ள வேண்டிய விஷயமாய் போய்விட்டதென்பதிதனுல் புலனுகின்றது. ஆகையால, நாம் இனியும் அதில் பிரவேசிக்க வேண்டிய வேலையில்லை. ஆனுல், மனிதனுடைய தற்கால நிலைககு கடவுள்தான் காரணமென்றால், மனிதனின் நிலையை மாற்றவேண்டுமென்று சொல்ல நமககு யோக்கியதை ஏது? இப்படிப்பட்டவர்களுக்கு முயற்சி செய்யத்தான் மனம் எப்படி வரும்? என்பதுதான் நமது கருத்து. ஆதலால்தான் கடவுள் உணர்ச்சியையும், அதன்மேல் பொறுப்பு சுமத்துவதையும் அழிக்கவேண்டுமென்கிறோம்.

பிறகு, பெண்கள் கர்ப்பத்தடை விஷயம்.

நாம் பெண்கள் பிள்ளைகளைப் பிரசவிக்கவே வேண்டாமென சொல்லவரவில்லை. அச்செய்கையினால் பெண்கள் அடிமைகளாகின்றார்களென்பதற்காகவே, முக்கியமாய் அதைத் தங்களாதீக்கத்தில் வைத்து, இஷ்டப்படி தாங்கள் சுதந்திரமாயிருக்கத் தக்க மாதிரியாக உபயோகித்துக் கொள்ளச் சொல்லுகின்றோம். ஆண்கள், பெண்களைத் தங்களைப் போலெண்ணுவார்களானல், அப்போது பிள்ளைகளைப் பிரசவிப்பதின் கஷ்டமும், அதனாலேற்படுமடிமைத்தனமும் அவர்களுக்கு விளங்கும். அவர்களை அடிமைகளென்று கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு, இதிலுள்ள கஷ்டம் விளங்காது.

மற்றபடி பெண்களின் "கற்பு ஒழுக்க"த்தில் சம சுதந்திரம் இருக்க வேண்டுமென்னும் விஷயத்தில், சிலருக்கு-அதாவது சில ஆண்களுக்குப் பெரிய கஷ்டமிருப்பதாகத் தெரியவருகின்றது. பெண்கள் கற்புள்ளவர்களாயிருக்க வேண்டுமென சொல்லுவதற்கு, எந்த ஆணுக்குரிமையுண்டென நாம் கேட்கின்றோம்.

தவிரவும், பெண்களுக்கு புத்திசொல்ல ஆண்கள் யாரெனவும் கேட்கின்றோம், "கற்பு" என்னும் பூச்சாண்டியின் யோக்கியதை யாவருமறிந்த இரகசியமேயொழிய, அது ஒருவருக்கும் தெரியாததல்ல. பெண்களை, நாம், உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் பொதுமகளிராயிருக்க வேண்டுமென சொல்லவரவில்லை. ஆனல், மற்றபடி நாம் சொல்லுவதென்னவென்றால், எல்லாவிஷயங்களிலும் ஆண்களுக்குள்ள சுதந்திரம், பெண்களுக்குமிருகக நியாயமுண்டு. "கற்புத்தவறும்" விஷயத்திலும், ஆண்களுக்குள்ள நிபந்தனைகளும் தண்டனைகளும் தான் பெண்களுக்குமிருக்க வேண்டுமென்று சொல்லுகிறோமேயொழிய, வேறில்லை. கற்பு என்பதாக ஒரு குணம் உண்டா? இல்லையா? அது இயற்கைக்கும் சாத்தியத்திற்கும் ஏற்றதா என்கின்ற பிரச்சினைகள் அது வேறு விஷயம். ஆனாலும் யோக்கியமான ஆண்பிள்ளைகள் இதற்குப் பயப்பட வேண்டியதவசியமேயில்லை.

எவனொருவன், தான் "கற்புள்ளவனாயிருக்க" இருக்கவில்லையோ, எவனொருவனால் இருக்க முடியவில்லையோ அவனுக்குத்தான் இதில் அதிகமான கவலையும் பயமுமிருக்க நியாயமுண்டே தவிர மற்றவர்கள் இதைப்பற்றி கவனிக்க வேண்டியதேயில்லை. அல்லாமலும் நாமாவது "ஆண்கள் கற்புள்ளவர்களாயிருந்தாலும், பெண்கள் கற்புள்ளவர்களாயிருக்ககூடா"தென்று சொல்லி யிருந்தால்தான், நம்மீதுமொருவர் கோபித்துக்கொள்ளவும் ஒருவருக்கு உரிமையுண்டு. இப்படிக்கெல்லாம் இல்லாமல் சும்மா வீணே "கறபுப் போய்விட்டதே, கற்புப் போய்விட்டதே" யென்று யாராவது கூபபாடு போட்டால், அதைப் போலிககூச்சலென்று தான் கருதி, குப்பைத் தொட்டியில் போடவேண்டுமே தவிர அதற்காக யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

ஆகவே, தஞ்சைஜில்லா சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கள் மிக முக்கியமானதும், நியாயமானதுமென்பதோடு, கூடிய சீக்கிரத்திலிதுவே, உலகத்தீர்மானங்களாக யேற்படப் போகின்றதென்பதோடு, இதே தீர்மானங்கள் இன்னும் வெகு சமீப காலத்திற்குள் "இந்திய தேசிய காங்கிரசிலும்" புகாதவரையில் அக்காங்கிரசே இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போகப்போகின்றதென்ற உறுதியையும் கொண்டிருக்கின்றோம்.

மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தாரின் கூட்டமொன்று விருதுநகரில் 25--5—31-தேதி மாலை, வரவேற்புக் கழகக்காரியாலயத்தில் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்:—

1 உயர்திரு. சர் ஹரிசிங் கவர் அவர்கள் தமது உடல்நலத்தை முன்னிட்டு, மகாநாட்டின் தலைமை வகிக்க முடியாது போய்விட்டபடியால், மகாநாடு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

2. மகாநாடு மீண்டும் கூடும் தேதியை பின்னர் அறிவிக்கப்படும்.

3. சுயமரியாதை சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியின் கூட்டமொன்று அதிசீக்கிரத்தில் கொடைக்கானலில் நடைபெறும். அவ்வமயம் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பது தீர்மானிக்கப் படும்.

எஸ் உத்தண்டன், விளம்பர அதிகாரி.

விருதுநகர் சுயமரியாதை மகாநாடு.

விருதுநகர் சுயமரியாதை மகாநாடு ஜூன் முதல்வாரத்திலாவது இரண்டாவது வாரத்திலாவது நடத்துவதாக உறுதி செய்யப்பட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்ததில் மகாநாட்டுத் தலைவர் திரு. சர்ஹரிசிங்கவர் அவர்கள் நீலகிரியில் இருந்து உடல் நலமில்லாமல் திரும்பிப்போய் விட்டதாலும் வெய்யில் கடுமையை உத்தேசித்து வேறுதக்க தலைவர் சமீபத்தில் கிடைப்பதற்கில்லாமல் இருப்பதால் மகாநாட்டை ஆகஸ்டு வாக்கில் நடத்துவதாக தள்ளிப்போட்டு விட்டதாய் விருதுநகர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியார் தீர்மானம் செய்திருப்பதாக தெரிவித்து விட்டார்கள். மகாநாட்டு விஷயமானது இந்தப்படி அடிக்கடி மக்கள் ஏமாற்றமடையும்படி நடந்து வருவது பலருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் அதற்கு அனுகூலமாக சம்பவங்கள் ஏற்பட்டு வருகின்றதை நாம் மறுப்பதற்கில்லை என்பதையும் ஒருவாறு தெரிவி

த்துக்கொள்ளுகின்றோம். இதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு நமது இயக்க எதிரிகள் விஷமப் பிரசாரம் செய்யக்கூடும். ஆனாலும் வரவேற்புக் கமிட்டியார் இதை உணராதவர்கள் என்று சொல்லி விடமுடியாது. இதற்காக அவர்கள் மகாநாட்டை எந்த முறையில் நடத்தவேண்டுமென்று கருதி இருக்கின்றார்களோ அதை மாற்றிக்கொள்ள அவர்கள் இஷ்டப்படவில்லை. ஆகையால் நண்பர்கள் இந்த ஒரு தவணையையும் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

பிரசார போதனைமுறை பள்ளிக்கூடம்.

சுயமரியாதை இயக்கத் தத்துவங்களை பிரசாரம் செய்ய ஈரோட்டில் போதனைமுறை பாடசாலை ஒன்று ஏற்படுத்தி சிறிது காலத்திற்கு பயிற்சி கொடுப்பதென்பதாக ஏற்பாடு செய்து கொஞ்சநாளைக்கு முன் அதற்காக ஒரு திறப்புவிழாவும் கொண்டாடப்பட்டது ஞாபகமிருக்கலாம். அந்தப்படி அவ்வப்போது தனித் தனியாக சிலர் வந்து பயிற்சி பெற்று போனார்கள் என்றாலும் ஒரு முறையாக வைத்து அப்போதனைமுறை பயிற்சி செய்யப்படவில்லை.

ஆனால் இப்போது இந்த ஜூன்-மீ 15தேதியில் இருந்து முறையாகவே பள்ளிக்கூடப்பயிற்சி முறையில் ஒரு பயிற்சி சாலை ஏற்படுத்த நிச்சயத்திருப்பதால் அதில் சுமார் 20, 25 பேர்களையே சேர்த்துக்கொள்ளக்கூடும். ஆதலால் வர இஷ்டமுள்ளவர்கள் தயவு செய்து 8உக்குள் இவ்விடம் வந்து சேரும்படியாக விண்ணப்பம் அனுப்பவேணுமாய்க் கோரப்படுகிறார்கள்.

விண்ணப்பம் எழுதுகின்றவர்கள் அந்தந்த ஜில்லாவிலுள்ள சுயமரியாதை இயக்கத்தில் பற்றுள்ள பிரமுகர்களின் மூலம் அறிமுகச் சீட்டு வாங்கி அனுப்பவேண்டும்.

ஜார்ஜ் ஜோசப்.

உயர் திருவாளர் ஜார்ஜ் ஜோசப் [பாரிஸ்டர்] அவர்கள் திரு. காந்தியவர்கள் கூறும் சுயராஜ்யமாகிய ராமராஜ்யம், என்பதைப் பற்றி ஒரு நீண்ட உபன்னியாசம் செய்ததின் வியாசத்தை வாரா வாரம் நமக்கு அனுப்பிவருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை மொழிபெயர்த்து சிலவாரங்களுக்கு குடிஅரசில் தொடர்ச்சியாக போட்டு வரப்படும். ஆதலால் வாசகர்கள் தயவு செய்து கவனமாய்ப் படித்துவரக் கோரப்படுகின்றார்கள்.

S. குருசாமி.

உயர்திரு எஸ். குருசாமி பி.ஏ. அவர்கள் 'பகுத்தறிவு' என்னும் தலைப்பில்வாரந்தோறும் ஒரு கட்டுரை எழுதிவருவார்கள். அதுபெரிதும் மேல்நாட்டு பகுத்தறிவு ஆராய்ச்சி வல்லோர்களின் அபிப்பிராய மொழி பெயர்ப்புகளைத் தழுவியதாகவே இருக்கும். ஆதலால் வாசகர்கள் கவனித்து படித்துவர வேண்டுமாய் கோருகிறோம்.

வருந்துகிறோம்.

பச்சையப்பன் கலாசாலை தமிழ்புலவரும் "திராவிடன்" பத்திராதிபருமான உயர் திரு. மணி திருநாவுக்கரசுமுதலியார் அவர்கள் திடீரென முடிவெய்திய செய்தி கேட்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம். இவர் ஓர் தமிழ் பண்டிதராய் விளங்கியதுடன், சமூதாயச் சீர்திருத்தத்தில் ஆர்வங்கொண்டு, சமூகமுன்னேற்றத்திற்காக பல உபன்யாசத் தொண்டுகளும் புரிந்திருக்கிறார். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பாடுபட்டவர்களில் ஒருவராவார். பொதுவாக தமிழுலகமும், சிறப்பாக பிராமணரல்லாத உலகமும் ஓர் நண்பரை இழந்து விட்டார்களெனக்கூறுவது மிகையாகாது. ஆகவே அவரது பிரிவுக்குவருந்துவதோடு, நமதுவருத்தத்தை அவருடைய குடும்பத்தாருக்கும் முக்கியமாக அவரது உடற்பிறந்த பின்னோர் திருவாளர் மணி கோடீஸ்வரமுதலியார் B.A.L.T. அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

டது. அக்கூட்டத்திற்கு அநேக பெண் மக்களும், ஆண்மக்களும் ஏராளமாய் வந்திருந்தார்கள். திரு ஈ. வெ. இராமசாமி தலைமையில் முதலாவதாக பட்டுக்கோட்டைதமிழ்பண்டிதர் உயர்திரு திருஞானசம்பந்தம் அவர்கள் "ஆத்மா" என்பது போலி கட்டுவார்த்தை யென்றும், அப்படியொன்று மிருக்கவே நியாயமில்லையென்றும், தமிழ் ஆதாரங்களிலும் அவைகளுக்குப் போதிய ஆதாரங்களில்லை யென்றும் இனி சுயமரியாதை இயக்கமானது தைரியமாய் ஆத்மாவைப்பற்றியபோலிக்கட்டுக்கதைகளை வெளியாக்கவும், வேண்டுமென்றும் அதற்கு யாரும் பயப்படக்கூடாதென்றும், இது விஷயத்தில் புதிய புதிய எதிர்ப்புகள் வரக்கூடுமென்றும், ஆனாலும் எங்கும் நிரூபிக்கவும், எந்தச் சமயத்திலும் பிரசாரம் செய்யவும் தான் தயாராயிருப்பதாகவும், இவைகள் எல்லாம் நடைபெறாமல் இவற்றிற்காகவும் செலவுகளையும் கவனத்தையும் தடுக்காமல் அரசியல்சீர்திருத்தம் என்கின்ற விஷயத்தில் மக்களின் கவனத்தை செலுத்த பிரசாரம் செய்து கொண்டு போவது பாமர மக்களை ஏய்ப்பதாகுமென்றும் பேசினார்.

சாமி சிதம்பரனார்.

பிறகு திருவாரூர் தமிழ் பண்டிதர் உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் ஆத்மா என்ற விஷயத்தைப்பற்றியே பேசும்பொழுது கடவுள் பிரசாரத்திற்கும், ஆத்மா பிரசாரத்திற்கும் வித்தியாசமேயில்லை யென்றும், மனிதனுடைய சமதர்மத்திற்கும் பகுத்தறிவிற்கும் விரோதமாகவே இவைகள் கற்பிக்கப்பட்டதென்றும், நமது சுயமரியாதை இயக்கமானது ஆரம்பத்திலிருந்தே படிப்படியாகவே தான்முன்னேறிக்கொண்டு வருகிறதென்றும் அதாவது முதலில் பார்ப்பனர்களையும், பிறகு வைணவர்களையும், பிறகு சைவர்களையும், பிறகு இது சம்பந்தமான பெரியார்கள், ஆதாரங்கள் என்பவைகளையும், பிறகு பொதுவாகவே மதசம்பந்தங்களையும் கண்டித்து விட்டு பிறகு கடவுள் கொள்கைகளையும் கர்மம் முதலியவைகளையும் கண்டித்து விட்டு இப்பொழுது இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகிய ஆத்மா என்னும் விஷயத்தை வெளியாக்க புறப்பட்டு விட்டதென்றும், மகாநாட்டுத்தலைவர் புரோபசர் திரு. லட்சுமிநரசு அவர்கள் இன்று மகாநாட்டிற்குத்தலைமை உரையில் ஆத்மாவைப்பற்றி முதன் முதலாகப் பேசினாரென்றாலும், நமது தலைவர் திரு. ஈ. வெ. இராமசாமியார் 'குடி அரசின்' ஏழாவது வருஷ ஆரம்ப மலரிலேயே ஆத்மா என்பதைப்பற்றி எழுதத்துவங்கிவிட்டாரென்றும் அதைப்பற்றி இரண்டு பெரிய வியாசங்களும் வந்துவிட்டது என்றும் அவ்வியாசங்களில் அநேக அரிய விஷயங்கள் அடங்கியிருக்கிறதென்றும் ஆகவே இனி, நாம் இந்த விஷயத்தில் அதிகம் பிரசாரம் செய்ய வேண்டியதவசியமென்

இதனால் பல கஷ்டங்கள் நேரிடக்கூடுமென்றும் என்போன்றவர்களுக்கெல்லாம் ஜீவனத்துக்கே தொல்லைகள் ஏற்பட்டாலும் ஏற்படலாமென்றும், ஆனாலும், அதற்காக எங்கள் மன உறுதியையும், நியாயத்தையும், ஒழுங்கையும் மாற்றிக் கொள்ளப்போவதில்லையென்றும் சொன்னார்.

அழகர்சாமி.

பிறகு பட்டுக்கோட்டை உயர்திரு அழகர்சாமி அவர்கள் எழுந்து 'கடவுள்' என்பதுபற்றிப் பேசியதில் சுயமரியாதை இயக்கமானது கடவுள் என்பது இல்லையென்பதாகச் சொல்வதற்குத் தைரியம் கொள்ளாவிட்டாலும் அதாவது கடவுளைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை அதன் மீது பொறுப்பைச் சுமத்திக் கொண்டு வீண் செலவுகளைச் செய்யவேண்டியதில்லை என்று மாத்திரம் சொல்வதாயிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையிலும் நான் தைரியமாகக் கடவுள் உணர்ச்சி என்பதே ஒரு கடவுள் இருந்துகொண்டு, அதுவும் சர்வசக்தியுடையவராகவும், சர்வவியாபக முடையவராகவுமிருந்து கொண்டு, உலகத்தை நடத்திக் கொண்டும், உலக மக்கள் தன்னை வணங்கி, தான் விரும்புகின்றபடி நடந்துகொண்டு இருப்பார்களானால், அவர்கள் விரும்புவதை யெல்லாம் செய்வதென்றும் சொல்லிக் கொண்டிருப்பதான ஒரு கடவுள் என்பது இல்லவே யில்லையென்றும், அப்படி இருக்கவு முடியாதென்றும், இருப்பதாகச் சொல்லுவதெல்லாம் அவரைப் பார்த்ததாகச் சொல்லுவதெல்லாம், அவரோடு பேசியதாகச் சொல்லுவதெல்லாம் வெரும் புரட்டும், பித்தலாட்டமும், அறியாமையும், பைத்தியமுமே யல்லாமல்வேறல்லவென்று உறுதியாய்ச் சொல்லுகிறேனென்றும், மகாத்மா காந்தி இந்தக்கடவுளைப் பற்றிப் பேசுவதனாலேயும், புராணங்களைப்பற்றிப் பேசுவதனாலேயும் அவருடைய நடவடிக்கைகளில்நியாயமோ, உண்மையோ இருப்பதாக எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லையென்றும்யார்யார் கடவுளைப்பற்றிப்பேசிக்கொண்டு, அதன்மீது பொறுப்பைப் போட்டுக்கொண்டு ஏதோ பெரிய காரியங்களை சாதித்து விடுவதாகப் பேசுகிறார்களோ அவர்களெல்லாம் அறியாமையையும் அல்லதுபித்தலாட்டங்களையும் கொண்டவர்களேயாகுமென்றும், மனிதன் மற்ற மனிதனைக் கொடுமைப்படுத்துவதற்கும், மனதார வஞ்சிப்பதற்

குமே கடவுள் கற்பனைகள் உபயோகப் படுகின்றனவென்றும் ஆகையால் நாட்டுக்கு, பொது ஜனங்களுக்கு பாடுபடுபவர்கள் உண்மையாகவும், யோக்கியப் பொறுப்புடையவர்களாகவும், அறிவுடையவர்களாகவும் இருக்கின்றார்களா என பார்க்கவேண்டுமானால், கடவுளைப்பற்றிய அவர்களது பேச்சுக்கும், கடவுளைப்பற்றிய நடவடிக்கைக்கும் எவ்வளவு தூரம் பொறுத்தமும், சம்மந்தமுமிருக்கின்றது என்பன வாகியவற்றை அறிவதன் மூலமாகவேதான் உண்மையாளரென்றும், போலியர்களென்றும் சாதிக்கத் தகுந்தவர்களென்றும் சோம்பேரிப் பேச்சுக்காரர்களென்றும், வாஸ்தவத்திலேயே கவலையுடையவர்களா அல்லது விளம்பரக்காரர்களா என்று உணர முடியும் என்று பேசினார்.

இராமசாமி

பிறகு திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் முடிவுரையாக பேசுகையில் சுயமரியாதை இயக்கம் தோன்றிய இந்த 5, 6 வருஷ காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருக்கிற உணர்ச்சிகள் என்ன என்பதைப்பற்றியும், அதனால் ஏற்பட்ட காரியங்கள் என்ன என்பதைப்பற்றியும், சுயமரியாதை இயக்கத்தின்பேரால் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் முதலில் கேட்பவர்களுக்கு அதிசயமாகவும், தலைகீழ் புரட்சியாகவும் காணப்பட்ட போதிலும் சாதாரணமாக ஒவ்வொரு அபிப்பிராயங்களும் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே செல்வாக்குப்பெற்று எல்லா ஜனங்களாலும் சகித்துக்கொண்டு வரப்படுகின்றதென்றும், பார்ப்பனர்களுடைய ஆதிக்கத்திலும், பார்ப்பனீய பிரசாரகரின் ஏக நாயகத் தன்மையிலும் இருந்துவந்த காங்கிரசு முதலிய அரசியல் ஸ்தாபனங்களும் பல மதஸ்தாபனங்களும், பல சமூதாய வகுப்புஸ்தாபனங்களும் இப்பொழுது இந்த அபிப்பிராயங்களையே சொல்லத்துடங்கிவிட்டதென்றும், இவைகளுக்கெல்லாம் காரணம் நாம் ஆரம்பித்த எடுப்பிலிருந்து ஒரு சிறிதும் எந்தக்கொள்கையிலும் பின் போகாமல் நாளுக்குநாள் முன்னேறிக் கொண்டுவந்ததோடு, யாருடைய பழிப்புக்கும், பகைமைக்கும், தாட்சன்னியத்திற்கும் பயப்படாமல் உறுதியுடனிருந்ததோடு, யாராலும், எப்படிப்பட்டவர்களாலும் நமது கொள்கையை ஒப்புக்கொள்ள வில்லையானால் நமக்கு அவர்களைப்பற்றிய கவலையில்லையென்றும் அலட்சியமாயிருந்ததோடு சிறிதும் ராஜிக்கு இடங்கொடுக்காமலிருந்துமேவந்ததே முக்கிய காரணமாகும்.

நம்மைப்பற்றி பலர் குற்றம் சொன்ன காலத்திலும் நமதியக்கம் இதுவரை என்ன சாதித்ததென்று கேள்விகள் கேட்கவந்த காலங்களிலும் நாம் அவர்களை லட்சியம் செய்து பதில் சொல்லிக்கொண்டிராமல், நமது லட்சியத்திலேயே கவலைவைத்துக் கொண்டு “நாம் அப்படித்தான் செய்வோம், இவ்வளவுதான் நாம் செய்தது. இஷ்டமிருந்தால் பின்பற்றிவா. இல்லாவிட்டால் உன் வேலையைப்பார்த்துக் கொண்டு போ. நாம்சொல்லுவதுதான்நமது கொள்கை, அதன்பேரில், நமது கொள்கையின் பேரிலோ, நமது செய்கையின் பேரிலோ ஆதிக்கம் செலுத்தவேறுயாருக்கும்உரிமையில்லை” என்றுசொல்லிக்கொண்டு வந்த உறுதியான நிலைமையேதான், நல்லதோ, கெடுதியோ நமதியக்கத்தின் தற்கால நிலைமைக்குக்காரணமாக யிருந்துவருகிறது. ஏனெனில், நாம் யாரிடத்திலும் நமதியக்கத்திற்காக “இபபடிச்செய்கிறேன், அப்படிச்செய்கிறேன்” என்று வியாபாரம் பேசி ஒப்பந்தம் செய்து, அட்வான்சுவாங்கவில்லை. ஒருவருக்கும் கட்டுப்பட்டு எவரையும் ஏதாவதொரு விஷயத்தை நம்பச்செய்து அதனால் நஷ்டத்தையடையுங்களென்று யாருக்கும் நஷ்டத்தையுண்டுபண்ணவோ, யாருடைய தயவையும் எதிர்பார்க்கவோ இதுவரையில் வைத்துக்கொள்ளவில்லை: நாம் சொல்லுவதற்கும், செய்வதற்கும், சொல்லாததற்கும், செய்யாததற்கும் நம்மையே பொறுப்பாளியாக்கிக் கொண்டிருக்கிறோம். இதில் கலந்து ஒத்துழைத்ததாக சொல்லப்படக்கூடியவர்களெல்லாம் நமது கொள்கையும், அவர்களது கொள்கையும் ஒன்றாயிருக்கிறமுறையில் நம்முடன்சேர்ந்து இருக்கின்றவர்களே தவிர, அவை சிறிது மாறினவுடன் பிரிந்துபோய்விடவேண்டியவர்களே யாகையால், கொள்கை மாறாமலிருக்கும் வரையிலுந்தான் யாரும் ஒத்துழைக்க ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களென்று கருதி, சேர்ந்து வேலை செய்துகொண்டு வந்தவர்களென்று நினைத்தோமேயொழிய யாரையும் கூட்டுவியாபார ஒப்பந்தமாக ஒருவருக்கொருவர் எப்படி இருந்தாலும் ஒத்துப்போகவேண்டிய நிர்பந்த முடைய குடும்ப வாழ்க்கை காரியமாக கருதவேயில்லை.

அன்றியும், நாமும், நாம் இதுவரை என்ன செய்துவிட்டோமென்று கவலைப்படவேண்டியதில்லை. கவலைப்படவுமில்லை. ஏனெனில், நம்முடைய லக்ஷியம் மிகப்பெரியது. இதற்காக நாம் செய்யும்முயற்சி மிகச்சிறியது. இதனுடைய நஷ்டம் நமக்கொன்றும் பிரமாதமானதல்ல. அன்னியருக்கும் நம்மால் ஏற்பட்ட நஷ்டமோ, கஷ்டமோ சிறிதும் கணக்கிடத்தகுந்ததேயல்ல. ஏதோ, நமக்குத்தோன்றியதை பேசுவது, எழுதுவது, ஊரூராய்ச் சுற்றுவது என்பதைத் தவிர நாம் ஒன்றும் பிரமாதமாக கஷ்டப்பட்டுவிடவுமில்லை. இதற்காக செலவழிக்கப்பட்ட பொருளோ, ஊக்கமோ எதிர்பாக்கும் காரியத்திற்கு எத்தனையோ மடங்கு சிறியதேயாகும். முன் ஒரு சமயம் நாம் சொன்னது போல் “மலைபோன்ற ஒரு பெரிய காரியத்தைக்கொண்டுவருவதற்காக தலைமுடிபோன்ற அற்பசக்தியைக் கொண்டு கட்டியிழுக்கப் பார்க்கிறோம். வந்தால் மலைபோன்ற கொள்கைகள் வரட்டும். வராமல் அறுந்துபோனால் முடிபோன்ற நமது அற்பமுயற்சிகள் வீணாய் போகட்டும். நமக்கு அதைப்பற்றி பெரிய கவலையொன்றுமில்லை. இதனால், பெரிய நஷ்டமொன்று ஏற்பட்டுவிடப் போவதில்லை யென்று கருதிக் கொண்டே முன் செல்லுகிறோம்.

ஏனெனில் இவ்வளவு பெரிய இயக்கத்திற்கும், நமது மன உறுதியும், நிர்தாட்சன்யமுந்தான் ஆஸ்தியாகவும் மூலப்பொருளாகவும் இருக்கின்றதே தவிர வேறில்லை. ஆதலால், தான் நாம் ஒருவருக்குப்பதில் சொல்ல வேண்டும் என்ற கவலை ஏற்படும் படியாக எவ்வித காரியத்தையும், யாருடைய தயவையும் பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பார்க்கக்கூடாதென்றே இருக்கிறோம். மற்றும் நமதியக்கத்திலுள்ள, அதாவது இந்த நமது அபிப்பிராயத்தையே கொண்டுள்ள நமது நண்பர்களும், இந்தமாதிரியாகவே தங்களுடைய அபிப்பிராயங்களையும், தங்கள் சக்திகளையும், இஷ்ட சௌகரியங்களையும் பாதிக்கக்கூடிய எந்தக்கட்டுப்பாட்டிலும் விழுந்துவிடக் கூடாதென்றே சொல்லுகிறோம்.

எந்தக் காலத்திலும், எந்த இயக்கமோ. எந்த அபிப்பிராயமோ ஸ்தானமோ செல்வாக்குடையதாக யிருந்தால் காரண காரியங்களை கவனியாமலும், அவ்வியக்கத்தின் பிரமுகர்களது நடவடிக்கைகளையும், அபிப்பிராயங்களையும் கவனியாமலும் வந்து தெரிந்தோ, தெரியாமலோ வந்துபுகுந்துகொள்ளுவதும், பிறகு வேறுயேதாவது செல்வாக்குள்ள இயக்கமோ, அபிப்பிராயமோ, ஸ்தாபனமோ தோன்றினால் அதில் பாய்ந்துவிடுவதும், அந்தப்படி பாய்ந்து விட்டதற்கு பிறருக்கு சமாதானம் சொல்லுவதற்காக தாங்கள் முன்போய்ச் சேர்ந்த இயக்கத்தையோ, அபிபபிராயத்தையோ ஸதாபனத்தையோ அல்லது அது சம்பந்தமானவர்களையோ குற்றம் சொல்லுவதன் மூலம் சமாதானம் சொல்லப் பார்ப்பது உலக மக்களில் பலரது இயற்கையேயாகும். மற்றும் ஒரு இயக்கத்திற்கு தாராள செல்வாக்கிருக்கும் வரையிலும், அதாவது ஒரு வண்டி பள்ளத்தாக்கில் தானாக உருண்டுப்போவதாக யிருந்தால் வண்டியைத் தொங்கிக்கொண்டே வண்டிக்குப்பின்னால் ஓடுவதும், அப்படிக்கில்லாமல் மிக்க பாரத்தோடு ஒரு வண்டி சேற்றில் புதைந்துகொண்டோ, மேட்டில் ஏற வேண்டியதாகவோ ஏற்பட்டபோது அதைத் தோள் கொடுத்து தள்ளிவிட வேண்டிய கஷ்டத்திற்குப் பயந்துகொண்டு கழிபோட்டுக்கொண்டு தொல்லை கொடுப்பதும், விட்டுவிட்டு ஓடப் பார்ப்பதும்சில சாதாரணமக்களுக்கு சகஜமேயாகும். இதைக் கண்டு இயக்கத்தில் பொறுப்புடையவர்கள் பயப்படாமலும், தங்களிடம் ஏதாவது மாறுதல் குணம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதைமட்டும் பார்த்துக்கொண்டு தைரியமாகவும், உறுதியாகவுமிருக்கவேண்டுமென்பதுதான் இம்மாதிரியான சமயத்தில் நான் எனது நண்பர்களுக்குச் சொல்லும் யோசனையாகும்.

ஒரு இயக்கத்தையோ, ஒரு காரியத்தையோ செய்வதனால் ஒருவனுக்கு ஏற்படுகிற பெருமைக்கு அளவாகவே சிறுமையும் ஏற்படலாம். பெருமையைக் கண்டு சந்தோஷமடைந்தவன் சிறுமையைக்கண்டுதுக்கப்படவேண்டியதுதான். பெருமையைக் கண்டு சந்தோஷமடையாதிருந்தவன் சிறுமையைக்கண்டுதுக்கிக்கவேண்டியதில்லை. எப்படி யிருந்தபோதிலும் இவ்விரண்டையுமுத்தேசித்துத் தனது உறுதி

யான கொள்கைகளிலிருந்து பிறளாமலிருப்பானேயானால் அவன் ஒருவகையில் காரியசித்தி யடைந்தவனேயாவான். ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் காரியம் தனது சொந்த லாப நஷ்டத்திற்கா? அல்லது பொது ஒரு கஷ்டத்தை நீக்கும் பிலத்ய ர்திற்கா? என்பதைமுதலில் தனக்குள்ளாகவே யோசித்துக் கொள்ளவேண்டும். அதன் பிறகு இரண்டுவித லாப நஷ்டத்திற்கும் தயாராயிருக்கவேண்டும்.

சகோதரர்களே! இன்றைய தினம் எனக்குமுன் பேசிய திருவாளர்கள் திருஞானசப்பந்தம், சாமி சிதம்பரனார், அழகர்சாமி, முதலியவர்கள் 'ஆத்மா,' 'கடவுள்' என்பதைப்பற்றி வெகு உறுதியாகவும், தைரியமாகவும் பேசினார்கள். இதைக்காண எனக்கு அளவில்லாத சந்தோஷமும் தைரியமும் ஏற்பட்டுவிட்டது. இரண்டு தமிழ்பண்டிதர்கள் ஆதரித்துப் பேசுவதென்றால் சாதாரணமான விஷயமல்ல. எனது இன்றைய அபிப்பிராயங்கள் பெரிதும் ஏறக்குறைய 30, 35 வருஷத்திய அபிப்பிராயங்களேயாகும். சுமார் 30 வருஷங்களுக்கு முன்பாக ஒரு வாலிப அதிகாரியுடன் இந்துமதத்தை பற்றி நான் அது ஒரு "புரட்டானமதம்" என்று சொன்ன பொழுது அவர் எனது அபிப்பிராயங்களுக்குச்சமாதானம் கூறாமல் ஒரே அடியாய் 'சுவாமிவிவேகானந்தர் அமெரிக்காவுக்குச் சென்று எத்தனையோ படிப்பாளிகள் முன்பாக ஹிந்து மதத்தைப்பற்றிப் பேசி, உலகத்திலுள்ள மதங்களில் இந்துமதமே சிறந்ததென்று சொல்லிமெய்ப்பித்துவிட்டு வந்துவிட்டார். அப்படியிருக்க நீ ஒரு சாதாரண மனிதன் இந்துமதத்தைப்பற்றிப் பேசலாமா?" என்றுதான் பதில் சொன்னார். உடனே அதற்கு நான் அப்பொழுதே "விவேகானந்தர் இந்து மதத்திற்கு ஒரு வக்கீலாக அமெரிக்காவுக்குச் சென்றாரே யொழிய அவர் பிரதிநிதி முறையில் நடந்து கொள்ளவில்லை" யென்றும், "வக்கீலுக்குள்ள உரிமைகளை யெல்லாம் கையாடி, ஜெயித்துக் கொண்டுவந்தா" ரென்றும், "அமெரிக்காவிலுள்ளவர்கள் உண்மைப் பிரதிநிதிகளுக்குள்ள உரிமைகளைக் கையாடி, தோல்விபடைந்தார்க" ளென்றும், எடுத்துச்சொன்னேன். அன்றியும், சமீபத்தில் சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு வக்கீல் உயர்திரு. மைலாப்பூர் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களுடன் காங்கிரஸ்பிரசாரமாக ஆங்காங்கு சென்ற காலையில் ஒரு நாள் மதுரையில் இரவு 10-மணிக்குமேல் படுத்துக்கொண்டு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கையில் ஆத்மாவைப் பற்றியும், கடவுளைப்பற்றியும் இதே அபிப்பிராயம் சொன்னபொழுது, உடனே அவருக்கு கோபம் வந்து "உம்மிடம் சாவகாசம் வைத்ததே தப்பு" என்றும், "நீர் இவ்வளவு கீழான மனிதனென்று எனக்கு இதுவரையிலும் தெரியா" தென்றும் சொல்லி பேசாமல் திரும்பிப் படுத்துக்கொண்டார். ஆனால் அப்படிப்பேசுவதற்கு ஒரு மணிநேரத்துக்கு முன்புதான் கிருஷ்ணாபுர் தெப்பக்குளத்தில் அவருடைய தலைமையின்கீழ் "ஒத்துழையாமை" சம்பந்தமான பிரசங்கம் செய்த பிறகு தலைவர் முடிவுரையாக என்னைப்பற்றி அவர் பேசும் போது "ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஒரு பெரிய இராஜரிஷி" யென்றும் "இவர் நமக்குத் தலைவராகக்கிடைத்தது நமது பாக்கியம்" என்றும், மற்றும் பலவிதமாகப்புகழ்ந்துபேசினார். மறுநாட்காலையில் அவருடைய கோபம் தணிந்த பிறகு, தானாகவே என்னுடன் பேசவந்த பொழுது "நாயக்கர்வாள்! கோபஞ்செய்து கொள்ளாதீர்கள். இராத்திரி நாங்கள் அம்மாதிரி பேசியதற்கு காரணம் இன்னதென்று தெரிந்துகொண்டேன். அதாவது, சீமைக்குச்சென்று, கல்விகற்றுவந்த உங்களுடைய குழந்தைகள் திடீரென்று இறந்துபோன வெறுப்பினால் தாங்கள் இவ்வித யெண்ணங்கொண்டுவிட்டதாக உணர்ந்தேன் ஆதலால் கோபித்துக் கொள்ளாதீர்க" ளென்று சமாதானம் சொன்னார். நான் அதற்கும், இதற்கும சம்பந்தமில்லையென்றும், அக்குழந்தைகள் எனது தமையனார் குழந்தைகளென்றுமே அவருக்கு மீண்டும் உரைத்து, எனதபிப்பிராயத்தையே பலமாக மறுபடியும் வற்புறுத்தினேன். ஆகவே, நான் இந்தவிஷயங்களையெல்லாம் வெகு நாளாகவே கொண்டுள்ள அபிப்பிராயங்களானாலும், அவற்றின் சம்மந்தமான சகல தொல்லைகளையும் மேற்போட்டுக் கொண்டு, பிரசாரம் செய்கிறதென்கிறவேலையாகஇப்பொழுது தான் திரிகிறேன். இதற்கு முன் நான் எந்த தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், சிநேகமாக ஏற்பட்டவர்களிடமெல்லாம் இதைப்பற்றியே பேசியுமிருக்கிறேன்.

ஆத்மா என்னும் விஷயத்தில் சுருக்கமாக பதில் சொல்லவேண்டுமானால், அது ஒருவித உணர்ச்சியேயொழிய ஒரு தனிப்பட்ட வஸ்துவல்ல. அவ்வுணர்ச்சியானது சரீரத்தின் அசைவு, நின்றவுடன் ஒழிந்துபோகும் என்பதேயாகும். இதைப்பற்றி இரண்டுவியாசங்கள் "குடி அரசில்" முன்னாலேயே எழுதப்பட்டிருக்கிறது மூன்றாவது வியாசமும் சமீபத்தில் வரும். ஆத்மா என்பதைப்பற்றிய பேச்சே பேசாமலிருந்தால் நல்லதென்றும், இதனால் பல ஜனங்களுடைய அதிருப்தி யேற்பட்டு, நமக்கு வெளி உதவிகள் குறைந்து போகுமெனவும் சிலர் கூறுகின்றார்கள். அதை ஒத்துக்கொள்ள என்னால் முடியவில்லை. "எனது அபிப்பிராயங்களை சொல்லுவதை நமது கடமையாக வைத்துக்கொள்ளுவோம். மற்றவர்களுக்கு துன்பமில்லாத முறையில அதை பிரசாரம் செய்வோ" மென்பதைத்தவிர,வேறு விஷயங்களை எதிர்பார்த்துக்கொண்டு, அபிப்பிராயங்களை மூடிவைத்துக் கொண்டிருப்பது நியாயமாகாது.நமது ஆயுள்காலத்திற்கு எவ்வித அளவும்,உறுதியும் பந்தோபஸ்துமில்லையாதலால், கூடுமானவரை சௌகரியமிருக்கும் பொழுது நமது அபிப்பிராயங்களையெல்லாம் சொல்லிவிடுவதுதான்சரியென்று நினைக்கின்றேன். நமது நாட்டில்தான் இவ்வித சாதாரண அபிப்பிராயங்களை வெளியிடுவதற்குக்கூட இவ்வளவு பயப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு காரணமெல்லாம் இந்த நாட்டிலுள்ள சோம்பேரி வாழ்க்கைக்காரர்களின் ஆதிக்கமேயாகும். ஆனாலும் இந்தப்படி தைரியமாய் நாம் புதிய அபிப்பிராயங்களைச் சொல்வதால் நமக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்படுமென்று பயப்படவேண்டியதில்லை. லாபமடைகின்றவன் தான் நஷ்டத்திற்குப் பயப்படவேண்டும். நமக்கு லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை. ஆதலால் அதைப்பற்றி யாரும் கவலைப்படாமல் விஷயம் சரியா, தப்பா என்கிற முறையில் கவலை செலுத்தி, யோசிக்க வேண்டியதே மக்களின் கடமையென கருதுகிறேன்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

"சன்மார்க்கன்"

பொதுநலங் கருதி வெளிவரும்

ஓர் உயர்தரத்தமிழ் மாதப்பத்திரிகை.

கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் சார்பாகப் பழனியிலிருந்து ஒவ்வொரு தமிழ்மாத முதலிலும் எளிய தமிழ் நடையில் அரிய கட்டுரைப் பொருள்களுடன் வெளியிடப்படுகின்றது. உடனே சந்தாதாரர்களாகச்சேருங்கள். வருட சந்தா:—உள்நாடு ரூ. 1. வெளிநாடு 1.4.0.

ஆசிரியர்—(நாவலூற்று)

சி. சுவாமிசிவநேசம்,

'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி.

ஆராய்ச்சி அணிகலம் என்னும் தமிழ் நூல்:

கடவுளைப்பத்திய மதங்களின் உண்மைகொள்கையின் பயனான கடவுட்பேறின்பம், உலகம் பொய்யென்ற உண்மையுணர்ச்சியில்லடையும் அறிவின்பம், என்ற முடிவையும் இவைகளைத் தெரிந்துகொள்வதற்குக் கீழான படியாய் முன் அமைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வப்போதுள்ள காலத்தைப் பொறுத்ததெனவும் உலகவிவகாரங்களில் சுயநலத்தின் பொருட்டுச் சமூக; மத; ஆரியத் கொள்கைகளிற் புகுத்தப் பட்டிருக்கும் திரிபான போலி அபிப்பிராயத்தையும் மற்றும் மக்களுக்கு எத்துறைகளிலும் வேண்டற்பாலதாய் சங்கதிகள்யாவையும் பலநூற் பிரமாணங்களோடு சுருக்கவகையில் 17 அத்தியாயங்களாய்த்தொகுத்து எளிய நடையில் எழுதப்பட்டது. 125 பக்கம். 8/4 சைஸ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 0—12—0 மதுரை புதுமண்டபம் ஸெல்லர்புக் ஷாப்புகளிலும் அடியிற்கண்ட என்னிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

தா. க. தாயுமான பிள்ளை

மேல்மங்கலம், வடுகபட்டி போஸ்டு.

பெரியகுளம், மதுரை

ஆசியாக் கண்டத்தாரின் அறிவு.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

சென்ற வருஷம் (1930) ஒரு அமெரிக்கர் ஜப்பான் தேசத்தைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார். அதில் ஓரிடத்தில் அவர் பொதுவாக ஆசியாக்கண்டத்து ஜனங்களின் அறிவைப்பற்றி எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்லுகிறதாவது:—

“ஆசியாக்கண்டத்து ஜனங்களுக்கு சொந்தமாகக் கண்டறியும் புத்திகிடையாது. அவர்கள் சொல்லிக்கொடுத்ததைத்திறமையாகச் செய்வார்கள். ஆனால் தங்கள் சுயபுத்தியைக் கொண்டு புதிதாக எதையும் செய்ய மாட்டார்கள். ஒரு பாடசாலையில் ஒரு ஐரோப்பிய சிறுவனும், ஒரு ஆசியாக்கண்டத்துச் சிறுவனும் படிப்பதாக வைத்துக்கொள்வோம். பாடசாலையில் ஆசியாக் கண்டத்துச் சிறுவன் ஐரோப்பியச் சிறுவனைவிட புத்திகூர்மையுடன் பாடங்களை வாசிப்பான். பரீட்சையில் முதலில் பாஸ் செய்து விடுவான். ஆனால் ஐரோப்பியச் சிறுவனே பாடசாலையில் புத்திசாலியாகக் காணப்படமாட்டான். இருபது வருஷங்களுக்குப் பிறகு பார்த்தால் புத்திசாலியாய்க் காணப்பட்ட ஆசியாக் கண்டத்துச் சிறுவன் ஐரோப்பியச் சிறுவனுக்குக்கீழ் ஒரு குமாஸ்தாவாக இருப்பதையும் பாடசாலையில் மந்தமாயிருந்த ஐரோப்பியச் சிறுவன் புத்திசாலிச் சிறுவனுக்கு எஜமானாக இருப்பதைக் காணலாம். ஐரோப்பியச் சிறுவனுக்கு எஜமான் பதவி கிடைத்தது நிறயித்தியாசத்தினால் அல்ல. ஆனால் அவனுக்குச் சுயமாக யோசித்துச் செய்யும் பகுத்தறிவிருப்பதனால்தான். இப்படிச்சொல்லுவதனால் ஆசியா வாசிகளில் ஒருவரும் சுய அறிவுடையவர்கள் அல்லர் என்று சொல்லுவதாக நினைக்கக் கூடாது. அவர்களிலும் சுயமாக யோசித்துக்கண்டு பிடிக்கக் கூடிய அறிவாளிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மிகச்சிலர். ஆனால் ஆசியாவாசிகளில் பெரும்பான்மையோர் சொந்தமாக எதையும் கண்டுபிடிக்கச் சக்தியற்றவர்கள். அவர்கள் சொல்லியபடி செய்வதற்கு ஏற்றவர்கள்” என்று எழுதியிருக்கிறார்.

மேற்காட்டியபடி அவர் எழுதியிருப்பது உண்மைதான். அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. நமது நாட்டில் படித்த வகுப்பாரை எடுத்துக் கொள்வோம். அவர்களை மூன்று பிரிவாகப்பிரிப்போம். முதலாவது வக்கீல்கள், இரண்டாவது பண்டிதர்கள், மூன்றாவது டாக்டர்கள்.

முதலாவது வக்கீல்களைப்பற்றிக் கவனிப்போம். இந்த லாபுத்தகத்தில் இத்தனையாவது செக்ஷனில் இத்தனையாவது பேராவில் இந்தச் சட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேசில் இந்த ஜட்ஜு இந்தவிதமாகத் தீர்ப்பு செய்திருக்கிறார் என்று லா புத்தகத்தை உருப்போட்டு வாய்ப்பாடம் செய்வதில் நமது படித்த வக்கீல்கள் மற்ற தேசத்து வக்கீல்களைவிடக் கெட்டிக்காரர்கள்தான். ஆனால், எந்த வக்கீலாவது தமது சொந்த புத்தியைச் செலுத்தி ஜனங்களுக்குப் பயன்படக்கூடிய எதையாவது ஒன்றை நூதனமாகக் கண்டுபிடித்திருக்கிறாரா என்று யாரேனும் சொல்லக் கூடுமா?

இரண்டாவது பண்டிதர் கூட்டத்தை எடுத்துக்கொள்வோம். இவர்கள் பண்டை காலத்து வழக்கத்தை யொட்டிப்புராணம் பாடுவதும், கதையெழுதுவதும், அந்தாதி, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் பாடுவதுமாக இருக்கிறார்களே தவிர யாராவது ஒருவர் தமது சொந்த புத்தியைக்கொண்டு யோசித்து உலகத்துப்பயன் படக்கூடிய ஏதேனும் நூதனமாக சாஸ்திரம் செய்திருக்கிறார் என்று யாரேனும் சொல்லக்கூடுமா?

மூன்றாவது டாக்டர்களை எடுத்துக்கொள்வோம். இவர்கள் டாக்டர் பரீட்சை பாஸ் செய்து வெள்ளைக்காரரிடமிருந்து கற்றுக் கொண்டதைவிட வேறு எதையாவது புதிதாகக்கண்டு பிடித்து மக்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்லக்கூடுமா?

இவ்விதம்படித்தக் கூட்டத்தார்கள் தாங்கள் கற்றுக்கொண்டதுவரையில் இருக்கிறார்களே தவிர நூதனமாக எதையேனும் சாதித்திருக்கிறார்களா? ஒன்றும் இல்லையே. ஆதலால், ஆசியா வாசிகளுக்கு மனப்பாடம் செய்யவும், கற்றுக்கொடுத்ததைச் செய்யவும் தான் அறிவு இருக்கிறதேயொழியப் பகுத்தறிவு கொண்டு நூதனமாகக் காரியஞ் செய்யத்தெரியாது என்று மேல் நாட்டார் சொல்வதில் பிழையுண்டோ பகுத்தறிவைக்கொண்டு யோசித்துப் பாருங்கள் என்று சுயமரியாதைக்காரர் சொன்னால் அதை மறுத்துப் பழைய வழக்கத்தை விடக்கூடாதென்று படித்தவர்களும், பாமரர்களும் கூச்சலிடுவது கீழ் நாட்டாருக்குச் சொந்த அறிவு கிடையாதென்று சொல்வதை உறுதிப்படுத்துகிறது.

மரணம்.

பச்சையப்பன் கலாசாலைத்தமிழ் பண்டிதரும், திராவிடன் ஆசிரியருமான திரு மணி-திருநாவுக்கரசுமுதலியாரவர்கள் 23-5 31ந்தேதி காலை 9 மணிக்கு மார்பு அடைப்பினால் திடீரென காலமானார்.

அவரது பிரேத அடக்கம் அன்று மாலை 8 மணிக்கு நடைபெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு.

காஞ்சீபுரம்.

தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடும், வாலிபர் மகாநாடும் இம்மாதம் 16,17-5-31 தேதிகளில் காஞ்சீபுரம் “முத்தையா” நகரில் நடைபெற்றது. அவ்வமயம் கோயமுத்தூர் உயர் திரு. வா. செ. செங்கோட்டைய முதலியார் அவர்கள் ஓர் சிறிய சொற்பொழிவாற்றி மகாநாட்டின் கொடியை உயர்த்தினர். பின்னர், புதுச்சேரி பிரஞ்சு அரசாங்கத்தில் செக்ரடெரியே ஜெனரல் என்னும் பிரதம அமைச்சர் பதவி வகித்துவரும் உயர் திரு. ஆ. வே. முத்தையா முதலியார் அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவுடன் ஷை மகாநாட்டைத்திறந்து வைத்தார். மகாநாட்டின் தலைவர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் ஆசனத்தமர்ந்ததும், வரவேற்புக் கழகத்தலைவர் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் தமது வரவேற்பு உபன்யாசத்தை ஆற்றியபின், தலைவரவர்கள் பலத்தகரகோஷத்தினிடையே எழுந்திருந்து சொற்பொழிவாற்ற, சிலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, மகாநாடு இனிது முடிந்தது.

16-5.31 மாலை 5-மணிக்குதென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது வாலிபர்மகாநாடு உயர் திரு. எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ. எல. டி. அவர்களின் தலைமையில் கூடியது. வாலிபர் மகாநாட்டின் வரவேற்புத்தலைவர் திரு. சா. ரா. தங்கவேல் முதலியார் அவர்கள் ஆவார்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

பெரியார்கள், மௌலானாமகமதலி பண்டித மோதிலால்நேரு, திருச்சங்கோடு ரா. கந்தப்பமுதலியார் ஆகியவர்களின் அகாலமரணத்திற்கு வருந்துவதாகவும், நாட்டில் சமாதானம் குடிகொள்ள ஒப்பந்தம் செய்து முடிந்த மகாத்மா காந்திக்கும், லார்டு இர்வினுக்கும் வாழ்த்துக்கூறுவதாகவும், சென்னைசட்டசபைக்குச்செங்குந்த சமூகத்துக்கு பிரதிநிதித்துவம் வழங்காமைக்கு வருந்தி அதிருப்தியை சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்வதாவும், கதரை ஆதரித்தும் கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் செங்குந்த அபேக்ஷகர்களை அடுத்த சட்டசபைத் தேர்தலில் நிறுத்தவேண்டுமெனவும், அவர்கள் வெற்றி பெறுவதற்காக ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமெனவும், கல்வியைப் பரப்புவதற்கான முறையில் மிக்க ஊக்கமெடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், கல்வி விர்த்திக்காக கல்வி நிதி ஒன்று ஸ்தாபித்து அதற்கு அனைவரும் உதவிபுரியவேண்டுமெனவும், மதுபானத்தை அடியோடு விலக்கத் தீவிர முயற்சி செய்ய வேண்டுமெனவும், கல்வி நிதியை பெருக்குவதற்காகவும், செங்குந்தமாணவர் உண்டிச்சாலையொன்றை சென்னையில்ஸ்தாபிப்பதற்காகவும் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளும்படி கல்வி நிதிக் காப்பாளர் சபையினைக்கேட்டுக்கொள்ளுவதாகவும் தீர்மானித்ததுடன் வாலிபர் இயக்கம் கிராமந்தோறும் பரவுவதற்கான முயற்சிகள் செய்யவேண்டுமெனவும், ஒழுக்கத்திற்கு மாறாக நடைபெறும் திருவிழாக்கள் நடைபெறுதல், உயிர்பலியிடுதல், சலங்கை கட்டிக்கொண்டு ஆடுதல், முதலியவை போன்ற வழக்கங்களை தவிர்க்க வேண்டுமெனவும், செங்குந்த சமூகத்தில் ஒன்றுபட்ட (கலப்பு) விவாகம் நடத்தப்படவேண்டுமென சென்ற மகாநாடு அபிப்பிராயப்பட்டதையொட்டி இடையிலே இவ்வித திருமணங்களை நிகழ்த்திய குடும்பத்தினரை இம்மகாநாடு பாராட்டுவதோடு, மேன்மேலும் இத்தகைய விவாகங்கள் நடைபெறவேண்டுமென வற்புறுத்துவதாகவும், மருமகப் பிள்ளைகளுக்கு வருஷா வருஷம் சீர்கொடுக்கும் வழக்கத்தையும், கலியாணங்களில் பெண்களுக்குப் பரியம் வாங்கும் வழக்கத்தையும் அறவே ஒழிக்கவேண்டுமெனவும், பிதுரார்ஜித சொத்துக்களில் ஆண் மக்களைப் போன்று, பெண் மக்களுக்கும் போதிய சொத்துரிமைகள் இருக்கவேண்டுமெனத்தீர்மானிப்பதுடன் அதற்கான சட்டதிட்டங்களை இந்தியா கவர்ன்மெண்டார் அதிசீக்கிரம் இயற்றியமைக்க அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுவதாகவும், புருஷனை யிழந்த பெண்களுக்கு (விதவைகளுக்கு) மறுமணம் செய்துகொள்ள உரிமை இருக்கவேண்டுமெனவும், அவ்வாறு மறுமணம் செய்துகொள்வோரை விலக்கிவைத்தல் முதலியவைகூடாதெனவும், விவாகங்களுக்கும், ஆலய நிருமாணங்களுக்கும், உற்சவங்களுக்கும், கட்சி சண்டைகளால் ஏற்படும்

வழக்குகளுக்கும் அனுவசியமாகத்தொகைகளைச்செலவழித்துவருவதைக் கண்டு வருந்துவதாகவும், இனி ஆடம்பரச் செலவின்றிக் கலியாணங்களை நடத்தவும், இனி புதிதாக ஆலயங்கள் நிர்மாணிக்காமலும், வீணாகப் பணங்களை உற்சவங்களுக்காகச் செலவு செய்யாமலிருக்க வேண்டுமெனவும், பொருளாதார அபிவிர்த்தியை முன்னிட்டு ஒவ்வொரு இடத்திலும் கூட்டுறவு முயற்சிகள் வேண்டுமெனவும், செங்குந்தமித்திரனுக்கு ஆதரவு அளிக்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையெனவும் முதல் மகாநாட்டுக் கணக்கில் மீதியுள்ள தொகையை கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களிலுள்ள செங்குந்தப் பிரதிநிதிகள் கூடிய சபையில் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பெற்று, பரிபாலித்துவர வேண்டுமெனவும், இதர ஜில்லாக்களில் கூடும் மகாநாடுகளின் கணக்கில் மிகுத்தப்படும் பணத்தை சென்னையிலுள்ள செங்குந்தர் கல்வி நிதிக்குக் கொடுக்கவேண்டுமெனவும், சித்தவைத்திய சாலைகள் ஏற்படுத்தும்படி தலைவர்கள் முயற்சிக்க வேண்டுமெனவும், செங்குந்த மாணவர்கள் பலர் சென்னை இந்தியன் மெடிக்கல் காலேஜில் சித்தவைத்தியப் பகுதியில் பயிலும்படி முன்வரவேண்டுமெனவும் அபிப்பிராயப் படுவதாகவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

— —

சுயமரியாதைத் திருமணம்.

தொம்பக்குளம்.

வாலிபர் சமரச சன்மார்க்க சங்கத் தலைவர் திருவாளர்.
A. தெய்வநாயகம் அவர்கள்
நடத்திவைத்தனர்:—

23-5-31 மாலை 2-30-மணிக்கு இவ்வூர் திரு. இராமசாமி நாயுடு குமாரர் திரு. அய்யலு சாமிக்கும் வெள்ளாகுளம் ருத்திரசாமி நாயுடு குமாரத்தி திருமதி. எங்கம்மாளுக்கும், இவ்வூர் திருவாளர். இராம சுப்பு அவர்களில்லத்தில் இத்திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

திருமணச் சபை.

மேற்கூறப்பட்ட நண்பர் திரு. இராம சுப்பு அவர்களின் வீட்டின் முன்புறம் மணமக்கள் அமருவதற்கென அமைக்கப்பெற்ற ஆசனத்தில் மணமக்களும் மணமக்களின் திருமணத்தை நடத்திவிக்கும்படி அன்னாரின் சார்பாக கேட்டுக்கொண்ட திரு. நாரணப்ப நாயக்கர் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்) திரு. சுப்பய நாயக்கர் இவர்களிருவரும் மணமக்களின் பக்கத்திலும் வீற்றிருந்தனர். திருமண அழைப்புக்கிணங்கி சுமார் 200 பேர்கள் ஆண்களும், பெண்களுமாகக்கூட்டங் கூடியிருந்தனர்.

அவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள் (1) பி. குப்புசாமி (பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு) (2) டி. பெருமாள்சாமி (பஞ்சாயத்து போர்டு வைஸ்பிரசிடெண்டு) (3) கி. முத்துகிருஷ்ணம நாயக்கர், (4 ஆ. கு. வீராசாமி (பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள்) (5) ஆர். அழகிரிசுப்பு, (6) டி. பி. இராமர் (இந்து சமத்துவம் வித்யாசாலை ஆசிரியர்கள்) (7) போ. கோபால் நாயக்கர், (8) கு. கோபால்சாமி, (9) அ. சுப்பயா, (10) ச. அய்யப்ப நாயக்கர், (11) எ. தெய்வநாயகம் (இந்து சமத்துவம் வித்தியாசாலை தலைமை ஆசிரியர்) இவர்களும் இன்னும் பல சீமான்களும் சீமாட்டிகளுமாவர்.

திருமண முறை—தொம்பக்குளம் திரு இராமசுப்பு அவர்களின் வேண்டுகோளின்மேல் திரு. டி. பெருமாள் சாமி அவர்கள் எழுந்து இத்திருமணத்தை நடத்தி வைக்கும்படி திரு. எ. தெய்வநாயகம் அவர்களைக் கேட்டுக் கொண்டனர். பின்னர் திருவாளர். எ. தெய்வநாயகம் அவர்கள் தலைமை ஸ்தானம் வகித்து மணமக்கள் முன் தோன்றி அன்னாரைச் சபையினருக்கு அறிமுகம் செய்துவிட்டு பேசிய தன் சாராம்சமாவது

"சகோதரிகளே! சகோதரர்களே! நம்நாட்டில்—நம ஜில்லாவில் அதிலும் நாம் வசிக்கும் இவ்வூரில் சுயமரியாதை முறையை அனுசரித்து மணஞ் செய்துகொள்ள இவ்வளவு சீக்கிரத்தில் மணமக்கள் தோன்றுவரென்றும் அவர்களின் மணவினைத் தலைவன் நானாகவேயிருந்து நடத்திவைக்கும் பாக்கியத்தை நானடைவேனென்றும் எதிர்பாராமலே திடீரென்று எனக்கு இன்று கிடைத்த இவ்வரும் பெரும் தொண்டைக்குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்போது இங்கே நடப்பது ஓர் சீர்திருத்தமணம் அதாவது பண்டைய நாட்களில் பார்ப்பனர் சடங்குகளும் வேதப்புரைகளும் வைதீகச் சாத்திரங்களும் மூடக்கிரியைகளும் பொதிந்த மூன்றுநாள் அல்லது ஐந்து நாள் ரூ. 500, 1000 செலவில் நடைபெறும் இம்மணத்தை மேற்கூறிய சடங்குகளாவது சாத்திரங்களாவது கிரியைகளாவது இல்லாமல் ஒரேமணி நேரத்தில் எவ்வித வீணான டாம்பீகமான செலவொன்றுமில்லாமல் நடத்தப்பெறுவதே இச்சீர்திருத்தமணம். சீர்திருத்தமென்றால் என்னசீர்திருத்தினோம்? வீண்செலவை நீக்கினோம். சிக்கனமுறையைக் கைகொண்டோம். மூடச்சடங்குகளை யகற்றினோம். இம்மட்டே சீர்திருத்தியுள்ளோம். நமக்கு வேண்டியது ஒருமணமகனுக்கு ஒரு மணமகளேயோ ஒரு மணமகளுக்கு ஒரு மணமகனேயோ சேர்த்துக் கலியாணம் செய்து வைப்பதே இன்றைய சீர்திருத்தத்தில் ஆணுக்கு மற்றோர் ஆணோ, பெண்ணுக்கு மற்றோர் பெண்ணையோ விவாகம் செய்ய வேண்டுமென்று சீர்திருத்தம் செய்யப்படவில்லை பெண்பனையும் பழமைபோல் ஆணுக்குப் பெண்ணைத் தான் விவாகம் செய்கின்றோம் என்பதையும் கவனிக்கும்படி வேண்டுகிறேன். மேலும் ஆண்கள் பெண்களை அடிமைகொள்வதெனும் வழக்கமும் அகலவேண்டும். ஆணுக்குப் பெண் அடிமையல்ல. ஆணும் பெண்ணும் சமத்துவமே. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காதலித்து அக்காதல் வழி செய்துகொள்ளும் மணமே உலகச்சிறப்புடையதாகும். அத்தகையமணத்தால் அத்திருமணத்தம்பதிகளின் அன்பு என்றும் மாறுமல் நிலைத்து அன்னாரின் இன்பவாழ்வு பொங்கும் வாழ்வாகும். இத்தகைய மங்களவாழ்வைக் காதல் மணத்தால் கைகொண்ட தம்பதிகளின் திருமணமே இன்று-இப்போது-உங்கள் முன்னிலையில் நடக்குமிச்சுயமரியாதைத்திருமணமே." என்று தலைவர் பேசியதும் மணமக்களைத் தனித்தனியே உறுதிமொழிகளைக் கூறும்படி கேட்டு அவ்வாறு அவர்கள் கூறியவுடன் பெருத்த கரகோஷங்களுக்கிடையே மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டனர். பின்னர், பழைய வழக்கப்படி மாங்கல்யம் ஒன்று மணமகள் கழுத்தில் மணமகனால் போடப்பட்டது. "தாலிபூணடிமைச் சேவிச் சடங்கொழி" என்னும் நீதிக்கிணங்க இம்மாங்கல்யதாரணக்கிரியை முற்றிலும் அவசியமில்லையென்றும் ஆனால், திடீரென்று தாலிகட்டும் சடங்கை யகற்றுவது கிராமாந்திரவாசிகளுக்கு சற்று ஆரம்பத்தில் கஷ்டமாய்த்தானிருக்குமாதலாலும் இவ்வளவு வரைக்காவது மூடசடங்குகளையும் பார்ப்பனக்கிரியைகளையும் நீக்கிச்சீர்திருத்தமுறைக்குவந்ததே இன்றைய நிலையையுத்தேசிக்க நம் இயக்கமுன்னேற்றத்திற்கு ஓர் அறிகுறியென்று கருதுவதாயும் இனிமேல் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் இளைஞர்கள் தாலிகட்டல் என்னும் சடங்கை நீக்கித் தங்கள் மணவினைகளை முடிக்கும்படிகேட்டுக்கொண்டபின் திருவாளர். பி. குப்புசாமி அவர்கள், 'பெண்கள் சுதந்திரம்' என்பது பற்றியும் திருவாளர். டி. பெருமாள்சாமி அவர்கள், 'சீர்திருத்தமணத்தின் அவசியம்' என்பது பற்றியும், திருவாளர். டி. பி. இராமர் அவர்கள், 'காலத்துக்குத்தக்கவாறு சீர்திருத்தம் அவசிய'மென்பது பற்றியும், திருவாளர். ஆர். அழகிரி சுப்பு அவர்கள், 'பெண்கல்வி' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றிய பின் தலைவர் முடிவுரையாக 'பெண்கள் முன்னேற்றம்' என்பது பற்றிப்பேசிக் கடைசியாக மணமக்களை மனமாரவாழ்த்துவதாகக் கூறியுட்கார்ந்தார். பிறகு சந்தனம், தாம்பூலம் வழங்கிய பின்னர் சபையோருக்கு வந்தனமும் மணமக்களுக்கு வாழ்த்தும் கூறப்பட்டன. மாலை 6-மணிக்குத் திருமணம் இனிது நிறைவேறியது.

தூத்துக்குடி டாக்டர் நாயர் வாசகசாலை கூட்டம்.

24-5-31 ஞாயிற்றுக்கிழமையன்று இந்நகரைச்சார்ந்த ரக்ஷணியபுரவாசிகளாகிய இளைஞர்களால் நிறுவப்பட்டுள்ள டாக்டர் மாதவ நாயர் ஞாபகார்த்த வாசகசாலையின் முன் நடைபெற்ற கூட்டத்திற்கு திரு. பி. ஆபரகாம் அவர்கள் தலைமை வகித்தனர். திரு. தியாகராஜ் அவர்கள் 'மதுபானம்' என்பதைப் பற்றியும், திரு. ஜே. ஐ. பால்வண்ணம் அவர்கள் பண்டித நேருவுக்கு தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தார் வழங்கிய வரவேற்பு உபசாரப்பத்திரத்தின்கண் அமைந்த உட்பொருளைப்பற்றியும் மிகவும் தெளிவாக எடுத்தியம்பினர்.

அதன்பின் வாசகசாலைத்தலைவர் திரு. வெ. மாடசாமி அவர்கள் அருமைக்குழந்தை கமலம் இறந்துபோனதைக்குறித்த அனுதாபத்தீர்மானமொன்று காரியதரிசி திரு ஆதித்தன் அவர்களால் பிரேரபிக்கப்பட்டு சபையில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

— —

அருப்புக்கோட்டை உறவின்முறை நாடார்களின் தூத்துக்குடி மகமை சீர்திருத்தக் கூட்டம்.

24-5-31 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 3-மணிக்கு தூத்துக்குடி காரபேட்டையில நடைபெற்ற நடார்களின் மகமை சீர்திருத்தக் கூட்டத்திற்கு திரு. அ. தில்லைச்சிதம்பர நாடாரவர்கள் தலைமை வகித்தனர். அருப்புக்கோட்டை வாசிகளாகிய திருவாளர்கள். சைவபானு க்ஷத்திரிய வித்தியாசாலை மானேஜர் எஸ். வள்ளிநாயகம் நாடார், 'நாடார்குலமித்திரன்' பத்திராதிபர் கு. அ. முத்துநாடார், அ. பெ. ரத்தினவேல் நாடார் முதலிய ஆறுபேர்களும், தூத்துக்குடி வாசிகள் சுமார் 50 பேர்களும் கூடியிருந்தனர். அருப்புக்கோட்டை உயர்தரக்கலாசாலைக்குத் தூத்துக்குடி நாடார்குல நண்பர்கள் கொடுத்துதவிவந்த மகமைப்பணத்தைச் சென்ற சில வருடங்களாக நிறுத்திவிட்ட விஷயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மிகுந்த பிரயாசத்துடனே மீண்டும் தூத்துக்குடி வாசிகள் தங்கள் மகமையைக் கொடுத்துதவவேண்டியதெனத் தீர்மானிக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கரூர் நகாசபைத்தலைவர், உபதலைவர், அங்கத்தினர்களுக்கு கரூர் பார்ப்பனரல்லாத நகர வாசிகளின் வேண்டுகோள்.

கரூர் முனுசிபல் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயரின் ஸ்தானம் காலியாக யிருப்பதைக் கண்டுஷேஸ்தானத்திற்கு M.A.L.T. அல்லது B.A.L.T.யில் ஸ்பெஷல இங்கிலீஸில் தேர்ந்த அனுபோகமுள்ள ஒருவர் தலைமை உபாத்தியாயர் வேலைக்குத் தேவையென்றும், விண்ணப்பம் அனுப்புகிறவர்கள் தங்களுடைய விண்ணப்பத்தில் அபேஷகர்களின் அனுபவமும், இன்னவகுப்பைச்சார்ந்தவ ரென்றும், விபாமாக விண்ணப்பத்தில் எழுதியனுப்ப வேண்டுமென்றும் விளம்பாத்தை ''ஜஸ்டிஸ்'' ''ஹிந்து'' பத்திரிக்கையில் கண்டு மகிழ்ச்சியடைவதுடன் ஷேவேலையில் சுமார் 30வருடங்களாக ஓர் பார்ப்பனர் கையிலிருந்துவந்ததால் பார்ப்பனரல்லாத மாணர்வகளுக்கு அநேக சொல்லமுடியாதத் துன்பங்களேற்பட்டதுடன் அநேக மாணவர்கள் வெளியூர்களுக்கும் சென்று படித்துக்கொண்டிருக்க நேர்ந்ததைக் கவனித்து வந்த நகரவாசிகள் இனிமேலாகிலும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் சுகமாகப் படிக்கவேண்டுமென்னும் விருப்பத்தைக்கொண்டுஇப்பொழுதாவது ஓர் பார்ப்பனரல்லாததகுந்த அனுபோகமுள்ள தலைமை உபாத்தியாயரை அமர்த்த வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறோமென பார்ப்பனரல்லாதாரின் பிரதிநிதி ஒருவர் எழுதுகிருர்.

'தீண்டாமை.'

நமது வீட்டில் பூனைக்கும், நாய்க்கும் இடம் கொடுக்கிறோம் ஆனல், நம்மைப்போல் உள்ள நமது சகோதரர்களுக்கு உள்ளே வர அனுமதி கொடுப்பதில்லை. அவர்களைத்தீண்டாதாரென மதிக்கின்றோம். கவர்ன்மெண்டார் மனமாறுதல் காட்ட.வேண்டுமென்றும் மகாத்மா விரும்புகிருர். அதற்குமுன் நாம் நமக்குள் மனமாறுதலிருப்பதைக் காட்டவேண்டும். சினுவில் மனிதர்களுக்குள் வித்தியாசம் பாராட்டுவதே இல்லை: சமூகசம்பந்தமாகவுள்ள தடைகளையெல்லாம் நீக்குங்கள்.

சர், ஸி, பி. ரே.

மதிப்புரைகள்.

தமிழ்கடல் வெளியீடு.

ஆத்திச்சூடி முதல் சங்கச்செய்யுள் இறுதியாக உள்ள எல்லா நூல்களும் பிரசுரிக்கப் படுமென்று சொல்லப்பட்டவைகளுள் இது இரண்டாவது வெளியீடாகும். இதின் கண் வெற்றிவேற்கை, உலகநீதி, நீதிவெண்பா ஆகிய மூன்றும், பதஉரை, பொழிப்புரை, கருத்து இலக்கணக்குறிப்பு முதலியவைகளோடும் தக்க உவமான உவமேயங்களோடும், சிலவற்றிற்கு பழைய உரைகளோடும் இதன் ஆசிரியர் உயர் திரு கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் இயற்றியுள்ளார்.

சேர்த்தியாய் பைண்ட் செய்யப்பட்டு சுமார் 250 பக்கங்களுக்கு மேல் கொண்டது.

விலை ரூ. 1.

கிடைக்குமிடம்:
தமிழ்க்கடல் ஆபீஸ்
சென்தோம்
மைலாப்பூர். சென்னை,

''ஸ்திரீதன.''

திருவள்ளூர் அகில இந்திய தமிழ் லாஜர்னல் ஆசிரியர் திரு எம். எஸ பார்த்தசாரதி அய்யங்கார் பி. ஏ. பி. எல். அவர்களால் இயற்றப்பட்ட மேற்கண்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்துளது. ஹிந்து சட்டத்திலுள்ள பல அம்சங்களை சிறுசிறு புத்தகங்களாக வெளியிட தொடங்கியதில் இது முதல் வெளியீடாகும் இது ஸர். ஹரிசிங் கோர், ஸர். டின்ஷா முல்லா முதலியோர், ஆங்கிலத்தில் எழுதியதைத் தழுவியும், பல நீதிமன்றங்களில் நடந்த கேஸ்களின் உதாரணங்களோடும், ஸ்திரீதன சொத்துக்களின் விபரம், வார்சஉரிமைகள், ஸ்திரீதன சொத்துக்களின்மேல் ஆண்களுக்குள்ள உரிமை முதலியவற்றை பற்றித் தெளிவாய் விவரிக்கப்பட்டுள்ளது. இதன் விலை அணு 8.

கிடைக்குமிடம்:
ஆசிரியர் அகில இந்தியா
தமிழ் லாஜர்னல்
திருவள்ளூர்.

''ஜஹவர்லால்''

சென்னை நேஷனல் பப்ளிஷிங் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட மேற்கண்ட புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இதில் பண்டிதரின் இளமை,கல்வி,மேனாட்டுப் பிரயாணம், தேசசேவை முதலியவைகள் வெகு விளக்கமாக விவரிக்கப்படடுள்ளது. இனிய தமிழில், உயர்ந்த காகிதத்தில் பண்டிதரின் முகவுரைப் படத்துடன் கூடியது. விலை அணு 12.

கிடைக்குமிடம்:
நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
23. ஈர்பாலு செட்டி வீதி
சென்னை.

தொழிலாளன்.

சென்னை திரு டி. எம். பார்த்தசாரதி முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட தொழிலாளன் என்னும் தமிழ் ஆங்கில வாரப்பத்திரிகையின் முதல் இதழ்கள் வரப்பெற்றோம். இதில் தொழிலாளர் கடமை, கூட்டுறவு தனிப்பட்ட இயக்கத்தின் அவசியம் முதலியவை வற்புறுத்தப்பட்டிருப்பதோடு அவர்களது உரிமைகளைப்பெற போராட வேண்டிய அவசியமும் விளக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் இயக்கத்தைப்பற்றியபல கட்டுரைகளும் செய்திகளும் காணப்படுகின்றன. தொழிலாளனை ஆதரிக்கவேண்டியது அன்பர்களது கடமையாகும்.

வருடசந்தா ரூ: 1—8—0

விலாசம்:
6 நம்புலையர் தெரு
சௌகார்பேட்டை
சென்னை.

புதுவருட கியாலண்டர்.

பூனைமேடு பி, எஸ். ஜி. அண்ட் சன்ஸ் தர்மஸ்தாபன இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்டின் பல படங்களுடன் கூடிய அழகிய பெரிய புது வருட கியாலண்டர் ஒன்று வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

அதிசயமான இரகசியங்கள்!

நீங்கள் இதுவரையில் கண்டிராத இரகசியங்கள் ஆச்சரியப்படும்படியான உண்மைகள் அடங்கிய புஸ்தகம் இனமாக அனுப்புகிறோம். இப்புத்தகத்தில் கெய்ரோடன் டானிக் மருந்தை வாங்கிச்சாப்பிட்டுச் சுகமடைந்தவர்கள் புகழ்ந்து எழுதியிருக்கிற நற்சர்ட்டிபிக்கட்டுகளை வாசித்து அதிசயப்படுவீர்கள். தாதுபுஷ்டி மருந்துகளுக்கெல்லாம் அரசன்.

''கெய்ரோடன்''

தாது புஷ்டிக்கும் கைகண்டது. வெள்ளை, மூலச்சூடு, மேகக்காங்கை, வாய்ப்புண், உஷ்ண வியாதிகள் தீரும். மலச்சிக்கல், வாய்வுகள், வயிற்றுவலி, க்ஷயம், இருமல், சுவாசகாசம், நீர்வியாதிகள், வாதநோய்கள் நீங்கும். இரத்த சுத்தி, இரத்த விருத்தி, தேக புஷ்டி, பலம் அழகு தேகக்குளிர்ச்சி தரும். பத்தியமில்லை. பூர்ண சுகத்திற்கு ஒரு புட்டி போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5—0—0. தபால் செலவு வேறு.

விலாசம் }
தந்தி விலாசம்: }
சித்தர் மதுரை }

ஆர். எஸ். பதி அண்டு கோ., (ரிஜிஸ்டர்ட்)
ஸ்ரீமீனுக்ஷி அம்மன் கோவில் மேலக்கோபுரம் உட்புறம்,
டிப்போ நெ. 5, மதுரை.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று கேட்பதற்கு காரணம் ஏதாவது சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்.

அந்தச்சூழ்ச்சிதான் எதுவாக இருக்கவேண்டும் என்றுபார்ப்போம். மதமும், மதக்கலைகளும், மத நாகரீகமும் ஒழிந்துவிட்டால், எல்லோரும் ஒரேசமூகமாக வேண்டியதுதான். சாதி உயர்வு தாழ்வுகள் இருக்கமுடியாது அடுத்தபடியாகப்பொருளாதார சமத்துவமும் உண்டாகவேண்டியதுதான் சாதி உயர்வு தாழ்வு அடியோடு ஒழிவதற்கும், பொருளாதார சமத்துவம் உண்டாவதற்கும், நமது நாட்டு முதலாளிகள் சம்மதிப்பார்களா? அவர்கள்தானே இப்பொழுது காங்கிரசாக விளங்குகிறார்கள்.

அடுத்த படியாக தெய்வீகமுள்ள மதங்கள் பாதுகாப்புடன் இருப்பதனால் என்ன நன்மையுண்டாகின்றதென்று பாருங்கள். சமீபத்தில் காந்தியடிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உண்டான தகராறிலிருந்து, அந்நியரைத்தம் மதத்தில் சேர்ப்பதும் கிறிஸ்தவமதத்தில் முக்கியமான கொள்கையென்பது வெளிப்பட்டு விட்டது, "மற்றமதத்தினர்களை இல்லாமற்செய்யவேண்டும்" என்று மகமதிய மதம் ஒப்புக்கொள்ளுவதால் "எல்லோரையும் மகமதியராக்க முயலவேண்டும்" என்பதும் மகமதிய மதக்கொள்கைகளில் ஒரு முக்கியபகுதி என்று அறியலாம். மற்ற மதத்தினரை இந்து மதத்தினராக்குவதற்காகவே சுத்தி சங்கதன் இயக்கம் காணப்பட்டது என்பதை யாரும் அறிவோம். ஆகவே இந்தியாவில் தற்போதுள்ள கிறிஸ்துவம், மகமதியம், இந்து என்கின்ற மூன்று பெரிய மதங்களும், அந்நிய மதத்தினரைத்தம் மதத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்னும் நோக்கமுடையனவென்பதை உணரலாம். வரவர இக்கொள்கை முதிர்ந்து வலிமை பெற்றுக்கொண்டே வருகின்றது. மதங்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றால் இக்கொள்கைக்கும் பாதுகாப்பு அளித்துதானே ஆகவேண்டும். இதற்கும் பாதுகாப்பு அளித்துவிட்டால் இந்து முஸ்லீம் ஒற்றுமை இருக்க முடியுமா? இந்து கிறிஸ்தவ ஒற்றுமை இருக்கமுடியுமா? கிறிஸ்தவ முஸ்லீம் ஒற்றுமை இருக்க முடியுமா? இதற்கிடையில் கிடக்கின்ற குட்டி மதங்கள் சும்மா இருக்குமா? ஒரு நாளும் நாட்டில் சமாதானமும் இன்பமும் இருக்க முடியாதல்லவா? ஆகையால் தெய்வீகம் உள்ளவைகளையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும். மானுஷீகத்திற்கே முதன்மையும், இடமும் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தியா ஒரு தேசமாக இருந்து நன்மையடைய முடியும் என்று நாம் கூறுவதை நீங்களும் யோசித்துப்பார்த்து முடிவுக்கு வாருங்கள்.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

தால்' தேச பக்தர்கள் பொருளாதார நிபுணர்கள் ஆகியவர்களின் கண்களுக்கு அந்நியரால் கொள்ளையிடப்படுவது தென்பட்டாலும் இவ்வழியில் நாட்டின் செல்வம் அழிவது புலனாகாமற்போனது வருந்தத்தக்கதே. அநேக நூற்றாண்டுகளாக திணிக்கப்பட்டுள்ள மத நம்பிக்கை அவர்களை அவ்வழியில் திரும்பிப்பாராதபடி செய்து வருகிறது. அப்படி எங்கோ ஒருவர் அல்லது இருவருக்குத் தோன்றினாலும் அதை தைரியமாய் எடுத்துக் காட்ட அஞ்சுகின்றனர். எதிர்ப்புகளையும் பழிச்சொற்களையும் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லாததால் அவர்கள் மௌனஞ்சாதிக்கின்றனர். இக்கொள்ளை அரசியல் சுதந்திரத்தாலோ பொருளாதார சுதந்திரத்தாலோ, நின்றுவிடமுடியுமா என்று மற்றொரு முறை யோசித்துப்பாருங்கள். குருட்டு நம்பிக்கை மூடபக்தி ஆகியவைகளை யொழித்து மக்களுக்கு பகுத்தறிவை ஊட்டாதல்லாமல் வேறு வழியில் இதைத்தடுக்க முடியுமாவென்றும் யோசியுங்கள். மதத்தின் பேரால் நடைபெறும் இவ்வித கொள்ளைகளாலும் கோயில் முதலியவைகளில் விரயமாகும் அளவற்ற செல்வத்தாலும் நாட்டின் முன்னேற்றம் எவ்வளவு தடைபட்டுள்ளது, தடைபடுகிறது இனியும் தடைபெறும் என்பது புலனாகவில்லையா? ஆகவே இவ்வாறான கொள்ளைகளை ஊன்றி கவனித்த சுயமரியாதைக்காரர்கள் பல எதிர்ப்புகளுக்கும் அஞ்சாது இவைகளை அழுத்தந்திருத்தமாகக் கண்டித்து ஒழித்து வருகின்றனர். 'கடவுளின் பேரால் நாட்டின் செல்வம் பாழடைவதைத் தடுக்கபாடு படுவோர் நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வளவோ உதவி செய்தவர்கள் ஆவார்கள். அவர்கள் அரசியற் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவோரைவிட நாட்டின் க்ஷேமத்தைக் கருதுவதில் எவ்விதத்தில் பின்னடைந்தவர்கள் என்று யோசித்துப்பாருங்கள். அப்பொழுது சுயமரியாதைக்காரர்களைக் குறை கூற உங்கள் மனம் இடங்கொடாது. இதுவரையில் பல துன்பங்களுக்கும் பழிச்சொற்களுக்கும் அஞ்சாது எதிர்த்துப்போராடி வந்ததுபோலவே இனியும் சுயமரியாதைக்காரர்கள் புதிய பலத்துடனும் உற்சாகத்துடனும் போராடுவார்கள். இனியாகிலும் பொருளாதார நிபுணர்களும் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுடையவர்களும் இதில் போதிய அளவு கவனஞ்செலுத்துவார்களாக!

கடைசியாக காஞ்சீபுரவாசிகளும் பொது ஜனங்களும் இப்புட்டுகளுக்கு ஏமாறாமல் இவைகளால் ஏற்படும் தீமைகளை உணர்ந்து இனிமேல் இவ்வாறான காரியங்களுக்குப்பொருள் உதவி செய்யாது, தேச முன்னேற்றத்திற்கான வழிகளில், பொருளை செலவிட்டு இன்புற்றுவாழ வேண்டுமென்று அவர்களைப்பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்கக்கொளல்' [ற்றன் ஆன்றோர் செய்கையாகையால் அவர்களும் இதை நன்கு ஆலோசித்துப் பார்த்து நன்மையென்று தோன்றுவதை ஏற்றுக்கொண்டு தீமையானவற்றை ஒதுக்கி நலம் பெறுவார்களாக!

WANTED Candidates for Telegraph & Station Master's Classes. Apply with 2 annas stamp to:—
Imperial Telegraph
College, DELHI

இனாம்! இனாம்!! இனாம்!!!
மிகவும் குறைந்த விலை. ஒரே மாதம் மட்டும்
பாலேஸ் ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் வாச் நெ 501.



22 காரட் ரோல்ட் கோல்ட் கோட்டன் டையல் ரிஸ்லெட் கெடியாரம் 5 வருஷ உத்தரவாதம். ஆண், பெண்களணியத்தக்க அலங்கார பூஷணமாகும். இத்துடன் (1) கூலிங் கண்ணாடி, (2) 14 காரட் நிப்புடைய பௌண்டன் பேனா, (3) ரிஸ்ட் லெதர் செயின் இனாமளிக்கப்படும்,
விலை ரூபாய் 6—0—0.
பூரா தொகை முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.
மலேயா முதலிய நாடுகளுக்கு வி. பி. யில் அனுப்பப்படும்,
விலாசம்:—பிராட் பீல்ட் வாட்சு கம்பெனி,
பார்க்டவுன், மதராஸ்.

இரத்தமே உயிர்.

திருவாரூர், ஷண்முகானந்த வைத்தியசாலையின்
இணையற்ற இரத்தவிர்த்தி மருந்து.

சுவர்ண காந்தம்.

அயம், காந்தம், அப்ரகம், தங்கம், மண்டூரம் 5-ம் சேர்ந்தது.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப்பாண்டு, விஷப்பாண்டு, சூதகபாண்டு, நீர்ப்பாண்டு, பித்தவெட்டை, ஜுரக்கட்டி, சூதகக்கட்டி, குன்மம், பித்தவாயு, மதுமேகம், க்ஷயம், காசம், கைவீக்கம், கால்வீக்கம், வயறுவீக்கம், கிராணி, அதிசாரம், உஷ்ணவாயு, சூதகவாயு, முதலிய அசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி நல்ல இரத்தவிர்த்தியுண்டாகும்.

1-நெ. 20 நாள் மருந்து விலை ரூ. 10—8—0 வி. பி. வேறு.

டாக்டர் கண்ணுசாமி
சென்னை மாகாணசித்த வைத்திய பிரச்சாரம்
திருவாரூர்.

N. B.—குணமில்லாவிடில் பணம் வாபீஸ்,

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற
"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

காதலின் வெற்றி
அல்லது
கலப்பு மணம்.

(B. R. சின்ன கிருஷ்ணசாமி)

தென்னையும் மாவும் செறிந்துயர்ந்து—ஓங்கும்
சிங்காரத் தோப்பொன்றில் மாலையிலே—அன்று
பின்னிய பச்சைத்தடுக்கின்மேலே—சென்று
பேரயிர்ப்போடு சற்றேயமர்ந்தாள்—அந்தக்
கன்னியின் நாமம் நப்பின்னையென்றே—இந்தக்
கண்ணகல் ஞாலஞ்சுழற்றிடுமாம்—அவள்
புன்னகையும ஒளிர் நன்னுதலும்—சற்றுப்
பொலி விழந்தன மனவலுவின்றியே. (1)

தடுக்கின்மேல் சாய்ந்திட்ட மடக்கொடிதன்—மனந்
தன்னிலே இன்னணம் எண்ணுகிறாள்—தாம்
பிடித்தபிடி விடாப் பெட்புடைய—என்
பெற்றோர்க்கென் சொல்லினும் ஏற்றுகிலார்—நான்
படித்துக்கெட்டே னெனக்கடுகடுத்துச்—சற்றும்
பற்றில்லாதே நிதம் தூற்றுகிறார்—அந்த
வடித்த தற்குறியான மடையனுக்கே—நான்
வாழ்க்கைப்படின் பெற்றோர் வாழ்த்துவாராம். (2)

காதலும் ஆக்கப்படும் பொருளோ—என்றன்
கருத்தைக்கவர் "நடராசன்"றானும்—வேறு
சாதியனென்றும் ஓர் பேதங்கொண்டு—வீண்
சாத்திரப்பிடை மூடப்பழக்கம்—தன்னை
ஆதாரமாயெனக் கோதுகிறார்—இதன்
ஆபாசந்தன்னை நான் ஆய்ந்துசொல்ல—பன்நூல்
ஓதித்தெளிந்ததன் உண்மைதன்னைப்—பிறர்
உணரும்படிச் சொல் "கைவல்யம"ன்றே (3)

காதலன் ஆசை ஒழித்திடவாம்—இன்றேல்
கட்டம்மென்மே லென்னைக்கிட்டிடுமாம்—உற்றோர்
ஆதரவெல்லாம் அழிந்திடுமாம்—உள்ள
ஆடையணிகளும் போய் விடுமாம்—என்
நூதன வாழ்க்கையை ஆதரிக்க—ஒரு
நொண்டிமனிதனும் ஈண்டிலையாம்—தங்கள்
போதனையின்வழி காதல்கொண்டால்—வேத
பூசுரரும் ஆசிபேசுவராம். (4)

என்னே! பெற்றோர்களின் இழிதகமை—மக்கள்
எய்தும் நல் இன்பத்திற்கிடையூறாய்—நின்று
தந்நலம் புகழ்பொருள் தமைவிரும்பி—மக்கள்
சாமளவும் துயர் தந்திடுவார்—இன்று
என்னைப்போல் ஆண்பெண்கள் எண்ணிலபேர்—பாழும்
"இந்து மதம்" என்னும் கூட்டிற்குள்ளே—சிக்கி
தன்னுடை வாழ்க்கையைத்தான் வரிக்கச்—சு
தந்திரமின்றித் தவிக்கின்றார்கள். (5)

பன்னிப்பலபல எண்ணினாலும்—பெற்ற
மாதகர்தம் பிடிவாதம்விடார்—இனி
என்னுயிர் ஏகினும் அஞ்சுகிலேன்—நான்
இல்லம்சென்று மனத்தெண்ணம் சொல்வே—எனக்
கன்னியெழுந்திள வன்னமெனச்—சென்று
கதவுந்திறந்துள்கால் வைத்திடவும்—அன்னை
என்னடி! உண்ணாதே பின்னும் சென்றாய்—உன்னை
எங்கெங்கு தேடுவேன் அங்கம் நோக. (6)

போடியம்மா என்னைத்தேடாதே—உன்றன்
போதனை என்றனுக்கோதிடாதே—மனம்
நாடும் நண்பர் "நடராசன்" வந்து—அடி
நாயகி என்றெனைக் கூவிடுமுன்—வேறு
ஆடையணிகளும் தேடுகிலேன்—சோறும்
அந்நாள்வரையி லுண்ணாதிருப்பேன்—உயிர்
கூடுவிட்டே யகன்றேகிடினும்—கொண்ட
கொள்கைவிடேன் இது! "சத்தியம்" காண். (7)

சத்தியம் செய்திட்ட பத்தினிப்பெண்—உடன்
தன்னறைசேர்ந் துண்ணாவின்றிருந்தாள்—மகள்
பைத்தியம் பார்த்தன்னை சித்தம்நொந்து—தன்
பதியின் கருத்தைப் பேதித்திடுவாள்—இப்
பத்துநாளாய்ச் செல்வப்புத்திரி தான்—என்னைப்
பார்த்திடவும் பசிதீர்த்திடவும்—இன்றி
எத்தறியும் "நடராச" னென்றே—சொல்லி
ஏங்குகிறாள் உயிர் நீங்கிவிடும். (8)

உள்ளதும் நம்மளுக்கொருகுழந்தை—அதும்
உண்டியில்லாதுயிர விண்டிடவோ? நாம்
குள்ளச்சமுகத்தின் கொடுமைகட்கு தலை
குனிந்து நடப்பது கூறிடுவீர். (9)

சனங்களெல் லோருமோர்சாதியாரே—அதில்
சாந்தம் சமத்துவம் பேரிரக்கம்—கொண்டோர்
மனிதரில் மேலவர் மற்றவர்கீழ்—இது
மாந்தரெல் லோர்க்கும் உகந்ததுவே. (10)

பெண்ணினல்லாள் விரும்புங்கணவன்—சாதி
பேதமொழித்ததி நேசமுடன்—ஏழைக்
கெண்ணும் எழுத்தும் பொதுவறிவும்—வர
இரவும் பகலும் உழைப்பவராம்—செல்வம்
நண்ணும் அழகன் நடராசற்கு—நம்
நப்பின்னை தானமனம் ஒப்பினளாம்—அவர்
என்ன குலம்சாதி யாயிடினும்—நீர்
எண்ணியவரன் இவற்கிணை யில்லையே. (11)

ஞாயத்துடன் தேவி சொன்ன சொல்லை—அவள்
நாதனும் காதலால் ஏற்றுக்கொண்டான்—இதை
நேயங்கொண்ட நடராசனுக்கும்—கூறி
நீதனிர் காதலி வாதை யென்றார்—பின்னை
பாயலில் சென்றதும் "நாயகியே"—என்னைப்
பாரடி என்றவன் கூறிடுமுன்—அத்
தூயவன் தோளினில் சேர்ந்துவிட்டாள்—அந்த
தோகைதன் காதலில் வாகையீதே. (12)

தீர்க்கரோகத்தில் துணையடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I

சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அனுஷ்டானம் இல்லாவிட்டாலும் வேதத்திலும் சிஷ்டாச்சாரத்திலும் உணர்ச்சிமட்டும் போதுமென்கிற மதம் எங்காவது உண்டா? அப்படி இருப்பதில் பிரயோஜனமென்ன? பார்ப்பனனின்வயரை நிறைத்து மேன்மைப்படுத்தவா இத்தனைப்பெரிய மதமிருக்கிறது.

வேதம் அனுதிஎன்பதில்நம்பிக்கை உடையவர்களே இந்துக்களென்று சபை சொன்னதைக்கவனிப்போம். வேதம் யாதொரு புருஷராலும் செய்யப்பட்டதன்று. அதனால் அபௌருஷேயம் என்ற பெயர் அதற்குண்டாயிருக்கின்றது. அந்த வேதம் அனுதியா அல்லவா என்பது அல்ல இங்குள்ளவிவகாரம். அனுதியிலிருந்து மூலைத்தலைகளின் ஏற்பாட்டைப்பற்றினதே நமக்குள்ள விவகாரம். ஞானம் அனுதி. ஞானத்திற்கு வேதமென்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. எதற்கும் மேலாம் பெரும் சக்தி அனுதி. அதற்குக்கடவுள் என்கிற பெயரிடப்பட்டிருக்கிறது. அடியும் முடியுமற்று அனுதியாகவிருப்பதுசிருஷ்டி. அதற்கு உலகமென்றுபெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஞானமென்னும் வேதமும், கடவுள்என்னும் சக்தியும், உலகமென்னும் சிருஷ்டியும் ஆதியா? அனுதியா? எல்லாம் ஒன்ரு? இரண்டா? எது ஆதி?எது அனுதி? முன்னெது? பின்னெது? என்பதும் எங்கள் விவகாரமல்ல. அனுதியானவைகளிலிருந்து தோன்றியவைகள் மாரும் தன்மையுடையனவை. நாராயணன் அனுதி நாராயணனிலிருந்து வந்த நான்முகன், நான்முகனிலிருந்து வந்த மனு,மனுவிலிருந்து வந்த ரிஷிகள், ரிஷிகளிலிருந்து வந்த சாஸ்திரிகள், இவர்களுடைய ஸ்மிருதிகளும் சாஸ்திரமென்று சொல்லப்பட்டவைகளும் காலத்திற்கு ஒத்ததுபோல் மாறிவிடவேண்டுமென்பதே ஆசாரசீர்திருத்தக்காரர்களின் விவகாரமாகும் கர்மகாண்டமுதல் கெருடபுராணம் வரையிலும் அனுதியல்லவே. கடவுள் அனுதி. நமக்காக யுகங்கள் தோறும் மாறி மாறி நடந்து காட்டினவைகள் அனுதியல்லவே. சுகம் அனுதி. ஏற்றுக்கொள்ளுவது அனுதியல்லவே. கஷ்டம் அனுதி. பரிகாரங்கள் அனுதியல்லவே. ரிஷிகள் காட்டில் கண்டபெண்களைக்கூடி பிள்ளைபெற்று காட்டிலே விட்டு கண்டவர்கள் வளர்த்தது அனுதி. ஆணுக்குப்பெண்ணும், பெண்ணிற்கு ஆணும் தேடிவர சுங்கம்,வந்தபின் சுங்கம், கலியாணசுங்கம், படிப்புச்சுங்க மெல்லாம் கொடுத்து ஆடம்பரக்கலியாணம் பண்ணுவது அனுதியல்லவே? இமயமலைச்சாரலில் அகப்படக்கூடிய சோமக்கொடியின் சாற்றின்கள்ளை யாகசாலையில் குடிப்பது அனுதி. பனை, தென்னை ஈச்சை யல்லாமல் பிராண்டி ஒயின் உஸ்கி முதலிய கள்ளையும் பல இடங்களில் குடிப்பது அனுதியல்லவே. மரஉரிதரித்து மரத்தடியில் படித்து மத்தியானத்திற்கு உபாதானம் வாங்கி உண்பது அனுதி. உத்தியோகத்திற்கு சிம்லாநீலகிரி மலைகளைச்சுற்றுவது அனுதியல்லவே. சோமப்பிரவாகன், அதவர்யூ, ஓதா, உத்காதா, வத்ஸ்யன் முதலிய யாககர்த்தாவான பிராமணர்களால் யாகத்தில் பக்குவப்படுத்தின மாம்சத்தை உண்பது அனுதி. மேட்டி குசினி, சொக்கரா, பட்ளர் முதலியவர்களாற் தயார் செய்யப்பட்ட மாம்சங்களை உண்பது அனுதியல்லவே. யாகப்பசுக்களை மந்திர சக்தியால் கொல்லுவது அனுதி. பீஜத்தை நெருக்கி இப்பொழுது கொல்லுவது அனுதியல்லவே. நிர்வாணமல்லவோ அனுதி. குலேசதால்பட்டும் பன்னிரண்டாறும் அனுதியல்லவே. புளிப்பும், நாரும், பால்கடுப்புமுடை மாம்பழம் அனுதி. குல்கந்து, குலாப்; குல்தார், குண்டு, கோவா, சாலை, பல்து, பாதரி, முதலிய மாம்பழங்கள் அனுதிபல்லவே. வெங்காயம் அனுதி. வெங்காயச்சாம்பார் அனுதியல்லவே. உளுந்தும் அரிசியும் அனுதி, உப்புமாகூட அனுதியா? பானைத்தண்ணீர்அனுதி. பாட்டல் தண்ணீர் அனுதியா? பால்கஞ்சி, மோர்கஞ்சி, பச்சைப்பயர்கஞ்சி,பழைய அரிசிக்கஞ்சி, நெற்பொறிக்கஞ்சி, நெரிஞ்சிக்கஞ்சி, ஆயுர்வேதத்தின் சிஷ்டாச்சாரமல்லவோ.அதைவிட்டுமெல்லின்கஞ்சி, ஆர்விக்ஸ்கஞ்சி, செல்ஸ்மில்க்கஞ்சி, சிக்கனபிராத்துக்கஞ்சி, கோழிமுட்டை கோழிச்சூப்புக்கஞ்சி முதலியகஞ்சிகள் வந்தவகை என்ன? நீசத்தண்ணீரும் நீர்மோரும் சிஷ்டாச்சாரமாகவிருக்க காப்பியும் டீயும் வந்த கணக்கென்ன? வேதம் அனுதி என்றும் சிஷ்டாசசாரமென்றும்சொல்லுவதெல்லாம் மற்றவர்கள் தங்களுக்குத்தாழ்ந்திருக்க வேண்டுமென்கிற எண்ணத்தை பார்ப்பனர்கள் வைத்துக்கொண்டு சிறிதுகூட சிஷ்டாச்சாரத்தை அனுஷ்டிக்க முடியாத இவர்கள் சிஷ்டாச்சாரத்தை நம்புகிறவர்கள்தான் சனுதனதர்ம இந்துக்களாம்!

(தொடரும்.)

(4ம் பக்கத்தொடர்ச்சி)

3. மிருகசாதி, மக்கள்சாதி, நீர்வாழ்வனஎன்றவேறுபாடுகள்இயற்கையமைப்பில் ஏற்பட்டன. உறுப்புகளில் ஒத்த மனிதரில் சாதி கிடையாதென்பது நம் நாட்டின் கொள்கையாயிருந்தது. தொழில் வேறுபாட்டால் குலங்கள் ஏற்பட்டன.

தொடாமை(தீண்டாமை) தூய்மையைப் பொருத்தது. தூய்மையிலாத மக்களை தந்தைகளே புறக்கணிக்கின்றனரன்றே? ஆனல் அன்னுரை அவர் முற்றினும் வெறுப்பதிலை. அதுபோன்றே தொழிற்சிறப்பு வேறுபடினும் தொழில் மக்களை தூய்மையின்மைபற்றி வெறுக்கும் வழக்கம் இந்நாட்டிலன்னியர் புகும் வரை இலாதிருந்தது. எக்குடியிற்பிறப்பினும் அறிவிற்சிறந்த கற்றேரை வருக என்றனர். மரவேலை, சிறபம், கட்டிட வேலை, மருத்துவத்தொழில், முதலான பல இன்றியமையாத தொழில்களிற் சிறந்தாரை என்றும் பெருமைப்படுத்திவந்தனர். அவரைத் தீண்டலாகாது, அவருடன் உண்ணலாகாது, அவர் தொட்டதைத் தொடலாகாது, அவருடன் மணக்கலாகாது என்ற கொடுஞ்செயல்கள் பின்னரே ஏற்பட்டன. இவற்றல் மக்களுக்குள் பிளவு ஏற்பட்டு ஒற்றுமை இழக்க நேரிட்டது. ஆங்கிலேயர் அரசியல் முறையில் இந்நாட்டு மக்களைப் பிளவுபடுத்துவதே ஆட்சிமுறையென்று கருதுகின்றதாகக் குறை கூறும் ஆரியர் கை கொண்ட சூழ்ச்சி முறையுமதுவேயாம். ஆதலால் தொழில்பற்றி குலம், கூட்டம், வகுப்பு வேறுபடினும் மக்களை மக்களாக நினைத்து நடத்த முயலின் பிளவு நீங்கும், ஒற்றுமை மிகும், பலவித ஐக்கிய நலமுண்டாகும். சமபந்தி போசனம், கலப்புமணம் இவை போன்றனதாமே நிகழும். தள்ளிப்பழுத்த பழம் பழமாமா?

4. புறத்தூய்மை நீரினலமையுமெனின் அகத்தூய்மை நல்ல மாசற்ற மனத்தால் வந்துறும். கல்வியறிவு வளரவளர, அது பரவப் பரவ, வேறுபாடுகள் ஒழியும். ஐக்கியம் விருத்தியாகும்.கல்வியால் சிறைச்சாலை மூடப்படுமாயின் அகஞனக்காரச்சிறையும் நீங்கும். 'உன்னையறி' என்பதும், 'மக்களின் குணதிசயங்களைப் படித்தலே முதற்படிப்பு' என்பதும், உயர்ந்த உண்மைகளெனப் புலப்படும். உள்நோக்குவார்க்கு உண்மைகள் புலப்படாதிரா, 'யூகரும் மக்களே புலனைந்தும் உள்ளவரே, அறிவுடையவரே, எம்கொடுமைகளால் துயருறுரோ' என்றுகூறிய செகப்பிரியர் அறிவின் பெருமைவியக்கத்தக்கதன்றே? தாழ்த்தப்பட்ட மக்கள் என்பார் யாரால் தாழ்த்தப்பட்டனர்? தற்பெருமை மேலீட்டால் உண்மை யறியாத மக்களாலன்றே? "மக்களின்மீது மக்கள் இரங்காமையாலே எண்ணிறந்த துயரங்கள் விளைகின்றன" என்றனர் மேனுட்டுப் புலவர் சிகாமணியாரும். உண்மையான கல்வியைப் பெறுதவர்கட்கு உண்மை தோன்றுது. இப்பொழுது பரவிவரும் கல்வி வயிற்றுப் பிழைப்பிற்குச் சிறிது ஏற்றதேயன்றி மனவிரிவுண்டாக்கத்தக்க கல்வியன்று. உண்மையான பல்கலைக் கழகம் எற்படின் மனிதப் பிறப்பின் பெருமை வெளிப்படும். உழைப்பே தெய்வ வணக்கம். மக்கட்கு ஆற்றும் ஊழியம் மேலான ஊழியம். மக்கட்கு உற்றுழி உதவுதலே தெய்வத்தொண்டு. மக்கள் மீதுறும் அன்பே தெய்வ அன்பாகும். கருணை யென்பதும் அதுவே. இப்பெரிய வுண்மைகளை உணர மேலான கல்வி வேண்டும்.

4. அரசியலுரிமை பெறுவதற்கு அறிவு விளக்கம்வேண்டும். அறிவு விளங்குவதற்கு எழுத்தறிவு கொளுத்துஞ் சாலைகள் வேண்டும். அவற்றிற்குத் தக்க பாடங்களும் அமைக்கப்படவேண்டும். இப்பொழுது கல்விச் சாலைகளிற் கற்பிக்கப் படுவன பெரும் பாலும் பழைய புராணக் கதைகளேயாம். அவற்ருல் அடிமைத்தனம் அதிகரிக்கின்றது. மேல் கீழ் ஏற்படுகின்றன. இவற்றை யொழித்து நல்லறிவூட்டக் கூடியதும், மக்களில் ஐக்கியமுண்டாக்கக்கூடியதும், வருவாயை விசாலித்துவளத்தைப் பெருக்கக்கூடியதுமான கல்விப்பயிற்சியும் புத்தகங்களும் ஏற்படுத்தவேண்டும். ஒரேவிதமான பல்கலைக் கழகங்களைப் பெருக்குவதினும் பல்லாயிரம் முதற்படிப்புச் சாலைகளை எங்கும் பரப்புதல் பெரும் பயன் தரும். ஆந்திரப் பல்கலைக் கழகத்திற்கும் அண்ணுமலைப்பல்கலைக் கழகத்திற்கும் செலவாகும் பல இலக்ஷக்கணக்கான தொகையைக் கொண்டு பல்லாயிரம் பிரதம பாடசாலைகளை நாடெங்கும் ஏற்படுத்திச் சரியான முறையில் கல்வி பயிற்றுவிக்கப்படுமாயின் அக இருள் பறந்தோடும். நகரவுரிமை இஃதென்று மக்களால் உணரப்படும் சபைகளுக்குத் தக்கோரேதெரிந்தெடுக்கப்படுவர். இடம்பச்செலவு குறைவுபடும், வறுமையொழியும், முயற்சி பெருகும், ஐக்கியமுண்டாகும், நாடு முன்னேற்றமடையும், ஞாலத்தின் கணுள்ள நாடுகள் பலவற்றில் நம் நாடும் நடுநாயகமாக விளங்கும். குடிஅரசு உறும், இதனைக்காணுவது என்றாளோ? ஏழாண்டுகளில் குடிஅரசு பெறும் விதத்தைப் பாமர மக்களுக்கும் விளங்குமாறு கூறிப்பெருங்கிளர்ச்சியை யுண்டுபண்ணிவருவது வாரத்தாளாகிய குடிஅரசானல் யாம் மலையவேண்டுவதில்லை. அதுவிரைந்து மனமாசகற்றிச்சுய ஆட்சியை நல்குமென்பது திண்ணம்.

இராஜா சர் அண்ணுமலை தமிழ்வித்யாசாலை சிதம்பரம்.

இவ்வித்யாசாலையில் தமிழ் வித்வான் வகுப்பிற்கு சேர்ந்து படிப்பதற்கு ஆரம்பமாக உள்ள எண்ட்ரன்ஸ் வகுப்பு வைத்து நடத்தப்படுகின்றது. தமிழ்எண்ட்ரன்ஸ் பரீட்சைக்குரிய பாடங்களோடு சம்ஸ்கிருதமும், ஆங்கிலம் சரித்திரம் முதலிய பொது அறிவிற்குறிய பாடங்களும் கற்பிக்கப்படும். இருபது மாணவர்கள்வரையிலும் சேர்த்துக்கொண்டு ஒவ்வொருவருக்கும் மாதம் (ஐந்துரூபாய்) உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுமென தலைமையாசிரியர் திரு. எ. பூவராகம் பிள்ளைஎழுதுகிருர்.

M.S.சித்தர்பார்மசி

எல்லா நோய்களுக்கும் மருந்துகளிருக்கின்றன. கேட்லாக் இனும்.

விஷமை. விஷநோய் எதுவானுலும் சரி 3 நாளில் தீரும்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவிற்பட்டி, S. I. R.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்		0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பஞ்சஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—0
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷை 2-ம பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
*குறள்	...	0—8—0
* இயற்கைமதம்	...	0—-—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
*, சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாபீஸ் செய்யப்படுவதால், அநேக வி. பி. கள் வாபீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*காளிமாபாவிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடயதெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
கிரேட்காட்டன் ரோடு,
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாச்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

வி. கண்ணன்,
சீமை எரு டிபோ,
காஞ்சீவரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
17 பாரிஸ் வெங்கிடாஜல
அய்யர் தெரு
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்
-கடைவீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. றங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினுயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குரிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்ளூர் Cant.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
துறையூர்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொளும்பு.

A. S. பரமசிவம்
34. காசிக் ஹவுஸ்
டிபன்சிகா ரோடு
ஹேவலக் டவுன்
கொளும்பு.

எட்வர்ட்பால்
திருமலரபுரம்.

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, சாசீபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள விலாசதாரர்களிடம் குடி அரசு பதிப்புபுஸ்தகங்களும் கிடைக்கும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

G. R. கணேசர் & Co.,
10|1 Cecil St.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

Visvanath Book depot,
9, Brickfield Rd.

R. S. Naidu,
86, Ampang St.

O. M. Ali Saiboo & Co,
27, Java Street

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,

South Indian Bookstore,
122, Pitty street, penang.

South Indian Trading Co,
Ipoh. Perok F. M. S.

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M. S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
இதன் வருடசந்தா ரூ. 4—0—0
அல்லது $. 2,25
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: S. குருசாமி B.A.
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு " 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமநாதபுரம் ஜில்லா.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்.

100 வேளை தாம்பர பற்பங்கள் சாப்பிட்டும் தீராத குஷ்டமெல்லாம் தீர்ந்து குணமாகி விட்டதென்று ஏராளமான நற்சாட்சிகள் வந்துகொண்டிருக்கின்றன.

சித்தா தைலம்

குஷ்டம், குறைநோய், குழிப்புண், கண்டமாலை, விஷ குஷ்டம், நீர் வடிதல், தோல் உரிதல், மூக்கடைப்பு, மூக்குபள்ளம், செம்மேகப் பற்றுகள், தடிப்பு, வீக்கம், சொரி, வெண் குஷ்டம், கருமேக ஊரல், கருங்குஷ்டம், கிரந்தி, சூலை, முடக்கு, குன்மம் முதலிய வியாதிகள் கண்டிப்பாய் தீரும். பந்தயம்போட்டு பரீக்ஷிக்கக்கூடியது. இதற்கு மேலான மருந்தே பார்க்கமுடியாது. 1 புட்டி ரூ. 5-8-0 அனுபானம் ரூ. 1-8-0 ஆக ரூ. 7.

விலாசம்:—கே. எஸ். பதி, வைத்தியசாலை பழனி, S I Ry

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடையவர்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. ஏழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள் திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியுமடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நீக்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாளால் வெளியிடப்பட்டது.